தமிழரசு
அக்டோபர் 1–31, 2001



இந்த இதழில்...

★ மழைநீர் சேகரிப்பு அரசின் செயல் திட்டம் 2

★ பண்டைய தமிழரின் அயல்நாட்டுத் தொடர்புகள் 9

★ நெடுஞ்சாலைத்துறை 17

★ சிறுபாசனத் திட்டங்கள் 19

★ செக்கிழுத்த செம்மலுக்கு மணிமண்டபம் 22

★ கைத்தறித்துறை 23

★ ஊட்டி 'டீ' 25

★ 1550 புதிய பேருந்துகள் 27

★ விழுப்புரம்–கடலூர் மாவட்டங்களில் குடிநீர் – சுகாதாரம் 29

★ பதிவுத்துறை 32

★ உணவுத்துறை 33

★ வீட்டு மருத்துவம் 34

★ பொம்மைக் கண்காட்சி 36

★ பெண்மை வாழ்க என்று கூத்திடுவோமடா! 37

★ புதிய அமைச்சரவை பதவி ஏற்பு 38

★ மருதுபாண்டியர் 200வது ஆண்டு நினைவு நாள் 39

★ பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் பிறந்த நாள் 42

★ பாரதிதாசன் அஞ்சல் தலை வெளியீட்டு விழா 43

★ தமிழ்நாட்டில் உலக சாதனை 45

★ புவி 49

★ மின் விபத்தைத் தவிர்க்க 56

★ மழைநீர் சேகரிப்பு முறைகள் 57

★ சத்தியத்திற்கு உயிர் கொடுத்த சத்திய சீலர் 60

★ நீ வருவாய் என்று ? (சிறுகதை) 61

★ கூட்டுறவுத்துறை 64

★ நகர்ப்புற – ஊரக வளர்ச்சி 69

★ காந்தியடிகள் வாழ்வில் 74

★ விபத்துக்குள்ளானவர்களுக்கு உதவி 80

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2032

புரட்டாசி – ஐப்பசி

அக்டோபர் 1 – 31, 2001

மலர் : 33 இதழ் : 7 & 8

விலை : ரூ.10

முதல் பக்க அட்டையில்

காந்தியடிகள்

இரண்டாம் பக்க அட்டையில்

திருக்குற்றாலம்

கடைசிப் பக்க அட்டையில்

மழை நீர் சேகரிப்பு முறைகள்



மழைநீர் சேகரிப்பு

அரசின் செயல் திட்டம்

“வரப்புயர நீர் உயரும்” என ஔவைப் பிராட்டியும், “ஊருணி நீர் நிறைந்தற்றே,” “தொட்டனைத் தூறும் மணற்கேணி” என வள்ளுவப் பெருந்தகையும் நீரைச் சேமித்து பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றனர். ஊர் நடுவிலே உள்ள நீருணியில் நீர் நிறைந்தால் அவ்வூரின் கண் உள்ள அனைத்துக் கிணறுகளிலும் நீர் வரத்து உயரும் என வள்ளுவரும் தனது குறிப்பால் நீர் சேகரிப்பினை உணர்த்துகிறார். பண்டைய தமிழகத்து மன்னர்களும் தமது ஆட்சிக் காலங்களில் ஏரி குளங்கள் வெட்டுவதை ஒரு பெரும் சமூகத் தொண்டாக எண்ணினர்; கோவில்கள் தோறும் திருக்குளங்களை வெட்டி நீர் வளம் காத்தனர்; மாமன்னர் கரிகால் வளவனும் காவிரி நீரைத் தேக்கிக் கடலில் சென்று கலக்காமல் அணைகட்டி நீரை உபயோகிக்கும் வண்ணம் கல்லணையைக் கட்டினார். பல்லவ மன்னர்களும் பல ஏரிகளை வெட்டினர். மாமண்டூர் ஏரி இன்றும் நீரைப் பெருக்கி அவர் தம் புகழை நிலைநாட்டுவதாக உள்ளது. காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் தொன்று தொட்டே பல்லாயிரக்கணக்கில் ஏரிகள் மழை நீரைத் தடுத்து நிறுத்த அமைக்கப்பட்டுள்ளன. வியாபார நோக்கமாக இந்திய நாட்டிற்கு வந்த ஆங்கிலேயரும் தங்களுடைய ஆட்சிக் காலத்தில் நீரைத் தேக்கும் அணைகளையும், நீரைச் சேகரிக்கும் மற்றும் சுத்திகரிக்கும் நிலையங்களையும் கட்டி அனைவருக்கும் பயன் கிடைக்கும் முகமாக மலையில் இருந்து பெருகி ஓடும் நீரைப் படிப்படியாக ஏரிகளில் தேக்கிக் கடலில் நீர் கலந்து வீணாவதைத் தடுத்து நன்மை பயக்கும் விதமான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

தமிழ்நாட்டில் மழை பொய்க்கும் காலங்களில் வறட்சியால் வாடுவதும், மழை பெய்யும் காலங்களில் வெள்ளப் பெருக்கில் மக்கள் அவதிப்படுவதும் வருடந்தோறும் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளாகும். சென்னை நகரினைப் பொறுத்தமட்டிலுமே நகரின் 172 சதுர கிலோ மீட்டர் பரப்பில் வருடத்திற்கு சராசரியாகப் பெய்யும் 1200 மி.மீ. அதாவது சுமார் 206 மில்லியன் கன மீட்டர் தண்ணீர், கடலில் சென்று கலந்து வீணாகிறது. இத்தகைய நிகழ்வுகள் எதிர்காலத்தில் நிகழாமல் இருக்க, பருவமழைக் காலங்களில் மழைநீர்ப் பெருக்கினைத் தேக்கி பூமிக்குள் செலுத்தி வறட்சிக் காலங்களில் அதனை உபயோகப்படுத்தும் ஒரு மாபெரும் திட்டமாக தமிழக அரசு மழைநீர்ச் சேகரிப்புத் திட்டத்தைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

மேதகு ஆளுநர் உரையில் .....

மேதகு ஆளுநர் சட்டமன்றப் பேரவைத் துவக்க உரையில் "நீர் ஆதாரத்தை மேம்படுத்தவும், நிலைப்படுத்தவும் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தார்கள்.

நிதி நிலை அறிக்கையில் .....

தமிழக அரசின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலும் "மாநிலத்தில் குறைந்து கொண்டே வரும் மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் மட்டங்களை உயர்த்துவதில் மழை நீர் சேகரிப்பின் பயன்களை இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது. கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் அமைக்கத்தக்க பொருத்தமான மழை நீர் சேமிப்பு அமைப்புகள் (Rain Water Harvesting Structures) குறித்து பெரிய அளவில் விழிப்புணர்வு இயக்கங்களை நடத்தி தகவல்களைப் பரப்ப இவ்வரசு உத்தேசித்துள்ளது. தனியார், பொது மற்றும் அரசுக்கு கட்டடங்கள் அனைத்திலும், கட்டடங்களின் மேல்தளங்களில் விழும் மழை நீரைச் சேமிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு தற்போதைய நகரமைப்புத் திட்ட விதிமுறைகள் தக்கவாறு திருத்தி அமைக்கப்படும்" என்றும் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திர தின உரையில் .....

"கடந்த சில ஆண்டுகளாகவே, போதுமான மழையின்மை காரணமாகவும், முறையற்ற வகையில் நிலத்தடி நீர், வீணாக்கப்படுவதாலும், தற்போது பாசனத்திற்கும், குடிநீருக்கும், மக்களின் பிற அன்றாடத் தேவைகளுக்கும், கடுமையான தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, சிறுபாசன ஏரிகள், திருக்கோவில் குளங்கள், சமுதாயக் கிணறுகள் ஆகியவை, முறையாக பராமரிக்கப்படாததாலும், மழை நீர் சேமித்தல் போன்ற, நீர் மேலாண்மைப் பணிகள், முறைப்படி மேற்கொள்ளப்படாததாலும், இத்தகைய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, நீர் வளத்தினை மேம்படுத்தி, மக்களின் அனைத்துத் தேவைகளுக்கும், எப்போதும் தட்டுப்பாடின்றி, நீர் போதிய அளவு கிடைப்பதற்கு, வழிவகை செய்வதற்கு ஏதுவாக, புதிதாக, "நீர் வளப் பாதுகாப்புத் துறை" (WATER RESOURCES CONSERVATION DEPARTMENT) ஒன்றினை உருவாக்க, அரசு முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

"மழை நீரைச் சேமிப்பதற்கு முக்கியத்துவம் தரப்படும். கிராமப் புறங்களிலும், நகரங்களிலும் உள்ள ஏரிகள், கோயில் குளங்கள், மற்றும் நீர் நிலைகளில், உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, அவற்றின் கொள்ளளவை மேம்படுத்தி, அவை சிறந்த மழை நீர் சேமிப்பு இடங்களாக விளங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்."

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொள்கைக் குறிப்பு உரையில்: -

ஒரு மாபெரும் மழை நீர் சேகரிப்பு/ நீர் செறிவூட்டல் திட்டம் ஒன்று விஞ்ஞான

அடிப்படையில் முறையாக உருவாக்கப்படும். இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது, சுற்றுச்சூழல், நிலத்தடி நீர் வள மேம்பாடு, மேலும் பெருகி வரும் ஊரக / நகரக மக்களின் குடிநீர்த் தேவை இவற்றை நிறைவேற்றுவதிலும் இத்திட்டம் முக்கிய பயனளிக்கும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் புரட்சிகரமான செயலாக்கத் திட்டம்

நமது மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பொறுப் பேற்றுக் கொண்டவுடன் நடத்திய ஆய்வுக் கூட்டத்தில் மழை நீர் சேகரிப்புத் திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தி இதன் தொடர்பான

ஆகிய இடங்களில் நீர்த்தேக்கங்களைக் கட்டுதல்;

4. கூவம், அடையார், பாலாறு, காவேரி, கொரட்டலையார் ஆகியவற்றில் தடுப் பணைகள் கட்டுதல்;

5. மற்றும் மழை நீர் சேகரிப்பு தொடர்பான அனைத்து செய்திகளையும் கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்குப் புகட்டுதல்

6. மழை நீரைச் சேகரிக்க முனைவோருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்தல் ஆகியவை இவற்றுள் அடங்கும்.



திட்டப்பணிகளை உடனடியாகச் செயல் படுத்துமாறு ஆணையிட்டார்கள். அதன்படி

சென்னையைச் சுற்றியுள்ள ஏரிகளில் தூர் வாருதல், சீர் அமைத்தல் மற்றும் சென்னைக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் 2-ல் பல்வேறு மழை நீர் சேகரிக்கும் திட்டங்களையும் அறிவித்தார்கள்.

ரெட் உறில்ஸ், மாதவரம், இரட்டை ஏரி, அம்பத்தூர் ஏரி ஆகியவற்றை ஆழ அகலப்படுத்துதல், தூர் வாருதல்;

பள்ளிக்கரணை, ஜமீன் கொரட்டூர், திருநீர்மலை, திருத்தண்டலம், இராமன்சேரி

துறையின் செயல்திட்டங்கள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை சிரமேற்கொண்டு மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை அனைத்து மக்களும் உணரும் வண்ணம் செயல்திட்டம் வகுக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. குடிநீர் வடிகால் வாரியமும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியமும் இணைந்து தகவல் மையம் ஒன்றினையும் மற்றும் மழை நீர் சேகரிப்புக்கென தனி சிறப்புப் பிரிவுகளையும் 31.7.2001 முதல் ஏற்படுத்தி அதன்வழி மழை நீர்

சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு செயல்படுத்தப்படுகிறது. இவற்றின் மூலம் ஆயிரக்கணக்கான மக்கள் மழை நீர் சேகரிப்பு குறித்து அறிந்து சென்று தங்கள் இல்லங்களில் மழை நீர் சேகரிப்பு அமைப்பினை ஏற்படுத்தியுள்ளனர்.

2. சென்னை மாநகராட்சி 337 இடங்களை நீர் தேங்கும் இடங்களாகத் தேர்ந்தெடுத்து மேற்படி இடங்களில் மழை நீர் சேகரிப்பு அமைப்பினை அமைத்துள்ளனர். மேற்படி அமைப்பினை சில இடங்களில் செயல்படுத்த தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் உதவி புரிகின்றன. இதனால் வெள்ளச் சேதம் ஏற்படாமல் தடுக்கப்படுவதோடு மழை நீர் கடலில் சென்று வீணாகாமல் நிலத்தடியில் சேமிக்கப்படுகின்றது.

3. மாநகராட்சிக்குச் சொந்தமான அலுவலகக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனைகள், சமுதாயக் கூடங்கள் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் சுமார் 1,147 அளவில் உருவாக்கப்பட்டுள்ளன. மேற்காணும் இப்பணிக்கு சுமார் ரூபாய் 40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. தமிழ்நாடு முழுவதும் உள்ள குடிநீர் வடிகால்வாரியத்தைச் சேர்ந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், நீராதாரப் பகுதிகள், ஆழ்துளைக் கிணறுகளைச் சுற்றியும் மற்றும் புதிதாக அமைக்கப்பட உள்ள அனைத்து குடிநீர் திட்டப் பணிகளிலும் போர்க்கால அடிப் படையில் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன.

5. தமிழ்நாட்டில் ஏனைய மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகிய அனைத்து இடங்களிலும் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் பற்றிய தகவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகவல் நிலையங்கள் மூலம் மழை நீர் சேகரிப்பு குறித்த அனைத்து விவரங்களையும் அனைத்து தரப்பு மக்களும் பெற இயலும்.

6. அனைத்து அரசு அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள், வீட்டுவசதி வாரிய குடியிருப்புகள், குடிசைமாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் பொதுப்பணித்துறை குடியிருப்புகள், இரயில்வே குடியிருப்புகள், அனைத்து கல்வி நிறுவனங்கள், போன்ற பல்வேறு பொது இடங்களில் மழை நீர் சேகரிப்பு அமைப்பினை அமைக்க அரசால் அறிவுறுத்தப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன.

7. முதற்கட்டமாக சென்னையில் மேதகு ஆளுநர் மாளிகையிலும், தலைமைச் செயலக வளாகத்திலும், எழிலகம், பொதுப்பணித்துறை அலுவலக வளாகம், சர் பிட்டி. தியாகராயர் அரங்கு மற்றும் அனைத்து மாநகராட்சி பூங்காக்களிலும் மேற்படி மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

8. அரசு பராமரிக்கும் நீச்சல் குளங்கள், மேம்பாலங்கள், இரயில் நிலையங்கள் ஆகிய இடங்களிலும் மழை நீரை சேகரிக்க





ஏற்கெனவே உள்ள கட்டடங்களில் நிறுவவும் மற்றும் அதன் விதிமுறைகளைப் பற்றி அறிவுறுத்தவும் பல்வேறு கருத்தரங்குகளும், கண்காட்சிகளும் துறைச் செயலர் அவர்களால் நடத்தப்படுகின்றன.

2. மேலும் அலுவலர்கள், கட்டுமான பொறியாளர்கள், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் பணிபுரியும் வரைவாளர்கள், தனியார் கட்டுமான உரிமையாளர்கள் ஆகியோருக்கும் கருத்துப் பட்டறைகள் நடத்தப்பட்டன.

3. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட ஆட்சியாளர்களால் மழை நீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பெற்றுள்ளன.

4. அனைத்து கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கும், பொறியியல் பட்டதாரி மாணவர்களுக்கும் மழை நீர் சேகரிப்பு குறித்த திட்டமும் அதன் வடிவமைப்பு குறித்த செயல்திட்டங்களும் விவரிக்கப் பட்டுள்ளன.

5. மழை நீர் சேகரிப்பு முறைகள் பற்றி அதிக அளவில் பொதுமக்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தாலும், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தாலும் மழைநீர் குறித்த இரண்டு புதிய இணைய தளங்கள் (Website) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

__Website:__

www. aboutrainwaterharvesting.com
www.chennaimetrowater.com

படிப்படியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

9. மேலும் தமிழ்நாட்டின் இதரப் பகுதிகளில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அனைத்து தலைமைப் பொறியாளர் அலுவலகங்கள், மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்கள் ஆகிய 20 இடங்களில் மழை நீர்களில் மழை நீர் சேகரிப்புத் தகவல் மையங்கள் சுமார் ரூபாய் 5 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

கருத்தரங்குப் பட்டறை மற்றும் கண்காட்சிகள்

1. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் முகமாக புதிதாக கட்டப்படும் கட்டடங்களில் மழை நீர் சேகரிப்பு திட்டத்தைக் கொண்டு வரவும்,

6. வாரந்தோறும் - மழைநீர் சேகரிப்பு திட்டச் செயலாக்கங்கள் குறித்து தலைமைச் செயலகத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் அவர்களால் ஜூலை 2001 முதல் ஒவ்வொரு திங்கட்கிழமை தோறும் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாய்வுக் கூட்டங்களில் தொடர்புடைய அரசு துறை அலுவலர்கள், அரசு சாரா சேவை நிறுவனங்கள், பொறியாளர்கள், நீர் வள வல்லுநர்கள் ஆகியோர் பங்கேற்று ஒவ்வொரு வாரமும் செய்ய வேண்டிய நீண்ட கால மற்றும் குறுகிய கால திட்டங்கள் குறித்தும், செய்யப்பட்டுள்ள செயல்பாடுகள் குறித்தும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்படுகின்றது.

மழை நீர் சேகரிப்பு தொடர்பான அங்கீகாரம்:

1. சென்னை மாநகரில் கட்டப்படும் அனைத்துக் கட்டடங்களும் மழை நீர் சேகரிப்பு அமைப்பைக் கொண்டிருந்தால் மட்டுமே, அவைகளைக் கட்ட ஒப்புதல் வழங்கப்படும்.

2. 1996-ல் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மழை நீர் சேகரிப்பு அமைப்பு சம்பந்தமான அறிவிக்கையை வெளியிட்டுள்ளது. அதனையே சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியமும் வலியுறுத்தியுள்ளது.

3. தற்பொழுது நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் கட்டடம் கட்ட அனுமதி வழங்க மழை நீர் சேகரிப்பு அமைப்பு வரைபடத்தில் இருந்தால் மட்டுமே அனுமதி அளிக்கப்படும் என தெரிவித்துள்ளது.



மழை நீரை சேகரிப்பதன் அவசியமும், நன்மையும்

★ குடிநீரின் உவர் நீர்த் தன்மை, அமிலத் தன்மை நைட்ரஜன், புளோரைட் ஆகியவற்றின் தன்மையைக் கட்டுப்படுத்தி நன்னீராக்குதல்.

★ கட்டடங்களின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்தல்.

★ பூமியில் நன்னீரின் அளவினை அதிகப்படுத்துதல்.

★ நீராதாரங்களில் நீர் வற்றாமல் இருத்தல் ஆகியவை பொது நன்மையாகும்.

★ மழை நீர் சேகரிப்பு திட்டம் போர்க்கால அடிப்படையில் செயலாக்கப்பட்டு வருவதன் காரணமாக சென்னை மாநகரைப் பொறுத்தவரை கடல் நீர் ஊடுருவலின் காரணமாக கிணறுகள், ஆழ்துளைக் குழாய்கள் ஆகியவற்றில் பெறப்படும் நீரின் உப்புத்தன்மை படிப்படியாகக் குறைந்துள்ளது என்பது வெள்ளிடைமலை.

★ மேலும் கடற்கரை ஒட்டியுள்ள மீஞ்சூர் பகுதியில் நிலத்தடி நீரின் தன்மை முன்பு லிட்டருக்கு சுமார் 40,000 மில்லி கிராம் அளவிலிருந்த தன்மை தற்பொழுது லிட்டருக்கு சுமார் 13,000 மில்லி கிராமாகக் குறைந்துள்ளது.

முடிவுரை:

மழை நீர் சேகரிப்பு திட்டம் ஒரு மக்களுக்கான மக்கள் திட்டம். அன்னை பூமியின் மனதைக் குளிர வைக்கும் அற்புத திட்டம். நீர் உயர நிலம் செழிக்கும். நிலம் செழித்தால் பயிர் செழிக்கும். பயிர் செழித்தால் நாடு செழிக்கும். ஆகவே தமிழ் நாட்டின் வளம் பெருக மக்களுக்காக மக்களால் செயல்படுத்தப்படும் திட்டத்தை நாளும் போற்றுவோமாக!

★ ★ ★

ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மழை நீர் சேகரிப்பு தொடர்பாக நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்:-

- தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து துறையின் பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் உள்ள அரசு கட்டடங்களில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உடனடியாக உருவாக்க வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது.

- தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்புகள் மற்றும் குடிசைமாற்று வாரிய குடியிருப்புகள் ஆகிய அனைத்திலும் இத்தகைய மழை சேகரிப்பு கட்டமைப்பு செய்து தரப்பட வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளார்.

- குடிசைப் பகுதிகளைப் பொறுத்தமட்டில் மழைநீர் சேகரிப்பதற்கு உரிய உதவிகளை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் செய்துதர வேண்டுமென்றும் பணித்தார்.

- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு முறையைப் போன்று செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

- சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூலமாக வழங்கப்படும் அனைத்து புதிய கட்டடங் களுக்கான வரைவு உரிமங்கள், மழை நீர் சேகரிப்பு அமைப்பைக் கொண்டிருந்தால் மட்டுமே ஒப்புதல் வழங்கப்படுவதைப் போன்றே அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகிய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டு மென்று முடிவு செய்யப்பட்டது.

- சென்னை மாநகராட்சியில் சுமார் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை மாநகராட்சியில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான அலுவலகக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனைகள், சமுதாயக் கூடங்கள் ஆகிய 1147 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன. சென்னை மாநகராட்சி 337 இடங்களை நீர் தேங்கும் இடங்களாக தேர்ந்தெடுத்து மேற்படி இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. இதனால் வெள்ளச் சேதம் சிறிதளவு தடுக்கப்படுவதோடு மழை நீர் கடலில் சென்று வீணாகாமல் நிலத்தடியில் சேமிக்க வழிவகை ஏற்படும்.

- ரெட்ஹில்ஸ், இரட்டை ஏரி, அம்பத்தூர் ஆகிய ஏரிகளை ஆழ அகலப்படுத்துதல், தூர்வாரும் பணிகளைத் துரிதமாக்க முடிவெடுக்கப்பட்டது.

- புயல், வெள்ள பாதிப்பு ஏற்படாமல் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக் கைகளை மேற்கொள்ளுமாறும் வீணாக கடலுக்குச் செல்லாமல் மழை நீரை நிலத்தடியில் சேமிப்பதற்கு உரிய வழிமுறைகளைக் கடைபிடிக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வலியுறுத்தப்பட்டது.

- கிராமப் பகுதிகளைப் பொறுத்தவரையில் செயற்கைக்கோள் வரைபடத்தில் கண்டுள்ளவாறு நீரை சேமிக்கக் கூடிய இடங்களைக் கண்டறிந்து அதனை உடனடியாக தொடர்புள்ள அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டது. ஏற்கெனவே, முடிவெடுத்தபடி, "நீர்வளப் பாதுகாப்புத்துறை" ஒருமாத காலத்திற்குள் உருவாக்கப்பட்டு இப்பணியினை துரிதமாகச் செயல்படுத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

பண்டைய தமிழரின் அயல் நாட்டுத் தொடர்புகள்

'திரைகடலோடியுந் திரவியம் தேடு' என்பது ஒரு மூதுரை. காலத்தால் பிற்பட்டதாயினும் பழந்தமிழரின் வாழ்க்கைப் பண்பாடுகளுள் ஒன்றை இது தெற்றென விளக்குகின்றது. பண்டைத் தமிழர்கள் சோம்பித் திரிந்தவர்கள் அல்லர்; உழைத்து உழைத்து வாழ்க்கையில் இன்பங் காணுவதிலேயே கண்ணுங் கருத்துமாய் விளங்கியவர்கள். அவர்கள் மலைகளுடனும், காடுகளுடனும், கடலுடனும் கலந்து உறவாடினார்கள். மேற்கே கிரீஸ், ரோம், எகிப்து முதல் கிழக்கே சீனம் வரையில் கடலோடிப் பிழைத்தார்கள். எகிப்து, பாலஸ்தீனம், மெசப்பொடோமியா, பாபிலோனியா ஆகிய நாடுகளுடன் பண்டைத் தமிழர்கள் வாணிகத் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தனர். தமிழகத்துப் பண்டங்களான ஏலம், இலவங்கம், இஞ்சி, மிளகு ஆகியவற்றுக்கு மேற்காசிய நாடுகளில் பண்டைய நாட்களிலேயே வேட்கையுண்டு. யூதர்களின் ஆதி சமயத் தலைவரான மோசஸ் என்பார் தாம் நிகழ்த்தி வந்த இறைவழிபாட்டில் ஏலக்காயைப் பயன்படுத்தினார் எனப் 'பழைய ஏற்பாடு கூறுகின்றது. மோசஸ் கோயில் கட்டி வழிபாடு செய்தது கி.மு.1490–இல் என்பர். தென் அராபிய நாட்டு அரசி ஷேபா என்பாள், இஸ்ரேலின் மன்னன் சாலமனைக் காணச் சென்றபோது ஏலம், இலவங்கம் போன்ற நறுமணப் பண்டங்களைக் கையுறையாகக் கொண்டு போனதாகவும் பழைய ஏற்பாட்டில் ஒரு குறிப்புக் காணப்படுகின்றது. சாலமன் ஆண்ட காலம் கி.மு.1000 என்று அறுதியிட்டுள்ளனர். இவருடைய காலத்தில் டயர் நாட்டு மன்னர் ஹிராம் என்பாரின் ஏவலின்கீழ் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை சில மரக்கலங்கள் கீழை நாடுகளுக்குப் பாய்விரித்தோடிப் பொன், வெள்ளி, தந்தம், குரங்குகள், துகிம் (தோகை அதாவது மயில் தோகை), ஆல்மக் (அகில் மரங்கள்) விலையுயர்ந்த இரத்தினங்கள் ஆகிய சரக்குகளை ஏற்றிக்கொண்டு வந்தனவாம். சாலமன் மன்னனுக்கு அளிக்கப்பெற்ற மதிப்பிறந்த இப் பண்டங்களின் பெயர்கள் யாவும் தமிழ்ப் பெயர்களின் சிதைவுகளே என்பதில் ஐயமில்லை. இப் பொருள்கள் அனைத்தும் பண்டைய தமிழகத்தின் சேர நாட்டுத் துறைமுகங்களினின்றும் ஏற்றுமதியாகியிருக்க வேண்டும்.

தமிழகத்துக்கும் பாபிலோனியாவுக்குமிடையே மிக விரிவான வாணிகம் நடைபெற்று வந்ததற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. பாபிலோனியாவில் நிப்பூர் என்ற

இடத்தில் முரஷு என்பவரும் அவர் மக்களும் நடத்தி வந்த காசு வாணிகத்தில் கணக்குப் பதியப்பட்ட களிமண்ணேடுகள் சிலவற்றில் பாபிலோனியர் தமிழக வணிகருடன் கொண்டிருந்த பற்று வரவுகள் குறிக்கப்பட்டுள்ளன. அதே காலத்தில் தமிழ் வணிகர்கள் பாபிலோன் நகரத்தில் குடியேறி அங்கேயே தங்கித் தம் தொழிலை நடத்தி வந்ததற்கும் இவ்வேடுகள் சான்று பகர்கின்றன.

தமிழகத்துக்கும் எகிப்துக்குமிடையே ஏற்பட்டிருந்த வாணிகத் தொடர்பு மிகப் பழமையானதாகும். அது எப்போது தொடங்கியிருக்கும் என்னும் கேள்விக்குப் பலவாறான விடைகள் அளிக்கப்படுகின்றன. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட 'எரித்திரியக் கடலின் பெரிப்ளூஸ்' (Periplus of the Erithraean Sea) என்னும் நூலை டபிள்யூ.எச். ஸ்காபி என்பார் பதிப்பித்துள்ளார். தம் பதிப்புரையில் அவ்வாசிரியர் 'கிரேக்க மக்கள் அநாகரிகத்தினின்றும் விழித்தெழுவற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே எகிப்தும் பண்டைய இந்திய நாடுகளும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தன. பாரசீக வளைகுடாவின் வடபால் இந்நாடுகள் ஒன்றோடொன்று பண்டமாற்றுச் செய்து கொண்டன' என்று கூறுகின்றார். பண்டைய தமிழகத்திலிருந்து ஏற்றுமதியான பண்டங்களுள் சிறப்பானவை மஸ்லின் துணியும், ஏலம், இலவங்கம் போன்ற நறுமணப் பண்டங்களுமாம். தமிழக வணிகர்கள் இச் சரக்குகளை மரக்கலங்களில் ஏற்றிச் சென்று ஏடன் வளைகுடாவுக்கு இருபுறமுள்ள துறைமுகங்களில் இறக்கினர். பினீஷியர் அல்லது அராபியர் அச்சரக்குகளை அவ்விடங்களில் தம் வசம் ஏற்றுக்கொண்டு எகிப்துக்கு எடுத்துச் சென்றனர். எகிப்தின் பதினேழாம் அரசு பரம்பரையினர் காலத்தில் (கி.மு.1500–1350) அந் நாட்டில் இறக்குமதியான சரக்குகள் பல தந்தத்தினால் கடையப்பட்டவை என அறிகின்றோம். இவற்றில் சில தென்னிந்தியாவினின்று தான் ஏற்றுமதியாயிருக்கவேண்டும். தென்னிந்தியாவுக்கும் சுமேரியாவுக்குமிடையில் கி.மு.நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாணிகப் போக்குவரத்து நடைபெற்று வந்ததென்று சேஸ் (Sayce) என்பார் தம் ஹிப்பர்ட் சொற்பொழிவுகளில் (1887) குறிப்பிட்டுள்ளார்.

> **வ**ற்றாது வளங்கொழிக்கும் ஆறுகளைக் கொண்டோ, வானோங்கிய மலைகளைக் கொண்டோ ஒரு நாட்டை மதிப்பிட முடியாது; மக்களின் மனவளத்தைக் கொண்டே மதிப்பிட முடியும்.
>
> **- பேரறிஞர் அண்ணா**

சிந்துவெளி நாகரிகச் சின்னங்கள் கண்டுபிடிக்கப் படுவதற்குப் பல ஆண்டுகட்கு முன்பே இக் கருத்தை இவர் வெளியிட்டார். சிந்துவெளியாராய்ச்சிகள் தம் கூற்றை மெய்ப்பிக்கும் என்பதை அன்று அவர் அறியார். தாம் கொண்ட முடிவுக்கு இரு சான்றுகளை அவர் எடுத்துக் காட்டினார். ஒன்று, சுமேரிய மன்னரின் தலைநகரமான 'ஊர்' என்ற இடத்தில் சந்திர பகவானுக்கு எழுப்பிய கோயில் சிதைவுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்திய நாட்டுத் தேக்க மரத்தின் துண்டு ஒன்றும் அச் சிதைவுகளில் காணப்பட்டது. 'ஊர்' என்ற அவ்வூர் கி.மு. மூவாயிரத்திலேயே அழிந்து போய்விட்டதாகையால் அத் தேக்கமரத்துண்டின் வயதை ஐயாயிரம் ஆண்டுகளுக்குமேல் மதிப்பிடலாம். கேரள நாட்டிலிருந்து கி.மு. மூவாயிரத்து முன்னரே தேக்கமரம் ஏற்றுமதியாயிற்று என்று இதனால் அறிகின்றோம். இரண்டு பழங்கால உடைகளைக் குறிப்பிடும் பாபிலோனிய நாட்டுப் பட்டியல் ஒன்றில் மஸ்லின் என்னும் துணிவகையைக் குறிக்கும் 'சிந்து' என்னும் சொல் எழுதப்பட்டுள்ளது. மஸ்லின் என்பது மிகமிக நுண்ணிய துணிவகையாகும். அக் காலத்தில் மிக நுண்ணிய துணிவகைகள் தமிழகத்தில் நெய்யப்பட்டு வந்தன. இத்துணி தமிழகத்திலிருந்து பாபிலோனியாவுக்கு ஏற்றுமதியாகி இருக்க வேண்டும். சிந்து என்னும் சொல் தமிழில் கொடியைக் குறிக்கும். கொடி துணியாலானது. எனவே, இச்சொல் துணியையே குறிக்கலாயிற்று. கன்னடத்திலும் துளுவிலும் துணிக்குச் 'சிந்து' என்று பெயர் வழங்குவது குறிப்பிடத்தக்கது. இத் துகில் தமிழகத்திலிருந்து பாபிலோனியாவுக்குக் கடல் வழியாகத்தான் சென்றிருக்க வேண்டும். அன்றிப் பாரசீகத்தின் வழியாகச் சென்றிருக்க முடியாது. பாரசீக மொழியில் 'சி' என்னும் எழுத்தொலி 'ஹி' என்று மாறும். பாரசீகத்தின் வழியாக இத்துணி ஏற்றுமதியாகியிருந்தால் அதன் பெயர் 'ஹிந்து' என்று மாறியிருக்க வேண்டும். அப்படியின்றி அது பாபிலோனியாவில் 'சிந்து' என்றே வழங்கிற்று. எனவே, கேரளத்திலிருந்து துணியானது கடல் வழியாக நேராகவே பாபிலோனியாவுக்குச் சென்றது என்று ஊகிக்க வேண்டியுள்ளது. சிந்து என்னும் சொல்லுக்கும் சிந்து என்னும் ஆற்றின் பெயருக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை.

பண்டைய நாள்களில் தென்னிந்தியாவுக்கும் மடகாஸ்கருக்குமிடையே நெருங்கிய வாணிகத் தொடர்பு இருந்து வந்ததாகத் தெரிகின்றது. தென்னிந்தியர் பலர் வாணிகத்தின் பொருட்டாகவே மடகாஸ்கருக்குச் சென்று குடியேறினர். தம்முடைய முன்னோர் முன்னொருகாலத்தில் தென்னிந்தியாவில் மங்களூரினின்றும் குடிபெயர்ந்து மடகாஸ்கருக்கு வந்து தங்கிவிட்டார்கள் என்று அந்நாட்டு மக்கள் கூறிக்கொள்கிறார்கள். அந்நாட்டின் பழம் பெயர் 'மலே' என்பது, சமஸ்கிருத சொற்கள் கலந்த இந்தோனேசிய மொழியை மடகாஸ்கர் மக்கள் வழங்கி வருகின்றார்கள். தென்னிந்தியாவிலிருந்து மலேசிய நாடுகளுக்குச் சென்ற

வணிகர்களோ, அன்றி அவர்கள் வழி வந்தவர்களோ மலேசியாவைக் கைவிட்டுச் சென்று மடகாஸ்கரில் குடியேறினர் போலும்.

பண்டைய காலந்தொட்டே மேலை நாடுகளுடன் தமிழ் மக்கள் மிகவும் விரிவான கடல் வாணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். அயல்நாட்டு வாணிகம் கி.மு. ஏழாம் நூற்றாண்டிலிருந்துதான் தொடர்ந்து நடைபெற்றுவந்தது. தமிழகத்து ஏற்றுமதிச் சரக்குகளை அராபியரும், பினீஷியரும், எகிப்தியரும் தத்தம் மரக்கலங்களில் ஏற்றிக்கொண்டு சென்றனர்.

கிரேக்கர்கள் தமிழகத்துடன் வாணிகத்தில் இறங்கியது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான். இவ்வாணிகத்தின் மூலம் தமிழ்ச் சொற்கள் பல கிரேக்க மொழியில் நுழைந்து இடம் பெற்றுள்ளன. சொபோகிளீஸ், அரிஸ்டோபேனீஸ் முதலிய கிரேக்க அறிஞரின் நூல்களில் இவற்றைக் காணலாம். 'அரிசி' என்னும் தமிழ்ச் சொல் கிரேக்க மொழியில் நுழைந்து 'அரிஸா' என்று உருக்குலைந்தது. அம் மொழியில் கருவா (இலவங்கம்) என்னும் தமிழ்ச் சொல் 'கார்ப்பியன்' என்றும், இஞ்சி வேர் 'சின்ஞிபேராஸ்' என்றும், பிப்பாலி 'பெர்ப்பெரி' யாகவும் உருமாற்றம் அடைந்தன. இரு வேறு மொழிகளுக் கிடையே தோன்றும் சொற்கலப்புகளைக் கொண்டே அம்மொழி பேசும் நாடுகளுக்கிடையே நிலையான வாணிகத் தொடர்பு இருந்து வந்தது என்று உறுதியாகக் கூறமுடியாது. எனினும், அந்நாடுகள் ஒன்றோடொன்று கடல் வாணிகத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று ஒரு முடிவுக்கு வரலாம்.

தமிழகத்து நறுமணப் பொருள்களின் சுவையையும், ஏனைய ஏற்றுமதிப் பண்டங்களின் பெருமையையும் கிரேக்கர்களின் மூலமே ரோமாபுரி மக்கள் அறிந்து கொண்டனர். எனினும், கி.பி.முதலாம் நூற்றாண்டுவரையில் ரோமரின் வாணிகம் பெருமளவில் விரிவடையவில்லை. இக் கால வரம்புக்கு முற்பட்ட ரோம மன்னரின் நாணயங்கள் தமிழ்நாட்டில் இதுவரையில் கிடைக்கவில்லை என்பது அதற்கு ஒரு சான்றாகும். ரோமாபுரிச் சக்கரவர்த்தி அகஸ்டஸ் என்பார் கிமு.30–ல் எகிப்தை வென்று அதன்மேல் தம் ஆட்சியை நிலைநாட்டினார். இவ் வெற்றி எதிர்பாராத ஒரு நலனையும் அவருக்குப் பயத்தது. இதனால் அவருக்குத் தமிழகத்துடன் நேர்முக வாணிகத் தொடர்பு கிட்டியது. கிறித்தவ ஆண்டு தொடங்கிய பிறகு முதல் சில நூற்றாண்டுகளில் தமிழகத்துக்கும் ரோமாபுரிக்கும் இடையே கடல் வாணிகம் பெருமளவுக்கு வளர்ந்து வரலாயிற்று. இதற்குப் பல சான்றுகள் உள. ரோமாபுரிச் சக்கரவர்த்தி அகஸ்டஸின் உடன்காலத்தவர், ஸ்டிராபோ (Strabo) என்ற நூலாசிரியர். இவர் பூகோள நூல் ஒன்றை எழுதியுள்ளார். 'எரித்திரியக் கடலின் பெரிபுளூஸ்' (Periplus of the Erithraean Sea) என்று அழைக்கப்படும் வேறொரு வரலாற்று நூலும் (கி.பி.60) கிடைத்துள்ளது. இதன் ஆசிரியர் இன்னார் எனத் தெரியவில்லை. பிளினி என்பார் உயிரியல் நூல் ஒன்றையும் (கி.பி.70). தாலமி பூகோள நூல் ஒன்றையும் எழுதிவைத்துள்ளனர். இந் நூல்களில் பண்டைய தமிழகத்தின் கடல் வாணிகத்தைப் பற்றிய சான்றுகள் பல காணப் படுகின்றன. பழந்தமிழரின் வாழ்க்கை முறைகளை விளக்கும் செய்திகள் சங்க இலக்கியங்களில் மலிந்து கிடைக்கின்றன. இவை அச் சான்றுகளால் மெய்ப்பிக்கப்படுகின்றன. புதுச்சேரிக்கு அண்மையில் உள்ள அரிக்கமேடு என்னும் இடத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின் மூலம் பல வகையான புதைபொருள்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் சிறப்பானவை ரோமாபுரியின் நாணயங்கள். பழந்தமிழகத்துடன் ரோமாபுரி மேற்கொண்டிருந்த கடல் வாணிகத்தின் விரிவை இந் நாணயங்கள் எடுத்துக்காட்டுகின்றன. ரோமாபுரி ஆசிரியர்கள் எழுதிய நூல்களின் வாயிலாகத் தமிழகத்தின் துறைமுகங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளுகின்றோம். அவற்றில் பல துறைமுகங்களின் பெயர்கள்



உருக்குலைந்து காணப்படுகின்றன. சேரநாட்டுத் துறைமுகப் பட்டிணங்களான 'தொண்டியைத் திண்டிஸ்' என்றும், முசிறியை முஸிரிஸ் என்றும், பொற்காட்டைப் பகரி என்றும், குமரியைக் கொமாரி என்றும் ரோமர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவற்றைப் போலவே, தமிழகத்தின் கீழைக் கடற்கரைத் துறைமுகங்களான கொற்கையைக் கொல்சாய் என்றும், நாகபட்டினத்தை நிகாமா என்றும், காவிரிபூம்பட்டினத்தைக் கமரா என்றும், புதுச்சேரியைப் பொதுகே என்றும், மரக்காணத்தைச் சோபட்மா என்றும், மசூலிப்பட்டினத்தை மசோலியா என்றும் அந் நூல்கள் குறிப்பிடுகின்றன. சேரநாட்டுத் துறைமுகங்கள் அனைத்தும் கண்ணனூருக்கும் கொச்சிக்குமிடையில் அமைந்திருந்தன. அரேபியாவிலிருந்தும் கிரீஸி லிருந்தும் வாணிகச் சரக்குகளை ஏற்றிக்கொண்டு வந்த எண்ணற்ற நாவாய்கள் முசிறியில் செறிந்து கிடந்தனவென்று பெரிபுளூஸ் கூறுகின்றது. வைகாசி மாதந் தொடங்கி மூன்று நான்கு மாதங்கள் வரையில் சேரநாட்டுக் கடற்கரையின்மேல் வந்து மோதும் தென்மேற்குப் பருவக்காற்றை முதன்முதல் கண்டறிந்தவர் ஹிப்பாலஸ் (கி.பி.45) என்ற கிரேக்கர் எனக் கூறுவர். இக் காற்றோட்டத்தினூடே பாய்விரித்தாடுங் கப்பல்கள் வெகு விரைவாகவும், கட்டுக் குலையாமலும் சேரநாட்டுத் துறைமுகங்களை அடையமுடியும் என்ற உண்மையை ஐரோப்பிய மாலுமிகள் அறிந்துகொண்டனர். இப் பருவக்காற்றின் துணைகொண்டு வாணிகச் சரக்குகள் ஏற்றிய பெரிய பெரிய மரக்கலங்கள் கடல்களின் நடுவில் பாய்விரித்தோடித் தமிழகத்தின் மேலைக்கரைத் துறைமுகங்களையடைந்து நங்கூரம் பாய்ச்சின. தென்மேற்குப் பருவக்காற்றின் பயனைத் தெரிந்துகொள்ளும் முன்பு வாணிகர்கள் சிறு சிறு படகுகளில் பண்டங்களை ஏற்றிக் கொண்டு கரையோரமாகவே ஊர்ந்து வந்து நீண்ட நாள் கழித்துச் சேரநாட்டுத் துறைமுகங்களையடைவது வழக்கம். அந்தத் தொல்லை இப்போது ஒழிந்தது. நெடுங்காலந் தாழ்ந்து போனால் பல பண்டங்கள் கெட்டுபோகும் என்ற அச்சமும் கவலையும் அவர்களை விட்டுச் சுழன்றது.

தமிழகத்துடன் ரோமர்கள் மேற்கொண்டிருந்த வாணிகம் அவர்களுடைய பேரரசரின் ஆதரவின்கீழ்ச் செழிப்புடன் வளர்ந்து வந்தது. இவ் வாணிகத்தின் வளர்ச்சியில் பேரரசர் அகஸ்டஸும் பேரூக்கங் காட்டினார். ஆர்மஸ் (Hormuz) துறைமுகத்திலிருந்து ஏறக்குறைய நூற்றிருபது மரக்கலங்கள் பாய்விரித்தோடியதைத் தாம் நேரில் கண்டதாக ஸ்டிராபோ கூறுகின்றார். பாண்டிய மன்னன் ஒருவன் தன் தூதுவர் இருவரைத் தன் அரசவைக்கு அனுப்பி வைத்ததாக அகஸ்டஸ் என்ற ரோமாபுரிப் பேரரசரே கூறுகின்றார். ரோமாபுரியுடன் தமிழகம் மேற் கொண்டிருந்த கடல் வாணிகம் காலப்போக்கில் பல மாறுதல்களுக்கு உட்பட்டது. ரோமாபுரிப் பேரரசின் ஆட்சி முடிவுற்ற பின் ரோமரின் வாணிகம் தமிழகத்தில் மட்டுமின்றி மசூலிப்பட்டினத்திலும், ஒரிஸ்ஸா கடற்கரையிலும் பரவலாயிற்று. ரோமாபுரி நாவாய்கள் அங்கெல்லாம் நங்கூரம் பாய்ச்சின.



இருட்டில் நீ எப்படி நடந்து கொள்ளுகிறாய் என்பதில் தான் உனது உண்மையான குண அழகு விளங்கும்.

- டிவிட்டூடி

ரோமர்கள் மட்டுமின்றிக் கிரேக்கரும், சிரியரும், யூதரும் தமிழகத்துடன் வாணிகத் தொடர்பை வளர்த்துக் கொள்ளலானார்கள். தமிழகத்தில் ரோமாபுரி மக்கள் குடியேறி வாழ்ந்துவந்த இடங்களிலெல்லாம் அவர்களும் இணைந்து வாழலானார்கள். அவர்களுள் பலர் தமிழகத்திலேயே நீண்டகாலம் தங்கிவிட்டனர். அப்படித் தங்கியிருந்தவர்களிடமிருந்தே தமிழகத்தினைப்பற்றிய செய்திகளைத் தாம் கேட்டறிந்ததாகப் பிளினி கூறுகின்றார். வாணிகம் விரிவடைய விரிவடையத் தமிழ்நாட்டிலேயே குடியேறிவிட்ட ரோமாபுரியினரின் தொகையும் வளர்ந்து வந்தது. அவர்களுடைய சேரி ஒன்று மதுரை மாநகருடன் இணைந்திருந்ததாகத் தெரிகின்றது. அவர்கள் வழங்கி வந்த பொன், வெள்ளி நாணயங்களும், செப்புக் காசுகளும் இப்போது புதைபொருள் அகழ்வாய்வில் கண்டெடுக்கப் படுகின்றன. ரோமர்கள் தமக்குள் தாமே செய்துகொண்ட வாணிகத்தில் இந் நாணயங்களைப் பயன்படுத்திக் கொண்டனர் போலும். மதுரையில் ரோம நாணய அச்சுச்சாலை ஒன்று நடைபெற்றிருக்க வேண்டுமென ஊகிக்க வேண்டியுள்ளது. அகஸ்டஸ் பேரரசனின் கோயில் ஒன்று வழிபாட்டில் இருந்து வந்ததாகப் பியூட்டிங்கரின் அட்டவணைகளிலிருந்து அறிகின்றோம்.

ரோமாபுரியினரின் வாணிகம் ஓங்கி நின்றபோது அரிக்கமேடு என்னும் இடத்தில் அவர்களுடைய பண்டசாலையொன்றும், விற்பனைச்சாலையொன்றும் நடைபெற்று வந்தன. மத்தியதரைக் கடல் நாடுகளில் மக்கள் கையாண்ட மட்பாண்டங்களைப் போன்ற கலங்கள் அரிக்கமேட்டிலும் கிடைத்துள்ளன. ரோமாபுரியில் இறக்குமதியான சரக்குகளின் அளவு ஆண்டுதோறும் ஏறிக்கொண்டே போயிற்று, அதனால், ஆண்டு தோறும் 6,00,000 பவுன் மதிப்புள்ள ரோமாபுரித் தங்கம் தமிழரின் கைக்கு மாறிக்கொண்டே வந்தது. இவ்வளவு பெருந்தொகையில்; தம் நாட்டுச் செல்வம் வடிந்து வருவதைக் கண்டு வெருவிய ரோமாபுரி மக்களில் பலர் தமிழகத்துடன் நடைபெற்று வந்த வாணிகத்தையும்; தமிழகத்துப் பண்டங்களின்மேல் ரோமருக்கிருந்த ஆரா வேட்கையையும் வன்மையாகக் கண்டித்தனர்.

பேரரசன் நீரோ என்பவன் கி.பி.68–இல் காலமானான். அவனுக்குப்பின் விளைந்த அரசுரிமைப் போட்டியினாலும், அதனால் மூண்ட அரசியல் குழப்பத்தினாலும் ரோமர்கள் நவமணிகளையும், நுண்ணாடைகளையும் தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்துகொள்ளுவது குன்றிவரலாயிற்று. நீரோவையடுத்து வெஸ்பேஸியன் ரோமாபுரி'யின் பேரரசனாக அரியணை ஏறினான். தன்னைச் சுற்றியிருந்த பிரபுக்களின் செல்வச் செருக்கையும், வாழ்க்கை ஆடம்பரங்களையும் அவன் வெறுத்தான். அப்பிரபுக்களின் அளவுக்கு மீறிய இன்ப வாழ்க்கையை ஒடுக்கும் நோக்கத்துடன் பல சட்டங்களை இயற்றினான். தன் முயற்சிகளும் நிறைவேறக் கண்டான். ரோமாபுரிக் குடிமக்கள் மீண்டும் எளிய வாழ்க்கையில் ஈடுபடலானார்கள். வெஸ்பேஸியன் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக ரோமர்கள் தமிழகத்துடன் வைத்துக்கொண்டிருந்த வாணிகத் தொடர்பும் சுருங்கிவரத் தொடங்கிற்று. ரோமாபுரியில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு வெளியிடப்பட்ட நாணயங்கள் தமிழகத்தில் கிடைக்கவில்லை. இந்த ஒரு காரணத்தைக் கொண்டு ரோம வாணிகம் அறவே அற்றுவிட்டது என்று கொள்ளுவதற்கில்லை. ஏனெனில். தமிழகத்து மிளகும் துணி வகைகளும் ரோமாபுரிக்குத் தொடர்ந்து ஏற்றுமதியாகிக்கொண்டேயிருந்தன. விசிகாத்து மன்னன் கி.பி.410–இல் ரோமாபுரியைக் கைப்பற்றினான். அந்நகரத்துக்க் குடிமக்களின் மீது தண்டம் ஒன்று விதித்தான். ரோமர்கள் மூவாயிரம் பவுண்டு மிளகு தனக்குத் திறை செலுத்தவேண்டும் என்றும், தவறினால் தான் ரோமாபுரியை அழித்துவிடப் போவதாவும் மருட்டினான். ரோமர்கள் தம் நகரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு அம் மன்னன் கேட்ட அவ்வளவு மிளகையும், செலுத்தித் தம் நகரை மீட்டுக் கொண்டார்களாம். தமிழகத்துப் பண்டங்கள் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டிலும் ரோமாபுரிக்குத் தொடர்ந்து ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தது என்ற செய்தியை இவ்வரலாறு உறுதி செய்கின்றது. பேரரசன் கான்ஸ்டன்டைன் காலத்திலிருந்து (கி.பி.324–337) தென்னிந்தியாவிலும் வட இந்தியாவிலும் மீண்டும் ரோம நாணயங்கள் மலிந்து காணப்படுகின்றன. இவை 4, 5–ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவுக்குள் நுழைந்திருக்க வேண்டும். பேரரசன் கான்ஸ்டன்டைன் தன் ஆயுள்நாளின் இறுதியில் இந்தியத் தூதுவர் ஒருவரைத் தன் அரசவைக்கு வரவேற்றான் என்ற ரோமாபுரி வரலாறு கூறுகின்றது. பேரரசன் ஜூலியனும் (கி.பி.36–63) இந்தியாவினின்றும் பல தூதுவர்களை வரவேற்றுள்ளான்.

கொங்கணக் கடற்கரையோரத்திலும், வட மலையாளக் கடற்கரையோரத்திலும் கடற்கொள்ளைக்

காரர்கள் மலிந்திருந்தனர். அதனால் ரோமர்கள் அவ்விடங்களை நாடவில்லை போலும். பெரிபுளூஸ் ஆசிரியர் கண்ணனூரைப்பற்றியும், தொண்டியைப் பற்றியும் தம் நூலில் குறிப்பேதும் கொடுக்காமல் இருப்பதற்கு இதுதான் காரணமாகும். நீரோவுக்குப் பிறகு சிறிது காலம் ரோமர்கள் இந்தியச் சரக்குகளைப் பண்டமாற்று முறையில் கொள்முதல் செய்து வந்தனர் என அறிகின்றோம்.

பண்டைய தமிழர்கள் மத்தியதரைக் கடல் நாடுகளுக்குத் தம் சரக்குகளைத் தாமே நேர்முகமாக ஏற்றிச் செல்லுவதில்லை. மாமன்னன் அலெக்சாண்டர் **(கி.மு. 356 – 323)** காலத்துக்கு முன்பு தமிழகத்து வணிகர்கள் பாபிலோனியாவைக் கடந்து அப்பால் சென்றதாகத் தெரியவில்லை. செங்கடலிலும் அவர்கள் நுழையவில்லை. இவர்கள் செங்கடல்வரையில் ஏற்றிச் சென்ற சரக்குகளைப் பினீஷியரும் கால்டேயரும் ஏற்றுக்கொண்டு மத்தியதரைக் கடல் நாடுகளுக்கு அவற்றை எடுத்து சென்று விலையாக்கினர். பிறகு கிரேக்கர்களும் எகிப்தியரும் இக்கடமையை மேற்கொண்டனர். அவர்களைத் தொடர்ந்து கி.பி. முதல் இரண்டாம் நூற்றாண்டுகளில் அராபியரும் ரோமரும் தமிழகத்துப் பண்டங்களை மேலை நாடுகளுக்குக் கப்பலேற்றிச் செல்லும் பணியில் ஈடுபட்டார்கள். இந்தியர் செங்கடலைக் கடந்து நெடுந்தொலைவு கலமோட்டிச் செல்லவில்லை என்ற ஒரு காரணத்தினாலேயே அவர்களுக்குக் கடலோடும் ஆற்றல் நிறைந்திருக்கவில்லை என்று கொள்ளலாகாது. ஏனெனில், நைல் நதியில் துறைமுகப் பட்டினமான அலெக்சாண்டிரியாவில் நூற்றுக்கணக்கில் இந்தியர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் அம் மாநகரில் கூட்டங்கூட்டமாகக் கூடித் தம் சரக்குகளை விற்பனை செய்து வந்தார்கள்.

நடுக்கடலில் தமிழர்கள் கலமோட்டிச் செல்லாவிடினும், அவர்கள் கரையோரமாகவே தோணிகளை ஓட்டிச் சென்று வாணிகம் செய்தனர். இத்தோணிகள் யாவும் தனித்தனி மரக்கட்டையைக் குடைந்து உருவாக்கப் பெற்றவை. ஆனால் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு முதற்கொண்டே மிகப் பெரிய கப்பல்களைக் கட்டக்கூடிய ஆற்றலையும், நுண்ணறிவையும் தமிழர் பெற்றுவிட்டனர். இக் கப்பல்கள் ஒவ்வொன்றும் முப்பத்து மூன்று டன் எடைச் சரக்குகளை ஏற்றிச் செல்லக்கூடியவை. பிற்காலத்தில் சோழ மன்னர்கள் காலத்தில் இவற்றைவிடப் பெரிய கலங்களும் கட்டப்பெற்றன. சோழ மண்டலக் கடற்கரையில் புதுவை, மரக்காணம் முதலிய துறைமுகங்களில் மாபெருங் கப்பல்களும், பெரிய கட்டுமரங்களும் வந்து தங்குவதுண்டு. இவ் விடங்களிலிருந்தும் நாவாய்கள் கரையோரமாகவே பாய்விரித்தோடிச் சேரநாட்டுத் துறைமுகங்களை யடைவதுண்டு. பிற்காலத்தவர்களான பல்லவர்கள் இரட்டைப் பாய் விரித்த கப்பல்களையும் வாணிகத்தில் ஈடுபடுத்தியிருந்தனர்.

சேரநாட்டுக் கடற்கரையில் அமைந்திருந்த துறைமுகங்களில் வந்து தங்கிய கிரேக்கக் கப்பல்கள் மிகவும் பெரியவை. பருவக் காற்றுகளின் பயனை அறிந்த பிறகு ரோமாபுரியின் வாணிகம் ஓங்கி உச்ச நிலையை எட்டிற்று. செல்வஞ் செழித்த ரோமாபுரிப் பிரபுக்கள் முதலீடு செய்து மிகவும் பெரிய மரக்கலங்களைக் கட்டுவித்தார்கள். வாணிகத்தின் வளர்ச்சிக்கேற்ப அக்கப்பல்களின் எண்ணிக்கையும் அளவும் பெருகிக் கொண்டே போயின. எகிப்தியரும் கப்பல் கட்டும் கலையில் சளைத்தவர்களல்லர். இந்திய சமுத்திரத்தைக் கடந்து செல்லுமளவுக்கு மிகப் பெரிய கப்பல்களை அவர்கள் ஓட்டினர். எகிப்தியர் செலுத்திய கப்பல்கள் சிலவற்றிற்கு ஏழு பாய்மரங்கள் விரிக்கப்பட்டிருந்தனவாம்.

தமிழகத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குப் பலவகையான பண்டங்கள் ஏற்றுமதியாயின. புலி, சிறுத்தை, யானை, குரங்கு, மயில், கிளி, வேட்டை நாய்கள் ஆகியவற்றை தமிழகம் ஏற்றுமதி செய்தது. தமிழகத்து வேட்டை நாய்கள் தரத்தில் மேலானவை என அயல்நாடுகளில் மிகவும் பாராட்டப்பெற்றன. புலிகள் ஒரு வேளை வட இந்தியாவிலிருந்தும் ஏற்றுமதியாகியிருக்கக்கூடும். ஆனால், யானைகள் தமிழகத்தில் மட்டுந்தான் உயிர்வாழ்ந்தன. ஆகையால், யானைகள் ஐரோப்பிய நாடுகளுக்குத் தமிழகத்திலிருந்துதான் போயிருக்க வேண்டும். அயல் நாட்டினர் சில பாம்பினங்களையும் தமிழகத்தில் கொள் முதல் செய்தனர். இந்தியாவிலிருந்து இறக்குமதியான ஒன்பதடி நீளமுள்ள நல்லபாம்பு ஒன்றைத் தாம் எகிப்தில் கண்டதாக ஸ்டிராபோ எழுதியுள்ளார். சேரநாட்டுக் காடுகளில் பலவகையான, மிகவும் நீண்ட பாம்புகள் மலிந்து கிடந்தன. எனவே, சேர நாட்டுத் துறைமுகங்கள் மூலம் இப்பாம்புகள் ஏற்றுமதியாயின என்று ஊகிக்கலாம். மேலை நாட்டினர் தமிழகத்தில் வாணிகம் செய்த பண்டங்களில் மிகவும் விலையுயர்ந்தவை யானைத் தந்தங்களும் முத்துகளுமேயாம்.

தமிழகம் ஏற்றுமதி செய்த சரக்குகளில் சாலச் சிறந்தவை இலவங்கம், மிளகு, இஞ்சி, ஏலம், அரிசி, நுண்வகைக் கலிங்கங்கள், தேக்கு, கருங்காலி, நூக்கு, சந்தனம் ஆகிய கட்டட மரவகைகள் முதலியன. மிளகும்,



முயற்சி உடையவன் செல்வத்தை அடைகிறான்;
நல்ல பழக்கம் உள்ளவன் புகழ், செல்வம்,
ஒழுக்கம் இவற்றை அடைகிறான்.
- ஹிதோபதேசம்

செருப்புக்குள்ளே கல்லும்,
காதுக்குள்ளே ஈயும்,
கண்ணுக்குள்ளே தூசியும், காலில்
முள்ளும், வீட்டினுள் கலகமும்
எவ்வளவு சிறியதாயினும்
துன்பத்தைத் தரும்.

- கவி வேமன்னா

இஞ்சியும் மருந்துகள் செய்ய பயன்பட்டன. ஹிப்பாகிரேட்டஸ் என்ற புகழ் பெற்ற கிரேக்க மருத்துவர் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் இந்திய மருத்துவ முறைகளையும், மருந்து வகைகளையும் கையாண்டு வந்தார். அவர் மிளகை 'இந்திய மருந்து' என்றே குறிப்பிடுகின்றார். நல்லெண்ணெயின் பயனைக் கிரேக்கர்கள் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே நன்கு அறிந்திருந்தனர். நல்லெண்ணெய் பண்டைய தமிழரின் உணவுப் பண்டங்களுள் ஒன்றாகும். ரோமரும் நல்லெண்ணெயை இறக்குமதி செய்தார்களா என்பது தெரியவில்லை. தமிழகத்துக் கருங்காலி மரங்கள் ரோமாபுரியில் பெருமளவில் விற்பனையாயின. பாரசீக வளைகுடாத் துறைமுகங்களில் தமிழகத்துத் தேக்க மரங்களைக் கொண்டு கப்பல்கள் கட்டினார்கள். தேக்க மரங்கள் சேர நாட்டுக் காடுகளிலிருந்தும் கன்னட நாட்டிலிருந்தும் வெட்டி ஏற்றுமதி செய்யப்பட்டவை என்பதில் ஐயமில்லை.

தமிழகம் மேலைநாடுகளுடன் கொண்டிருந்த வாணிகத் தொடர்பைப்பற்றிச் சங்க இலக்கியங்களில் பல சான்றுகள் காணப்படுகின்றன. தமிழர்கள் அந் நாடுகளிலிருந்து தேயிலையும் பொன்னையும் இறக்குமதி செய்தனர். பல யவனர்கள் தமிழக மன்னர் அரண்மனைகளில் கைவினைக் கம்மியராகவும், கவாற்காரராகவும் பணிபுரிந்தனர், 'யவனர் நன்கலந் தந்த தண்கமழ் தேறல் பொன் செய் புனைகலத் தேந்தி நாளும் ஒண்டொடி மகளிர் மடுப்ப....' (யவனர் நல்ல குப்பிகளில் கொணர்ந்து தந்த நறுமணம் கமழும் குளிர்ந்த மதுவைப் பொன் வளையல்களையணிந்த இளம் பெண்கள் பூவேலை செய்யப்பட்ட பொற்கிண்ணங்களில் ஊட்டுவிக்கின்றனர்) என்று புறநானூற்றுச் செய்யுள் ஒன்று கூறுகின்றது' 'சுள்ளிஅம் பேரியாற்று வெண்நுரை கலங்க யவனர் தந்த வினை மாண் நன்கலம் பொன்னொடு வந்து கறியொடு பெயரும் வளம் கெழு முசிறி ஆர்ப்பு எழ...' (ஒடிந்த மரச் சுள்ளிகளை ஏந்தி வரும் பேரியாற்றில் குமிழ்த்தெழும் வெள்ளைவெளேரென்று மின்னிய நுரைகள் கலங்கும்படி யவனர் செய்து முற்றிய அழகிய வேலைப்பாடமைந்த உறுதியான மரக்கலங்கள் பொன்னைக்கொண்டு வந்து கொட்டிவிட்டு மிளகு மூட்டைகளை ஏந்திச் செல்லும் பேரொலி எழும் வளம் மிகுந்த முசிறிப்பட்டினம்..) என்று அகநானூறு' குறிப்பிடுகின்றது.

மேலைநாடுகளுடன் மட்டுமின்றிக் கீழை நாடுகளான சீனம், மலேசியா, ஜாவா (சாவகம்), வடபோர்னியா ஆகிய நாடுகளுடனும் தமிழகமானது மிகவும் வளமானதொரு கடல் வாணிகம் நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கதாகும். சீனத்துடன் தமிழகம் மேற்கொண்டிருந்த வாணிகத் தொடர்பானது மிகவும் பழைமையானதாகும். இத்தொடர்பு கி.மு. ஆயிரம் ஆண்டளவிலேயே தொடங்கிவிட்டதெனத் தெரிகின்றது. தமிழகத்துப் பண்டங்கள் கி.மு. ஏழாம் நூற்றாண்டிலேயே சீனத்தில் இறக்குமதியாயின என்று அந்நாட்டு வரலாறுகள் அறிவிக்கின்றன. சீனத்துப் பட்டாடைகளையும், சருக்கரையையும் தமிழகம் ஏற்றுக் கொண்டது. இதனால் இன்றளவும் பட்டுக்குச் சீனம் என்றும், சருக்கரைக்குச் சீனி என்றும் பெயர் வழங்கி வருகின்றது. சீனக் கண்ணாடி, சீனக் கற்பூரம், சீனக் கருவா, சீனக் களிமண், சீனக் காக்கை, சீனக் காரம், சீனக் கிழங்கு, சீனக் கிளி, சீனக் குடை, சீனச் சட்டி, சீனர் சரக்கு, சீனச் சுக்கான், சீனச் சுண்ணம், சீனத்து முத்து, சீன நெல், சீனப்பட்டாடை, சீனப் பரணி, சீனப் பருத்தி, சீனப்புகை, சீனப் புல், சீனபூ, சீன மல்லிகை, சீனமிளகு, சீன ரேக்கு, சீன வங்கம், சீன வரிவண்டு, சீனாக் கற்கண்டு, சீனாச் சுருள் என்னும் சொற்கள் இன்றளவும் தமிழ்மொழியில் பயின்று வருகின்றன. சீனம் என்னும் சொல்லுடன் இணைந்து வரும் தமிழ்ச் சொற்கள் இன்னும் பல உண்டு.

பிலிப்பைன் தீவுகளில் அண்மையில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் இரும்புக்காலப் புதை பொருள்கள் பல கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கத்திகள். கோடாரிகள், ஈட்டிகள் போன்ற கருவிகள் அனைத்தையும் கி.மு. முதலாம் ஆயிரம் ஆண்டில் தமிழ் மக்கள் பயன்படுத்தி வந்த கருவிகளைப் பெரிதும் ஒத்துள்ளன. சீனம், சாவகம் போன்ற கீழைநாடுகளுடன் மேற்கொண்டிருந்த வாணிகத் தொடர்பின் பழைமையை இச்சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன.

கிழக்காசிய நாடுகளுக்கும் ரோமாபுரிக்குமிடையே நடைபெற்று வந்த கடல் வாணிகத்தில் தமிழகமும் பெரும்பங்கு ஏற்று வந்தது. சீனம், மலேசியா, சாவகம் முதலிய நாடுகளிலிருந்து தமிழகம் பண்டங்களைக் கொள் முதல் செய்து அவற்றை மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவந்தது. மேலை நாடுகளுடன் தமிழகம் கொண்டிருந்த கடல் வாணிகம் குன்றிய பிறகு கீழை நாடுகளுடனான அதன் வாணிகம் மேலும் மேலும் வளர்ந்து வரலாயிற்று. தமிழகத்து மக்கள் இந் நாடுகளில் பல குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர். இந் நாடுகளுடன் அரசியல் தொடர்புகளைப் பெருக்கிக் கொண்டனர். இங்கெல்லாம் தம் நாகரிகத்தையும் பண்பாடுகளையும் பரப்பினர்.

ஒரு நாட்டு மக்கள் கடல் கடந்து சென்று அயல்நாடுகளில் தங்கி வாணிகம் செய்துவர வேண்டுமாயின் அந் நாட்டில் உள்நாட்டு வாணிகம் மிகவும் செழிப்பான முறையில் நடைபெற்று வந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. எனவே, தமிழகத்தின் உள்நாட்டு

வாணிகம் செழித்தோங்கியிருந்தது எனலாம். தமிழகத்து வணிகர்கள் கூட்டங் கூட்டமாகக் கூடிக் கொண்டு, வண்டிகளிலும் பொதிமாடுகளின் மேலும் தம் பண்டங்களை ஏற்றிச் சென்று ஊரூராக விலை கூறுவர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் மலிந்து கிடக்கின்றன. உள்நாட்டு வாணிகத்தில் பெரும்பாலும் பண்டமாற்று முறையே வழங்கி வந்தது.

தொடர்ச்சி 65ஆம் பக்கம்

நெடுஞ்சாலைத்துறை - சாலைகள் - பாலங்கள்

சட்டப்பேரவையில்
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்
திரு.என்.தளவாய் சுந்தரம்

நீரின்றி அமையாதது உலகு என்பது எக்காலத்திற்கும் பொருந்தும் முதுமொழி ஆகும். அதுபோல தற்காலத்தில் சாலைகளின்றி பொருளாதார வளர்ச்சி அடைய முடியாது என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

தமிழ்நாட்டில் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு நமது பெருமதிப்பிற்குரிய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையில் புதிய முனைப்புடன் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

விவசாயம், தொழில், சுரங்கம், மின்சக்தி, வனவளம் மற்றும் பால்வளம் போன்ற முக்கிய துறைகளின் மேம்பாட்டிற்கு சாலைக் கட்டமைப்பு முதுகெலும்பாக துணை வலுவூட்டுகிறது. இத்துறைகளின் வளர்ச்சி திறம்பட, சாலை மேம்பாடு, பராமரிப்பு மற்றும் போக்குவரத்து உறுதுணையாக அமைகிறது.



இதில், நெடுஞ்சாலைகளின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு குறித்த பொறியியல் மற்றும் பொருளாதாரக் கூறுகள் மட்டுமல்லாது, சுற்றுச் சூழல் மற்றும் சமூக நலன்களும் உள்ளடங்கும். சாலைகள் குறித்த புதிய கொள்கையின் நோக்கங்களில் பின்வருவனவும் அடங்கும்.

அ. சமூக, பொருளாதாரப் பயன்களை அதிகரிக்கும் வகையில் சாலை மேம்பாடு.

ஆ. அரசு மற்றும் தனியார் பங்கேற்புடன் நிதி ஆதாரங்களை அதிகரிக்கச் செய்தல்.

இ. நவீன தொழில் நுட்பங்கள் மூலம் சாலைகளின் வடிவமைப்பு, கட்டுமானம் போன்றவைகளுக்கு திட்டமிடல் மற்றும் செயலாக்கத் தரத்தினை உயர்த்துதல்.

ஈ. நெடுஞ்சாலைச் சொத்துக்களையும், ஆதாரங்களையும் சிறந்த முறையில் நிர்வகித்தல்.

உ. திட்டச் செயலாக்கங்களுக்கு நிலம் கையகப் படுத்தும் போது சாலை மேம்பாட்டுப் பணிகளால் பாதிப்பிற்குட்படுவோரை மறுகுடியமர்த்தல்.

ஊ. துறையின் நிர்வாக மேம்பாடு

எ. சுற்றுச் சூழல் நிர்வாகம்

ஏ. பாதுகாப்பான சாலைப் போக்குவரத்து

மாநில நெடுஞ்சாலைகள், முக்கிய மாவட்டச் சாலைகள், ஏனைய மாவட்டச் சாலைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்ட தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு (TNRSP) உதவிடுமாறு இவ்வரசு, 1995–ல் உலக வங்கியைக் கேட்டுக் கொண்டது. ஐந்தாண்டு இடைவெளிக்குப் பின்னர், மீண்டும் இத் திட்டத்தை புதிய எழுச்சியுடன் மேற்கொள்ளும் வாய்ப்பு தற்போது கிடைத்துள்ளது. இதற்கு மொத்தம் ரூபாய் 1,900 கோடி திட்டச் செலவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் பணிகளை உலக வங்கி விரைவில் ஆய்வு செய்யவுள்ளது.

நம் நாடு விடுதலை அடைவதற்கு முன்பு காவிரி வடிநில மாவட்டங்களில் கட்டப்பட்ட பல பாலங்கள் பெருகிவரும் போக்குவரத்தை தாங்க இயலாத நிலையில் உள்ளன. இத்தகைய 204 பாலங்களை தனியார் பங்கேற்புடனும், நபார்டு வங்கியின் உதவியுடனும், ரூ.200 கோடி செலவில் திரும்பக் கட்ட இவ்வரசு உத்தேசித்துள்ளது. இதில் தஞ்சை – 45, நாகை – 50, திருவாரூர் – 96, கடலூர் – 4 மற்றும் திருச்சியில் – 9 பாலங்கள் இடம்பெறும்.

நிதிநிலை அறிக்கையில் அறிவித்த திட்டங்களுக்கு செயல்வடிவம் அளித்திட தக்க முன் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

அடிப்படைக் கட்டுமான வசதிகளான சாலைகள், குடிநீர் வசதி, மின்சார வசதி போன்ற பணிகளின் செயலாக்கம் மற்றும் மேம்பாடு குறித்து ஒருங்கிணைந்த முறையில் ஆய்வுகள் நடத்தி வழிகாட்டுதல்களை அளித்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழுமம் ஒன்று அமைக்கப்படும்.

நெடுஞ்சாலைச் சொத்துக்களை பாதுகாத்திடவும், சாலையோர ஆக்கிரமிப்பை கட்டுப்படுத்திடவும் வழிவகைகள் அடங்கிய தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டத்திற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் எதிர் பார்க்கப்படுகிறது.

வருங்காலங்களில் பொது மற்றும் தனியார் இணைந்தே திட்டங்களைச் செயல்படுத்திடும் நிலை உருவாகியுள்ளது. இதன் தொடக்கமாக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், (TIDCO) மற்றும் இன்ப்ராஸ்டரக்சர் லீசிங் அண்ட் பைனான்சியல் சர்வீஸஸ் (IL & FS) என்ற நிறுவனமும் இணைந்து தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் கம்பெனி (TNRDC) என்ற கூட்டு நிறுவனம் ஒன்றினை தொடங்கியுள்ளது. சாலை மேம்பாட்டு பணிக்கான முதலீடு சுங்க வசூல் மூலம் ஈடுகட்டப்படும் என்ற திட்டத்தின் கீழ் கிழக்கு கடற்கரைச் சாலையை (ECR) மேம்படுத்தும் பணிகள் இந்நிறுவனம் மூலம் நடைபெற்று வருகின்றன.

அரசின் நிதி ஆதாரத்தை மட்டுமே கொண்டு பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்ற இயலாது. தனியார் முதலீட்டிற்கு வழிவகை செய்ய இந்திய சுங்கச் சட்டத்திற்கு (Indian Tolls Act) திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட

அ. நாமக்கல் மாவட்டம், மோகனூர் – கரூர் மாவட்டம், வாங்கல் காவிரியாற்றுப் பாலம்.

ஆ. தஞ்சை மாவட்டம், கும்பகோணம் நீலத்தநல்லூர், பெரம்பலூர் மாவட்டம், மதனத்தூர் – கொள்ளிடம் ஆற்றுப்பாலம்.

இ. தஞ்சை மாவட்டம், அலமேல்புரம் பூண்டி திருச்சி மாவட்டம், செங்கரையூருடன் இணைத்திடும் கொள்ளிடம் ஆற்றுப்பாலம் ஆகிய திட்டங்களுக்கு முன்னிலை ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

இப்பாலங்களைத் தவிர,

1. சென்னை – கும்பகோணம் – தஞ்சாவூர் சாலை கி.மீ. 249/8–ல் அணைக்கரையில் உள்ள கொள்ளிடம் ஆற்றில் ரெகுலேடர் பாலம்.

2. நாமக்கல் மாவட்டம், கொக்கராயன் பேட்டையையும், ஈரோடு மாவட்டம் லக்காபுரத்தையும் இணைத்திட காவிரியாற்றின் குறுக்கே பாலம்.

3. பழனியிலிருந்து கொடைக்கானலை இணைத்திடும் மலைச்சாலை மேம்பாடு ஆகிய திட்டங்களுக்கும் தனியார் முதலீடு அடிப்படையில் முன்னிலை ஆய்வுகள் மேற் கொள்ளப்படும்.

முழுமையாக ஆய்வு செய்து பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்திட ஆய்வுச் செலவினத்திற்காக ஒரு சுழல் நிதி ஏற்படுத்தப்படும் என்று 1999–2000 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டது. இதற்கான ஆணை முந்தைய அரசால் 7.9.2000 அன்று வழங்கப்பட்டாலும் இடைக்கால நிதிநிலை அறிக்கையில்கூட நிதி ஒதுக்கீடு அளித்திட வில்லை. ஆனால், தற்பொழுது, ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கதாகும். முன்னுரிமைப்படி செயலாக்கப்பட வேண்டிய பணிகளின் தொகுப்பு தயார் செய்யப்பட்டு, அரசால் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ள சுழல் நிதியினை (Revolving Fund) உபயோகித்து விரிவான ஆய்வுகள் செய்து மதிப்பீடுகள் தயார் நிலையில் வைக்கப்படும்.

மாவட்டத் தலைநகரங்களில் நெரிசலைத் தவிர்த்திட ஈரோடு, இராமநாதபுரம், நாகர்கோவில், தேனி மற்றும் திருவள்ளூர் நகரங்களுக்கு புறவழிச்சாலைகள் அமைப்பது குறித்து வழிவகைகள் ஆய்வு செய்யப்படும்.



புதிதாக துவங்கப்பட்டுள்ள எண்ணூர் துறைமுகத்திற்கு சென்னை–கோல்கத்தா தேசிய நெடுஞ்சாலையிலிருந்து அணுகு சாலைகளான காரனோடை – மீஞ்சூர், மீஞ்சூர் – காட்டூர் – திருப்பாலைவனம் மற்றும் திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலைகளை மேம்பாடு செய்திட ஆய்வுகள் செய்யப்படும்.

நெடுஞ்சாலைத் துறையினரால் செயலாக்கப்படும் பணிகள் தரமுடன் இருக்க வேண்டும் என்ற முனைப்புடன் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநரின் கீழ் தனியாக ஒரு தரக்கட்டுப்பாடு பிரிவு நிறுவப்படவுள்ளது.

தமிழ்நாடு மாநிலக் கட்டுமானக் கழகத்தின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டு, அதற்குப் புத்துயிரூட்டத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நெடுஞ்சாலைத் துறை செயலகத்தின் பணிகளில் செயலருக்கு உதவியாக தொழில்நுட்பம் தொடர்பான பணிகள் திறம்பட நடத்திட தலைமைப் பொறியாளர் நிலையில், ஒரு சிறப்புச் செயலர் பதவி ஏற்படுத்தப்படும்.

• • •

சிறுபாசனத் திட்டங்கள்

திட்டங்களின் எண்ணிக்கை : 5
மதிப்பீடு தொகை : ரூ.2615 இலட்சம்
பாசன வசதி பெறும் பரப்பு : 3178 ஏக்கர்

திட்டத்தின் பெயர்	விவரம்
★ தருமபுரி மாவட்டம் ராமகொண்டஹள்ளி அருகே மத்தளபள்ளம் ஆற்றின் குறுக்கே ஒரு கண்மாய்	மதிப்பீடு ரூ.1415 இலட்சம் பயனடையும் பாசன பரப்பு 700 ஏக்கர்
★ கடலூர் மாவட்டம் பெரும்பட்டுகிராமம் அருகில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு	மதிப்பீடு ரூ.162 இலட்சம் புதியபாசன பரப்பு 460 ஏக்கர்
★ தருமபுரி மாவட்டம் படத்தலார் கண்மாய் முதல் வெண்ணம்பள்ளி கண்மாய் மற்றும் கீழே உள்ள 10 கண்மாய்களுக்கு நீர் கொண்டு செல்ல புதிய வழங்கு கால்வாய்	மதிப்பீடு ரூ.700 இலட்சம் ஆயக்கட்டு அதிகரிப்பு 1340 ஏக்கர்
★ கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலுகா கடஞ்சேரி (புதுக்கடை) இறவை பாசன திட்டம்	மதிப்பீடு ரூ.219 இலட்சம் புதிய ஆயக்கட்டு – 572.50 ஏக்கர்
★ தேனி மாவட்டம் தெப்பம்பட்டி கிராமம் வெள்ளப்பாறை ஓடையின் குறுக்கே புதிய கண்மாய்.	மதிப்பீடு ரூ.119 இலட்சம் புதிய ஆயக்கட்டு – 104.28 ஏக்கர்

சிறப்பு சிறுபாசன திட்டங்கள் :

திட்டங்களின் எண்ணிக்கை : 10
மதிப்பீடு தொகை : ரூ.232 இலட்சம்
பாசன வசதி பெறும் பரப்பு : 837.33 ஏக்கர்

திட்டத்தின் பெயர்	விவரம்
வேலூர் மாவட்டம் பாச்சூர் கிராமத்தைச் சார்ந்த பாயப்பநாயக்கன் பேட்டையில் குட்டை அமைத்தல்	மதிப்பீடு ரூ.12 இலட்சம் பயனடையும் பாசன பரப்பு 15.80 ஏக்கர்
வேலூர் மாவட்டம், சேமபள்ளி கிராமத்தில் மலை ஓடையின் குறுக்கே குட்டை அமைத்தல்	மதிப்பீடு ரூ.13 இலட்சம் பயனடையும் புதிய பாசன பரப்பு – 37.39 ஏக்கர்

நாமக்கல் மாவட்டம், உனன்தங்கல் கிராமத்தில் குட்டை அமைத்தல்	மதிப்பீடு ரூ.25 இலட்சம் பயனடையும் புதிய பாசன பரப்பு – 37.36 ஏக்கர்
தர்மபுரி மாவட்டம் பெரிய பனமுட்லு கிராமத்தில் புது ஏரியினை புனரமைத்தல்	மதிப்பீடு ரூ.15 இலட்சம் பயனடையும் புதிய பாசன பரப்பு – 65.10 ஏக்கர்
திருச்சி மாவட்டம், பிள்ளைப்பாளைய கிராமத்தில் குட்டை அமைத்தல்	மதிப்பீடு ரூ.23 இலட்சம் பயனடையும் புதிய பாசன பரப்பு – 51 ஏக்கர்
திருச்சி மாவட்டம், முல்லைப்பாடி கால்வாய் மூலம் முல்லப்பாடி ஏரிக்கு நீர் வழங்க ஆகாச குமுளியாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல்	மதிப்பீடு ரூ.32 இலட்சம் பயன் பெறும் பாசன பரப்பு – 244.74 ஏக்கர் (இடைவெளி)
கரூர் மாவட்டம், மேல் முனாயனூர் கிராமத்தில் குட்டை அமைத்தல்	மதிப்பீடு ரூ.13 இலட்சம் பாசன பரப்பு – 103 ஏக்கர்
புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், ராஜகிரி கிராமத்தில் நல்ல மங்கான் குளம் மற்றும் நான்கு ஏரிகளுக்கு நீர் வழங்க கோரையாற்றின் குறுக்கே அணை கட்டுதல்	மதிப்பீடு ரூ.47 இலட்சம் பயனடையும் புதிய பாசன பரப்பு – 33.11 ஏக்கர்
திண்டுக்கல் மாவட்டம், சுக்கம்பட்டி கிராமத்தில் புதிய குளம் அமைத்தல்	மதிப்பீடு ரூ.38 இலட்சம் பயனடையும் புதிய பாசன பரப்பு – 37 ஏக்கர்
திண்டுக்கல் மாவட்டம், வாடிப்பாடி கிராமத்தில் குளம் அமைத்தல்	மதிப்பீடு ரூ.14 இலட்சம் பயனடையும் புதிய பாசன பரப்பு – 37.50 ஏக்கர்.

கிருஷ்ணா குடிநீர் வழங்குத் திட்டம்

கிருஷ்ணா நதி நீர் மற்றும் வெள்ளநீரை சேமித்து வைக்க 2001–2002 ஆம் ஆண்டில் கீழ்கண்ட பணிகள் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

	மதிப்பீடு தொகை
வயலூர் படுகைப்பாலம் பாலாற்றுக்கு குறுக்கே பொறி மதகு அமைத்தல் 0.50 டி.எம்.சி.	ரூ.77 கோடி
ஜமீன் கொரட்டூர் கூவம் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் 0.20 டி.எம்.சி.	ரூ.22 கோடி
பள்ளிக்கரணை நீர்த்தேக்கம் 0.50 டி.எம்.சி.	ரூ.55 கோடி
திருநீர் மலையில் அடையாறுக்கு குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல்	ஆய்வில் உள்ளது, தனியார் நிறுவன ஆலோசனை பெற சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமம் கருத்து தெரிவித்துள்ளது.

கட்டடப் பணிகள்

2001–2002 நிதி ஆண்டில் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ்கண்ட பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன.

வேலையின் பெயர்	நிர்வாக ஒப்பளிப்பு தொகை (இலட்சத்தில்)
கன்னியாகுமரி மாவட்டம் தோவாளையில் ஒரு ஆய்வு மாளிகை	18.50
தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள ஆய்வு மாளிகைகள் மற்றும் சுற்றுலா மாளிகை வளாகங்களில் ஓட்டுநர் ஓய்வு அறைகள்	12.35
தர்மபுரியில் தற்போது உள்ள சுற்றுலா மாளிகையில் முதல் மாடி கட்டும் பணி.	29.79

திட்டம் சாரா பணிகள்

2001–2002 ஆம் ஆண்டில் திட்டம் சாரா பணிகளின் கீழ்கண்ட கட்டடப்பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

	மதிப்பீடு தொகை
சென்னை தலைமைச் செயலகத்திற்காக கூடுதல் கட்டடம்	ரூ.10 கோடி
உயர்நீதிமன்ற வளாகத்தில் நூலகம், தபால் அலுவலகம் கணிணி மையம் ஆகியவற்றுக்காக கட்டடம்	ரூ.1 கோடி
அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் 6 எண்கள் உட்பட தமிழ்நாட்டில் 26 இடங்களில் காவல் நிலையங்களுக்கு கட்டடம்.	ரூ.3.64 கோடி

நபார்டு வங்கி உதவியுடன் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்

பாசன திட்டங்கள்

கீழ்க்கண்ட 10 பாசன திட்டங்கள் ரூ.36.00 கோடி மதிப்பீட்டில் இந்த ஆண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

★ தூத்துக்குடி மாவட்டம், திம்மராஜபுரம் கிராமத்தில் புதிய ஏரி.

★ தூத்துக்குடி மாவட்டம் சின்னூர் கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல்

★ தூத்துக்குடி மாவட்டத்தில், நம்பிபுரம் ஏரிக்கு நீர் கொண்டு வருவதற்காக வைப்பாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல்

★ திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல்

★ விருதுநகர் மாவட்டம், பெரிய புளியம்பட்டி கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல்.

★ இராமநாதபுரம் மாவட்டத்தில், கன்னிராஜதபுரம் கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல்

★ மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலூக்கா பேய்குளம் கிராமத்தில் உப்போடையின் குறுக்கே புதிய ஏரி அமைத்தல்.

★ சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பெரிய குளத்தின் உபரி நீர் போக்கின் குறுக்கே அணைக்கட்டு கட்டி மான்ய கண்மாய் குளத்திற்கு தண்ணீர் வசதி அளித்தல்.

★ திருவள்ளூர் மாவட்டம், லஷ்மிபுரம் கிராமத்தில் ஆரணியாற்றின் குறுக்கே மேற்பகுதியில் லஷ்மிபுரம் அணைக்கட்டு கட்டுதல்.

★ திருவள்ளூர் மாவட்டம், இடையஞ்சாவடி கிராமத்தில் கொசஸ்தலையாற்றில் இடது புறத்தில் தரைமட்ட அணை கட்டுதல்.

கடற்கரைப் பாதுகாப்பு பணி

கீழ்கண்ட மாவட்ட வாரியான கடற்கரை பாதுகாப்புப் பணிகளை ரூ.31.64 கோடி அளவில் செயல்படுத்த நபார்டு வங்கியுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம்	9820 மீட்டர் நீளம்	ரூ.16.20 கோடி
தூத்துக்குடி மாவட்டம்	1460 மீட்டர் நீளம்	ரூ.2.41 கோடி
இராமநாதபுரம் மாவட்டம்	1100 மீட்டர் நீளம்	ரூ.1.82 கோடி
நாகப்பட்டினம் மாவட்டம்	2000 மீட்டர் நீளம்	ரூ.4.27 கோடி
காஞ்சீபுரம் மாவட்டம்	2460 மீட்டர் நீளம்	ரூ.6.94 கோடி
மொத்தம்	16840 மீட்டர் நீளம்	ரூ.31.64 கோடி

அசுவமாநதி அணைக்கட்டு திட்டம்

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், தொட்டப்ப நாயக்கனூர் கிராமம் அருகில் அசுவமாநதி ஆற்றின் குறுக்கே புதிய கண்மாய் அமைக்கும் திட்டம் ரூ.344 இலட்ச மதிப்பீட்டில் நடப்பாண்டில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது. இத்திட்டத்தினால் 379 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இத்திட்டத்திற்கு 2001–2002ல் ரூ.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏரிகள் புனரமைப்புத் திட்டம்

உலக வங்கி உதவியுடன் பாலாறு, தாமிரபரணி மற்றும் வைகை வடிநிலப்பகுதியிலுள்ள 620 ஏரிகளை ரூ.106.26 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

நபார்டு வங்கி உதவியுடன் 44 ஏரிகளை ரூ.14.66 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நபார்டு வங்கி உதவியுடன் ரூ.70 கோடி மதிப்பீட்டில் 300 பாசன ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வடசென்னை கடலரிப்பு திட்டப்பணிகள்

சென்னை வடக்கு கடற்கரை ஓரமாக ரூ.283.00 இலட்சம் மதிப்பீட்டில் கருங்கல் தடுப்புச்சுவர் கட்டும் திட்டம் நடப்பாண்டில் பகுதி–2 திட்டத்தின் கீழ் புதிய திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. (இதில் மத்திய அரசின் மான்யம் ரூ.100 இலட்சம் அடங்கும்).

• • •

செக்கிழுத்த செம்மல்

வ.உ.சி.க்கு

மணிமண்டபம்

சுதந்திரப் போராட்ட தியாகியும், 'செக்கிழுத்த செம்மல்' என்று போற்றப்படு பவருமான மறைந்த விடுதலை வீரர் வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களுக்கு திருநெல்வேலி நகர மையப் பகுதியில் 'மணி மண்டபம்' கட்டப்பட வேண்டும் என்று நெல்லை வாழ் மக்கள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்திய நாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட சுதந்திரப் போராட்ட தியாகசீலர்களில் ஒருவராக விளங்கிய வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களுக்கு மணி மண்டபம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கையை தமிழக அரசு ஏற்றுக் கொண்டு, இதற்கான உத்திரவினை மாண்புமிகு முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் வெளி யிட்டுள்ளார்கள்.

வ.உ.சிதம்பரம் பிள்ளை மணிமண்டபம் அமைவதற்கான இடத்தை தேர்வு செய்து கட்டுமானப் பணி உடனடியாகத் தொடங்கப்பட வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். •

வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு புதுப்பிக்க சிறப்புச்சலுகை

தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 1.1.99 முதல் 31.12.2000 வரை உள்ள காலத்தில் பதிவைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகை அரசால் வழங்கப் பட்டுள்ளது.

இதன்படி, மேற்படி காலத்திற்குள் புதுப்பிக்கத் தவறியவர்கள் 5.12.2001–க்குள் சென்னை–4, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலக உதவி இயக்குநர் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டையின் நகலுடன் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமோ மனு செய்து தங்களது பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளலாம். ★

விவசாயக் கடன் செலுத்த கால அவகாசம் நீட்டிப்பு

தமிழக விவசாயிகளின் நீண்ட கால கோரிக்கைகளை கருத்தில் கொண்டும், கடன் சுமையால் வாடும் தமிழக விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையிலும் கடந்த 13.6.2001 அன்று வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவற்றை ரூ.310.51 கோடி அளவிற்கு தள்ளுபடி செய்து அறிவிப்பு வெளியிடப் பட்டது. அதன்படி, கூட்டுறவு வங்கிகளில் விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த பணிகளுக்காக குறுகிய கால, மத்திய கால, மற்றும் மத்திய கால மாற்றுக் கடன்களில் 30.6.2000 அன்று நிலுவையாக உள்ள அசலையும் மற்றும் 1.7.2000 முதல் 31.8.2000 வரையிலான காலத்தில் செலுத்த வேண்டிய அனைத்து தொகைகளையும், 30.9.2001க்குள் செலுத்தும் கடன்தாரர்களுக்கு, வட்டி மற்றும் அபராத வட்டி முழுவதையும் ரூ.310.51 கோடி அளவிற்கு தள்ளுபடி செய்து தமிழக அரசு ஆணை பிறப்பித்திருந்தது.

தற்போது, காவிரி டெல்டா பகுதியில் குறுவை நெற்பயிர் அறுவடை செய்யும் தருவாயில் உள்ளதால், அறுவடை செய்த பின்னர் கூட்டுறவு கடன்களை செலுத்த வாய்ப்பு தரப்பட வேண்டுமென்றும், பொதுவாகவே தமிழகத்தின் ஏனைய பகுதிகளில் உள்ள விவசாயிகளும் கூட்டுறவு கடன்களை செலுத்த கூடுதல் கால அவகாசம் வேண்டுமென்றும் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர். இந்தத் திட்டத்தின் பலனை அனைவரும் முழுமையாகப் பெற்று பயனடைய வேண்டுமென்ற அடிப்படையில், தமிழக விவசாயப் பெருங் குடிமக்களின் இந்தக் கோரிக்கையினை ஏற்றுக் கொண்டு, இந்தத் திட்டத்தினை மேலும் இரண்டு மாத காலத்திற்கு அதாவது, 30.11.2001 வரை நீட்டித்து தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

• • •

கைத்தறித்துறை

சட்டப்பேரவையில்
மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்

திரு. **எஸ்.பி.சண்முகநாதன்**

கைத்தறி நெசவாளர் 60 வயதை அடையுமுன் இறக்க நேரிட்டால், அவர்களது வாரிசுதாரர்களுக்கு காப்பீட்டுத் தொகையாக அரசு ரூ.50,000 வழங்கி வருகிறது. இது தவிர, கோ–ஆப்டெக்ஸ் கருணைத் தொகையாக ரூ.10,000 ஆக மொத்தம் ரூ.60,000 ஆக வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் வழங்கப்பட்டு வரும் கருணைத் தொகை ரூ.10,000–ஐ ரூ.15,000 ஆக உயர்த்தி, மொத்தத் தொகை ரூ. 60,000–ஐ ரூ.65,000 ஆக உயர்த்தி வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். இத்தொகை பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான 15.9.2001 முதல் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களால், நெசவாளர்களின் நலன்களை பாதுகாக்கும் முகமாக இந்தியாவிலேயே முதன்முதலில் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதிய திட்டத்தினை 1.1.1992 முதல் அறிமுகப்படுத்தினார்கள். இத்திட்டத்தின்படி கைத்தறி நெசவாளர் 60 வயதினை கடக்குமுன் இறக்க நேரிட்டால் அவரது குடும்பத்தினருக்கு தற்போது மாதாந்திர குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.250 வழங்கப்படுகிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் இத்தொகை கூட்டப்படவே இல்லை. முதல்வர் அவர்கள் இந்த குடும்ப ஓய்வூதிய தொகையை ரூ.250–லிருந்து ரூ.350 ஆக உயர்த்தி வழங்கியுள்ளார்கள். இந்த உயர்வு பேரறிஞர் அண்ணாவின் பிறந்த தினமான 15.9.2001 முதல் நடைமுறைக்கு வரும்.

1992–1993ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்டு வரும் மைய அரசின் திட்டமான நெசவாளர் நல்வாழ்வு செறிவுத் திட்டத்தின்கீழ், மருத்துவச் செலவினங்களை திரும்ப பெறுவதற்கென மைய அரசு ஒரு நெசவாளருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,500 வீதம் தற்போது வழங்கி வருகிறது. இதற்கு ஈடாக முதல் தடவையாக இனி மாநில அரசின் பங்காக ரூ.1,500 சேர்த்து மொத்தம் ரூ.3,000 ஆக வழங்கப்படும். இந்த அறிவிப்பு 8 ஆண்டுகளுக்கு பிறகு முதல் தடவையாக வழங்கப்படுகிறது.

நெசவாளர் நல்வாழ்வு செறிவுத் திட்டத்தின் கீழ் கண் பரிசோதனை மற்றும் கண்ணாடி வாங்குவதற்கு மைய அரசு ஒரு நெசவாளருக்கு ரூ.190 (ரூ.40 + ரூ.150) வீதம் மான்யமாக வழங்குகின்றது. மைய அரசு வழங்கும் மானியத்திற்கு ஈடாக முதல் தடவையாக மாநில அரசும் தனது பங்காக இனி ரூ.190 சேர்த்து மொத்தம் ரூ.380 ஆக வழங்கப்படும்.

மக்கள் நல்வாழ்வு செறிவுத் திட்டத்தின் கீழ் மகப்பேறு உதவித்தொகையாக மைய அரசால் ரூ.500 வழங்கப்படுகிறது. இத்தொகைக்கு ஈடாக முதல் முறையாக மாநில அரசும் தனது பங்காக ரூ.500 சேர்த்து இனி மொத்தம் ரூ.1,000 ஆக வழங்கப்படும்.

நெசவாளர் நல்வாழ்வு செறிவுத் திட்டத்தின் கீழ் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்காக மைய அரசால் ரூ.100 உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்தொகைக்கு ஈடாக முதல் முறையாக மாநில அரசும் தனது பங்காக ரூ.100 சேர்த்து இனி மொத்தம் ரூ.200 வழங்கப்படும்.

தனி மகளிர் கைத்தறி கூட்டுறவு சங்கங்களுக்கு 100 சதவீதம் விற்பனை ஆதாரம்

தமிழ்நாட்டில் பெண் நெசவாளர்களை மட்டும் உறுப்பினர்களாகக் கொண்ட தனி மகளிர் கைத்தறி சங்கங்கள் 47 உள்ளது. இந்த சங்கங்கள் சரியாக இயங்காத காரணத்தால் மிகவும் நலிவடைந்த நிலையில் உள்ளன.



இந்த மகளிர் சங்கங்களை மீண்டும் இயக்கவும், புத்துயிர் அளிக்கவும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் மகளிர் அதிகார வழங்கல் ஆண்டான இவ்வாண்டு முதல் இச்சங்கங்களை தத்தெடுத்து இதில் உற்பத்தி செய்யப்படும் துணிகள் அனைத்தையும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனமே கொள்முதல் செய்யவும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகள் மேல்நிலைக் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் முகமாக டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே 10 ஆம் வகுப்பிலிருந்து முதுகலை பட்டப் படிப்பு மற்றும் தொழிற் கல்வி வரை ஒவ்வொரு படிப்பிற்கும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதேபோன்று எம்.டெக்., எம்.டி., எம்.எஸ், போன்ற படிப்புகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.3,000 வீதம் உதவித்தொகையாகவும், ஹோட்டல் நிர்வாகம் மற்றும் சமையல் தொழில்நுட்ப பட்டய படிப்பிற்கு ஆண்டொன்றுக்கு ரூ.2,000 வீதமும் தலா ஒரு மாணவன், ஒரு மாணவிக்கு வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இது 2001–2002 ஆம் கல்வியாண்டு முதல் உதவித் தொகை வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்தைய ஆட்சிக் காலத்தில் காஞ்சிபுரம், கும்பகோணம்,சேலம், இராசிபுரம் மற்றும் ஆரணி பகுதிகளிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் தேக்கத்தில் உள்ள பட்டுச் சேலை, வேட்டிகள் கோ–ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்ய, பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்போது தமிழக அரசு, கோ–ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்யும் அனைத்து கைத்தறித் துணிகளுக்கும் 20 சதவீதம் தள்ளுபடி மானியம் வழங்கி வருகிறது.

தற்பொழுது தமிழகத்தில் பட்டு மற்றும் பருத்தித் துணிகள் அதிக அளவில் தேங்கி இருப்பதன் காரணமாக, கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகரிக்கும் வகையில் தமிழக முதல்வர் அவர்கள் கோ–ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள இரண்டு ஆண்டுகளுக்கு மேலான பழைய சரக்குகளுக்கு கூடுதலாக 10% தள்ளுபடி, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.9.2001 முதல் பொங்கல் வரை அளித்து, அவை விற்கப்படும் என்று ஆணையிட்டுள்ளார்கள்.

இதனால் கைத்தறித் துணிகளின் விற்பனை அதிகரித்து, துணிகளின் தேக்கம் கணிசமான அளவிற்கு குறையும் என்று நம்புகிறேன். •

மக்களின் அமோக வரவேற்பைப் பெறும்

"ஊட்டி டீ"

நீலகிரி மாவட்டத்தின் விவசாயி பயிரான பசும் தேயிலை கடும் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. தேயிலை வீழ்ச்சியை கட்டுப்படுத்த தமிழக அரசு முடிவு செய்து நீலகிரி தேயிலையை அரசே கொள்முதல் செய்து அதனை தமிழகம் முழுவதும் பொது விநியோகத் திட்டத்தில் கடைகள் மூலமாக விற்பனை செய்ய கடந்த ஜூலை மாதம் தமிழக அரசு முடிவு எடுத்தது.

அதன்படி குன்னூரில் உள்ள 'இன்கோசர்வ்' கூட்டுறவு நிறுவனம் தேயிலை ஏலத்தில் பங்கேற்று மாதம் 2 இலட்சம் கிலோ தேயிலையை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து அந்த தேயிலையை கலவை செய்து அதனை 'ஊட்டி டீ' என்ற பெயரில் நியாவிலைக்கடைகளில் விற்பனை செய்ய தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள அனைத்து ரேசன் கடைகளிலும் விற்பனை செய்து வந்தது. தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களில் இது மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்று உள்ளது. இதன் தரம் நன்றாக உள்ளது. விலையும் குறைவாக உள்ளது. இதனால் மக்கள் இதனை விரும்பி வாங்கத் துவங்கி உள்ளனர்.

இந்த ஊட்டி தேயிலை மக்களிடையே அமோக வரவேற்பை பெற்றுள்ளது. அதனால் கடந்த இரு மாதங்களாக 2 இலட்சம் கிலோ தேயிலை மட்டுமே இன்கோசர்வ் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. ஆனால், இதற்கு கிராக்கி கூடியிருப்பதால் இனிமேல் மாதம் ஒன்றுக்கு 3 இலட்சம் கிலோ தேயிலை கொள்முதல் செய்து பொது விநியோக திட்டத்தில் கடைகள் மூலம் விற்பனை செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது,

தமிழகத்தை பொறுத்தமட்டில் திருநெல்வேலியில் ஆகஸ்ட் மாதத்தில் 8,270 கிலோ விற்பனை செய்யப்பட்டது. செப்டம்பர் மாதத்தில் 14,770 கிலோவும் அக்டோபர் மாதத்தில் 17,270 கிலோவும் ஆக மொத்தம் 40,310 கிலோ தேயிலை விற்பனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதேபோல் கன்னியாகுமரி, திருச்சி, சிவகங்கை, சேலம் போன்ற மாவட்டங்களில் ஊட்டி டீ விற்பனை மாதத்திற்கு மாதம் விற்பனை அதிகமாகி வருகின்றது.



தேயிலைக்கு ரூ.40 முதல் ரூ.48 வரை கிடைக்கிறது.

தேயிலைத்தூள் விலை ஏலத்தில் உயரத் துவங்கியுள்ளதால், பசுந்தேயிலையின் விலையும் அதிகமாக உயரத் துவங்கியுள்ளது. சால்ஸ்பெரி தேயிலை தொழிற்சாலையில் பசுந்தேயிலைக்கு ரூ.7/– கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் இத்தலார் தொழிற்சாலையில் ரூ.4.50 மட்டுமே கொடுக்கப்படுகிறது.

தேயிலை ஏலத்தில் நல்லத்தரமான தேயிலை இன்கோசர்வ் மூலம் கொள்முதல் செய்யப்படுவதால் தரமான தேயிலையை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளின் தேயிலைக்கு நல்ல விலை கிடைக்க ஆரம்பித்துள்ளது.

இன்கோசர்வ் நிறுவனம் தேயிலை ஏலத்தில் நேரடியாக பங்கேற்பதன் மூலம் தேயிலை தரகர்களின் ஆதிக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுவாக இலைரக தேயிலைத்தூளுக்குத்தான் ஏலத்தில் அதிகவிலை கிடைக்கும். டஸ்ட் ரக தேயிலைத்தூள் அதிக விலைக்கு போகாது. ஆனால் இன்கோசர்வ் நிறுவனம் அதிக அளவில் டஸ்ட் ரக தேயிலையை கொள்முதல் செய்ய துவங்கியுள்ளதால் டஸ்ட் ரக தேயிலையின் விலை இலை ரக (லீஃப்) தேயிலையை விட அதிகரிக்கத் துவங்கியுள்ளது.

இந்நிலையில் இன்கோசர்வ் மூலமாக உற்பத்தி செய்யப்படும் தேயிலை விற்பனையை அதிகரிக்க பல்வேறு விளம்பரங்கள் இந்த அரசு செய்து வருகின்றது.

தமிழகம் முழுவதும் உள்ள ரேசன் கடைகளுக்கு தேயிலை விநியோகிப்பதற்காக இதுவரை மாதத்திற்கு 200 மெட்ரிக் டன் தேயிலைத்தூள் குன்னூர் தேயிலை ஏலமையத்தில் இன்கோசர்வ் மூலம் கொள்முதல் செய்யப்பட்டது.

தமிழகத்தில் 29 மாவட்டங்களிலும் இதற்கு கிடைத்து இருக்கும் வரவேற்பை கருத்தில் கொண்டு இனிமேல் மாதத்திற்கு 300 மெட்ரிக் டன் தேயிலைத்தூள் கொள்முதல் செய்ய தமிழக அரசு முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 5.21 இலட்சம் கிலோ தேயிலை மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் செப்டம்பர் மாதத்தில் 14 இலட்சம் கிலோ தேயிலைத்தூள் கொள்முதல் செய்ய தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

தேயிலை கொள்முதலில் இன்கோசர்வ் நிறுவனம் ஈடுபட்டதைத் தொடர்ந்து தேயிலை விலை வீழ்ச்சி தடைப்பட்டுள்ளது. முன்பு டஸ்ட் ரகத்தில் கிலோ ரூபாய் 37.32 ஆக இருந்தது. தற்போது ரூபாய் 48.59 ஆக அதிகரித்துள்ளது. ஏலத்தில் தற்போது 20 சதவிகிதம் தேயிலையை கொள்முதல் செய்யும் இன்கோசர்வ் நிறுவனம் வரும் மாதங்களில் 50 சதவிகிதமான தேயிலைத்தூள் கொள்முதல் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 29 மாவட்டங்களில் ஊட்டி டீ விற்பனை கூடியுள்ளதால் இனிவரும் மாதங்களில் அதிக அளவு ஊட்டி டீ விற்பனைக்கு தரப்பட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள 29 மாவட்டங்களிலும் சேர்த்து கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 2 இலட்சத்து 1,035 கிலோவும், செப்டம்பர் மாதத்தில் 2 இலட்சத்து 13 ஆயிரத்து 720 கிலோவும் ஊட்டி டீ விற்பனைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த மாதத்தில் இதுவரை ஒரு இலட்சத்து 1,890 கிலோ ஊட்டி டீ விற்பனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இன்கோசர்வ் நிறுவனம் குன்னூர் மற்றும் கோவையில் நடைபெறும் தேயிலைத் தூள் ஏலத்தில் நேரடியாக பங்கேற்பதன் மூலம் தேயிலை தரகர்கள் தங்களுக்குள் கூட்டணி அமைத்து குறைந்த விலைக்கு தேயிலையை ஏலத்தில் எடுப்பது கட்டுபடுத்தப்பட்டிருப்பதுடன் தேயிலையின் விலை உயரவும் துவங்கியுள்ளது. தேயிலை ஏலத்தில் சுமார் 20 சதவிகிதம் தேயிலை இன்கோசர்வ் நிறுவனம் கொள்முதல் செய்து அதை ஊட்டி டீ என்ற பெயரில் விற்பனைக்கு கொண்டு வருகிறது. டஸ்ட் ரக தேயிலைதூள் அதிகம் கொள்முதல் செய்யப்படுகிறது.

தற்போது கூடலூர் பகுதியில் உள்ள சால்ஸ்பெரி இன்கோசர்வ் தேயிலை தொழிற்சாலை உள்பட அப்பகுதியில் உள்ள இன்கோ தேயிலை தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைத்தூள் மிகவும் தரமுடன் இருப்பதால் அந்த

– இரா. பாஸ்கரன்

செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர், உதகமண்டலம்.

பேருந்துகளின் தரத்தை மேம்படுத்துதல்

நடப்பு ஆண்டில் பழைய பேருந்துகளை மாற்றி ரூபாய் 150 கோடி முதலீட்டில் 1,550 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு அனுமதி.

பயணிகளுக்கு வசதி

சென்னை மாநகரில் குறிப்பிட்ட வழித்தடங்களில் மகளிர் ஓட்டுநர் மற்றும் மகளிர் நடத்துநர்களைக் கொண்டு மகளிர் பேருந்துகள் இயக்கப்படும்.

முதியவர்கள், மகளிர், குழந்தைகள் மற்றும் உடல் ஊனமுற்றோர் பயண வசதிக்காக தாழ்வான வாயிற்படி உள்ள பேருந்துகளை சென்னை நகரில் சாலையின் அமைப்பைப் பொறுத்து குறிப்பிட்ட தடங்களில் இயக்கப்படும்.

பேருந்துகளின் தரத்தை மேம்படுத்த 1,550 புதிய பேருந்துகள்

சட்டப்பேரவையில்
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
திரு.நயினார் நாகேந்திரன்

முக்கியமான பேருந்து நிலையங்களில், முக்கிய வழித்தடங்களில் அடுத்த பேருந்து புறப்படும் நேரம் மின் அணு அறிவிப்பு பலகை மூலம் அறிவிக்கப்படும்.

நெடுந்தூரப் பயணிகளின் வசதிக்காக அரசு விரைவுப் பேருந்துகள் படிப்படியாக மிதவைப் பேருந்துகளாக (ஏர் சஸ்பென்சன்) இயக்கப்படும்.

தற்போது நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள போக்குவரத்துக் கழகங்களால் நடத்தப்படும் உணவகங்களின் தரம் உயர்த்தப்பட்டு சுகாதார வசதிகள் மேம்படுத்தப்படும். போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அனுமதிக்கப்படாத உணவகத்தில் நிற்க தடை விதிக்கப்படும்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் பேருந்துகளில் அடுத்து வரும் பேருந்து நிறுத்தம் மற்றும் நேரம் போன்றவை மின்னணு கருவி மூலம் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் நலனுக்காக தெரிவிக்கப்படும்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பயணிகளின் வசதிக்காக இணையதளம் (Internet) மூலம் பதிவு செய்யும் முறை படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும்.

மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் தற்போது இயக்கப்பட்டு வரும் குறுநடை பேருந்துகள் (Feeder Service) புறநகர் பகுதியில் வாழும் பயணிகளின் வசதிக்காக மேலும் அதிகரிக்கப்படும். மாநகரப்

போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் அனைத்து ஓட்டுநர்களுக்கும் ஐந்து வருடத்திற்கு ஒருமுறை பாதுகாப்புடன் ஓட்டும் முறை பற்றி சிறப்பு பயிற்சி சாலை போக்குவரத்து நிறுவனத்தால் அளிக்கப்படும்.

பேருந்துகள் பழுதாகி சாலையில் நிற்க நேரிட்டால் இரவு நேரங்களில் மற்ற ஊர்திகள் அவற்றின் மீது மோதி விபத்து ஏற்படுவதைத் தடுக்க பழுதான பேருந்துகளுக்கு அருகில் கூம்பு வடிவிலான பிரதிபலிப்பான்கள் (Reflective Cones) வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் சொகுசுப் பேருந்துகளுக்கு பயணிகளிடையே அதிக வரவேற்பு இருப்பதால் பயணிகளின் வசதிக்காக சொகுசுப் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

எழும்பூர் ரயில் நிலையத்தில் பயணிகளின் வசதிக்காக பேருந்து வளாகம் (சென்ட்ரல் ரயில் நிலையத்தில் உள்ளது போல்) அமைக்கப்படும்.

தாம்பரம் ரயில் நிலையத்தின் உள்ளிருந்து மாநகரின் பல இடங்களுக்கும் பேருந்து வசதி சென்ட்ரல் ரயில் நிலையத்தில் உள்ளது போல ரயில்வே உதவியுடன் அமைக்கப்படும்.

அரசு விரைவுப் பேருந்துகளில் பதிவு செய்யப்பட்ட இருக்கைகள் நீங்கலாக , மீதமுள்ள இருக்கைகளில் பெண் பயணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொழிலாளர் நலன்

ஈரோடு பொறியியல் கல்லூரியில் தகவல் தொழில்நுட்ப பட்ட படிப்பு ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் பொது வேலை நிறுத்தத்தின் போது பணிக்கு வராதிருந்து, அவர்கள் மீது எவ்வித குற்றவியல் வழக்குகள் இல்லாதிருக்கும் பட்சத்தில், அவர்கள் பணிக்கு வராத நாட்களைத் தகுதியுள்ள விடுப்பாக கருதப்படும். தற்போது பணியிலிருக்கும் தொழிலாளர்களுக்கு மட்டுமே இது பொருந்தும்.

விபத்து தவிர்ப்பு உத்திகள்

தென் மாவட்ட மக்களுக்கு பயன்படும் வகையில் இலகுரக மற்றும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையம் ரூபாய் 36 இலட்சம் முதலீட்டில் திருநெல்வேலியில் துவங்கப்படும்.

மத்திய தேர்வாணையம் அமைத்தல்

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் தேவைப்படும் ஓட்டுநர், நடத்துனர் மற்றும் அனைத்துப் பிரிவு பணியாளர் மற்றும் அலுவலர்களைத் தேர்வு செய்வதற்கு மத்திய தேர்வாணையம் ஒன்று அமைத்து தேர்ந்தெடுக்கப்படுவர். இத் தேர்வாணையம் சாலை போக்குவரத்து நிறுவனத்தின் நேரடி கண்காணிப்பில் இயங்கும்.

பொது

போக்குவரத்துக்கழகங்களில் அனைத்துத் துறை பதிவேடுகள் கணினி மயமாக்கப்படும்.

அறிவிப்புகள்

தென்காசியில் இயங்கி வரும் போக்குவரத்துத் துறை பகுதி அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக நிலை உயர்த்த அரசு முடிவெடுத்துள்ளது. இப்பகுதி தமிழ்நாடு கேரள எல்லைப்பகுதியில் உள்ளது. மேலும் சுற்றுலா மையமான குற்றாலம் தென்காசி நகரை ஒட்டியே அமைந்துள்ளது. எனவே, இங்கு வருடம் முழுவதும் வாகனப் போக்குவரத்து அதிகம் உள்ளது. பொது மக்கள் மற்றும் வாகன உரிமையாளர்கள் நலனை மனதில் கொண்டு இந்த ஆண்டு இங்குள்ள பகுதி அலுவலகத்தை R.T.O. அலுவலகமாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை கருத்தில் கொண்டு மன்னார்குடி, உடுமலைப்பேட்டை பகுதிகளில் புதியதாக பகுதி அலுவலகங்கள் துவங்க அரசு முடிவு செய்துள்ளது. ★

விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில்

குடிநீர் மற்றும் சுகாதாரம்

டேனிடா என்ற வார்த்தை அடிக்கடி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒரு சிலர் இந்தப் பெயரில் ஏதோ ஒரு திட்டம் தமிழகத்தில் செயல்படுகிறது என்ற அளவில் மட்டும் அறிந்திருக்கிறார்கள். ஆனால் அநேகருக்கு இத்திட்டத்தின் முழு விவரங்களும் தெரியாது என்பதுதான் உண்மை நிலை. இந்தக் கட்டுரையின் மூலம், டென்மார்க் நாடு அளிக்கும் நிதி உதவியைக் கொண்டு தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் மற்றும் சுகாதார திட்டத்தின் விவரங்கள், செயல்பாட்டுக் கொள்கைகள், அடைந்துள்ள முன்னேற்றங்கள், வெற்றிகரமான சாதனைகள் போன்றவை குறித்து எல்லோரும் தெரிந்துகொள்ளும் வகையில் அறிவிக்கவே ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

டென்மார்க் நாடு ஐரோப்பா கண்டத்தில் உள்ளது. இது ஜெர்மனிக்கும் ஸ்வீடனுக்கும் இடையில் அமைந்துள்ளது. பெரும்பாலும் தீவுகளால் ஆனது, டென்மார்க் ராணியின் தார்மீக வழிகாட்டுதலுடன், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தின் மூலம் மிகச் சிறந்த ஜனநாயக ஆட்சி நடைபெறுகிறது. இந்த நாட்டின் ஜனத்தொகை சுமார் 55 இலட்சம். இது நம் சென்னை மாநகராட்சியின் மக்கட்தொகைக்கு ஓரளவு சமமாகும். டென்மார்க் சமூக பொருளாதார முன்னேற்றத்தில் சிறந்து விளங்குகிறது. வேளாண்மை, கால்நடைகள் வளர்த்தல், பால்வளம் பெருக்குதல், மீன் பிடித்தல் போன்றவை இந்நாட்டின் முக்கிய தொழில்களாகும்.

இவர்களது ஆண்டு நிதி அறிக்கையில், மொத்த வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டுத் தொகையில் 1% (சதவீதம்) நலிந்த மற்றும் முன்னேறி வரும் நாடுகளுக்கு அபிவிருத்தி திட்டங்களுக்கு உதவித் தொகையாக வழங்குவதற்கு ஒதுக்கப்படுகிறது.

வெளிநாட்டு விவகார அமைச்சரகத்தின் கீழ் டேனிடா இயங்கி வருகிறது. வறுமையைக் குறைத்தல், ஆண்–பெண் இருபாலாரையும் சமமாக பாவித்தல், சுற்றுச் சூழலை மேம்படுத்துதல், மக்கள் பங்கேற்புடன் சிறந்த நிர்வாகம் நடத்துதல் ஆகியவை டேனிடாவின் மிகச் சிறந்த கொள்கைகளில் சில.

டென்மார்க் நாடு, தங்களது நல்லெண்ணத்தையும் ஆதரவையும் மற்ற நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் பொருளாதாரத் தேவையுள்ள வளரும் நாடுகளுக்கு வேளாண்மை, கால்நடை அபிவிருத்தி, கல்வி, மருத்துவ சுகாதாரம், சுற்றுப்புற சூழல் மேம்பாடு, குடிநீர் வழங்கல், பொது சுகாதாரம் போன்ற துறைகளின் அபிவிருத்தி திட்டங்களுக்கென கடந்த முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளாக நிதி உதவியும் அனுபவ ரீதியான ஆலோசனைகளையும் அளித்து வருகிறது. "டென்மார்க் தேசத்தின் அகில உலக அபிவிருத்திக்கான (நிதி) உதவி'' (DANISH INTER NATIONAL DEVELOPMENT ASSISTANCE) என்ற சொற்றொடரின் சுருக்கப் பதம்தான் DANIDA "டேனிடா'' என்பது. மேற்சொன்ன அபிவிருத்தித் துறைகளில், மற்றெல்லாவற்றையும் விட, குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டிற்குத் தான் இந்த திட்டம் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கும் மேலாக குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றுவதற்கென, அகில உலக ரீதியில், குறிப்பாக ஆப்ரிக்கா கண்டத்திலும், ஆசியாவிலும், சுமார் 40 வளர்ந்து வரும் நாடுகளுக்கு நிதியுதவி அளித்துள்ளது.

முக்கியக் குறிக்கோள்கள் யாதெனில்

★ பின் தங்கியுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் அனைவர்க்கும் சரிசமமான அளவில் குடிநீர் கிடைக்கச் செய்ய வேண்டும். பின்வரும் சந்ததியின் நலனை கருத்தில் கொண்டு சுற்றுப்புற சூழலை பாதுகாக்கச் செய்ய வேண்டும்.

★ நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமுதாய நலம் மேம்பாடு அடைய வேண்டும். குறிப்பாக குடிநீருக்காக பெண்கள் மற்றும் சிறுவர் சிறுமியர் வெகுதூரம் சென்று குடங்களில் தண்ணீர் சுமந்து வரும் நிலை/சுமை மாறி அதனால் ஏற்படும் கால விரயமும் தவிர்க்கப்பட வேண்டும், மற்றும்

★ சுத்தமான குடிநீர் மற்றும் மேம்பாடுடைய சுகாதாரம் கிடைக்கச் செய்வது மட்டுமல்லாமல் அவைகளை நிலைத்து பராமரிக்க வழிவகை செய்ய வேண்டும் என்பதே. தற்பொழுது நமது நாட்டில் குடிநீர் சுகாதார திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு, மத்திய பிரதேசம், ஒரிஸா, கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு ஆகிய நான்கு மாநிலங்களுக்கு ''டேனிடா'' நிதி உதவி அளித்து வருகிறது. தமிழ்நாட்டில் இத்திட்டம் கடலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய இரு மாவட்டங்களிலும் அடங்கியுள்ள 35 ஊராட்சி ஒன்றிய கிராமங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆரம்ப கட்டத்தில் 1990ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 1996ஆம் ஆண்டு செப்டம்பர்முடிய ஆறு ஆண்டுகளில், தென் ஆற்காடு மாவட்டத்தின் கடலோரப் பகுதி வட்டாரங்களான மரக்காணம் மற்றும் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைகளுக்கு உட்பட்ட கிராமங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன் மொத்த மதிப்பீடு ரூபாய் 8 கோடி. இந்த முன்னோடி திட்டத்தின் அனுபவத்தையும், அடைந்த வெற்றியையும் பின்பற்றி அதன் தொடர்ச்சியாக 1996ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் இத்திட்டம் ''மக்கள் முன்வந்து கேட்கும்'' அடிப்படையில், அவர்களின் நிதி பங்கேற்புடனும், இணைந்த செயல்பாடு மற்றும் ஆலோசனையுடன், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது நிறைவேற்றப்படும் இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூபாய் 42.97 கோடியாகும். இதில் மக்கள் பங்குத் தொகையாக ஏற்க வேண்டியது ரூபாய் 3.91 கோடி மட்டுமே. தமிழக அரசு ஏற்கும் ஈட்டு மானியத் தொகை ரூபாய் 5.46 கோடி. டேனிடா அளிக்க ஒப்பந்தம் செய்து கொண்ட நிதி உதவித் தொகை ரூபாய் 33.6 கோடி. தமிழக அரசின் நிதியுடன் செயல்படுத்தப்படும் குடிநீர் மற்றும் சுகாதாரப் பணிகளுக்கென ரூபாய் 21.84 கோடியும் நேரடியாக டேனிடா செயல்படுத்தும் இதர பணிகளான பயிற்சிகள், தகவல் தொடர்பு மற்றும் நிர்வாகச் செலவுகளுக்காக ரூபாய் 11.76 கோடியுமாக சேர்ந்து ரூபாய் 33.6 கோடி இத்திட்டத்திற்கு வழங்குகிறது.

திட்டத்தின் வழியாக நிறைவேற்றப்படுகின்ற பணிகள் அவற்றுக்கு ஆகும் செலவினங்கள், உத்தேச மதிப்பீடுகள், மக்கள் ஏற்கும் நிதி பங்கீட்டுத் தொகை, தமிழக அரசு அளிக்கும் நிதி, டேனிடாவின் பங்குத் தொகை போன்ற விவரங்கள் கீழே விவரிக்கப்படுகின்றன.

கிராம குடிநீர் திட்டம் : கிராமங்களில் பழுதடைந்து இயங்காத நிலையிலுள்ள நீர் ஆதாரங்களை (கைபம்ப், நீர்த்தேக்கத் தொட்டி போன்றவை) புதுப்பித்து / செப்பனிட்டு மீண்டும் இயங்கச் செய்யவும், கிராம மக்களின் முழு தேவையையும் பூர்த்தி செய்யும் வகையில் புதிய ஆழ்குழாய் கைபம்புகள் அமைத்தல், புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தல், குழாய்கள் விஸ்தரிப்பு செய்தல், பொதுக் குழாய்கள் கட்டித் தருதல் போன்ற பணிகள் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு ஆகும் மொத்த செலவினத்தில் (ஏழில் ஒரு பங்கு) 1/7 கிராம மக்கள் பங்குத் தொகையாக ஏற்க வேண்டும். மீதமுள்ள 6/7 தொகையில் 20 சதவிகிதம் தமிழக அரசின் பங்காகவும் 80 சதவிகிதம் டேனிடாவின் பங்காகவும் ஏற்றுக்கொள்ளப்படும்.

சுகாதார திட்டம்: இத்திட்டத்தின் அடிப்படையில் தனியார் வீடுகளில் கழிவறைகள் மற்றும் பள்ளிகளில் கழிப்பிடங்கள் (தண்ணீர் வசதியுடன்) அமைத்துக் கொள்வதற்கு மானியமும் ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.



தனியார் வீட்டுக் கழிவறை கட்டடங்கள் : கிராமங்களில் வாழும் மக்கள் குடியிருப்புகளில் தனியார் கழிவறை கட்டடங்கள் கட்டிக் கொள்ள தாமாகவே முன் வந்து விண்ணப்பிக்கும் (குறைந்த பட்சம் 25 குடும்பங்களைக் கொண்ட தொகுப்பு) மக்களுக்கு, டேனிடா ஏற்படுத்தியுள்ள வடிவமைப்புகளின்படி கட்டப்படும் கழிப்பறை ஒவ்வொன்றிற்கும் ரூபாய் 2,000 வீதம் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. ஆனால் இதற்கு ஆகும் செலவினத்தை பயனாளிகள் முன்னதாக ஏற்றுக்கொண்டு, கழிவறை கட்டி முடித்த பின்புதான் ஊக்கத் தொகை வழங்கப்படும். இவ்வளவு அதிகத்

தொகை தனியார் கழிவறை கட்டிக் கொள்வதற்கு மானியமாக/ஊக்கத் தொகையாக வழங்குவது வேறெந்த திட்டத்திலும் இல்லை. அளிக்கப்படும் ஊக்கத்தொகையில் ரூ.1,600 டேனிடா நிதியின் மூலமாகவும், ரூ.400 தமிழக அரசின் மானியமாகவும் ஏற்கப்படுகிறது.

பள்ளிக் கழிவறைகள் : கிராமங்களில் அமைந்துள்ள அரசு பள்ளிகள், தனியார் பள்ளிகள் போன்ற அனைத்து பள்ளிகளிலும் பயிலும் மாணவ மாணவியர் உபயோகிப்பதற்கென கழிவறைகள் கட்டிக் கொள்வதற்கு நிதிஉதவி வழங்கப்படுகிறது தேவைப்படும் பள்ளிகளுக்கு தண்ணீர் வசதி செய்து கொள்ளவும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. மாணவ மாணவியரின் எண்ணிக்கைக்கு தக்கவாறு உபயோகிப்பதற்கென டேனிடா திட்ட அலுவலகத்தின் மூலம் இரண்டு வடிவமைப்புகள் பரிந்துரைக்கப்படுகின்றன. அவற்றின் மதிப்பீடுகள் ரூ.65,000/– மற்றும் ரூ.10,000/– ஆகும். பொருத்தமான வடிவமைப்பை அவர்களே தேர்ந்தெடுக்கலாம். பெற்றோர் ஆசிரியர் கழகம் அல்லது பள்ளி நிர்வாகம் அல்லது சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி, மதிப்பீட்டுத் தொகையில் 20 சதவிகிதம் பங்குத் தொகையாக செலுத்த வேண்டும். மீதமுள்ள தொகை 60:40 என்ற விகிதத்தில் முறையே டேனிடா நிதியிலிருந்தும், அரசு நிதியிலிருந்தும் ஏற்கப்படும்.

மேற்கூறிய மூன்று விதமான பணிகள் தவிர, டேனிடாவின் நேரடி செலவினத்தின் மூலம், கிராமங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் ஆண், பெண் இரு பாலருக்கும் கைபம்பு மெக்கானிக்குகள், விசை பம்பு ஆபரேட்டர்கள், உதவியாளர்கள், கொத்தனார் ஆகிய தொழில் சம்பந்தமான பயிற்சிகள் அளிக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவைப்படும் தொழிற் கருவிகளும் வழங்கப்படுகின்றன.

இதுவரை என்னென்ன பணிகளுக்கு எந்த விதத்தில் செலவினம் ஏற்கப்படுகிறது என்பதை அறிந்து கொண்டோம். இனி மேலே விவரித்த பணிகளுக்கு திட்டத்தின் மூலம் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்து இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அந்த நிதி, எவ்வாறு திட்ட அலுவலர்களை வந்தடைகிறது என்பதையும் பார்ப்போம். 1996ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் துவக்கப்பட்ட இந்த புதிய திட்டம் முதலில் நான்கு ஆண்டு காலத்தில் ரூபாய் 42.97 கோடி மதிப்பீட்டுத் தொகையில் செய்து முடிக்க, டென்மார்க் அரசும் இந்திய அரசும் இசைவு அளித்து ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் திட்டம் நடைமுறைபடுத்துவதில் ஆரம்ப கட்டத்தில் மிகவும் தொய்வு ஏற்பட்டதால் நான்கு ஆண்டு முடிவில் அதாவது சென்ற ஆண்டு (2000) செப்டம்பர் முடிய ரூபாய் 10 கோடி மட்டும் செலவு செய்ய முடிந்தது. ஆகவே மீண்டும் திட்ட காலத்தை 2004–ஆம் ஆண்டு மார்ச் வரை நீட்டிப்பு செய்து குறியீட்டின்படி வேலைகளைச் செய்து முடித்து நிதியுதவி பெற மறு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது.

திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூபாய் 42.97 கோடி என்று முதலில் அறிந்தோம். இதில் கிராம அளவில் அமைக்கப்படும் குடிநீர் திட்டங்கள் தனியார் வீட்டுக் கழிவறைகள் மற்றும் பள்ளிக் கழிவறைகளுக்கு மட்டும் ஆகும் செலவினத்தின் மதிப்பீடு ரூபாய் 31.21 கோடி. இதற்கு டேனிடா அளிக்கும் நிதி உதவி 21.84 கோடியாகும். இந்தத் தொகை மத்திய அரசு வழியாக மாநில அரசின் நிதித் துறைக்கு வந்து சேருகிறது. இது தவிர மற்ற பணிகளுக்கு அதாவது, பயிற்சிகள் நடத்துவது, விளம்பரங்கள், கருத்தரங்குகள், வாகனம், அலுவலகப் பணியாளர் நிர்வாகம் போன்ற இனங்களின் செலவினத்தை ஏற்கும் வகையில் டென்மார்க் தூதரகத்திலிருந்து நேரடியாக திட்ட முதன்மை ஆலோசகருக்கு வாங்க ரூபாய் 11.76 கோடி ஒதுக்கீடு



செய்யப்பட்டுள்ளது. ஆக, திட்டத்தின் பங்கில் டேனிடா ஏற்கும் மொத்த நிதியுதவித் தொகை (21.84 + 11.76) ரூபாய் 33.6 கோடி. இந்த நிதி உதவி தவணை முறையில் ஆண்டுதோறும் தேவைக்கு ஏற்ப முன் பணமாக அளிக்கப்படுகிறது.

மத்திய அரசின் மூலமாக தமிழக அரசுக்கு வந்து சேரும் தொகையுடன் தமிழக அரசின் பங்குத் தொகையும் சேர்த்து, திட்டத்தை மாவட்ட அளவில் செயல்படுத்தும் விழுப்புரம் மற்றும் கடலூர் திட்ட அலுவலர்களுக்கு, அரசால் பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

மார்ச் 2001 வரை 180 குடிநீர் திட்டங்களும், 11,050 தனியார் கழிவறை கட்டடங்களும், 317 பள்ளிக் கழிவறைகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. திட்டமிடப்பட்டுள்ள படி எஞ்சியுள்ள பணிகளை மேலே குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். களப் பணியாளர்கள் முழு வீச்சில் செயல்படுகின்றனர். •

பதிவுத்துறை

வருவாய்த்துறை அமைச்சரால் சட்டப்பேரவைமுன் வைக்கப்பட்ட மானியக் கோரிக்கை எண்.5 முத்திரைத்தாள் நிருவாகம் மற்றும் மானியக் கோரிக்கை எண்.6 பத்திரப்பதிவு குறித்த விவாதத்தின்போது, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு.அப்துல் லத்தீப் அவர்கள், வாணியம்பாடியில் தற்பொழுது உள்ள சார்பதிவாளர் அலுவலகம் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அச்சார்பதிவகத்திற்குப் புதிதாக ஒரு கட்டடம் கட்டப்படலாம் என்று கேட்டுக்கொண்டார். சட்டமன்ற உறுப்பினர் திரு.அப்துல் லத்தீப் அவர்களின் மேற்கூறிய கோரிக்கைக்கு இணங்கி, வாணியம்பாடியில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு, அப்பொழுது அவையில் இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார் என்று வருவாய்த்துறை அமைச்சர் அவையில் தெரிவித்தார்.

பதிவுத்துறையைக் கணினி மயமாக்கலின் ஒரு பகுதியாக வருவாய் அலுவலகங்களின் நில பதிவு தகவல் தொகுப்புகளுடன் பதிவுத் துறைக்கு இணைப்பு ஏற்படுத்தி மேம்பட்ட சேவையை அளிப்பதற்காக ரூ.60 இலட்சம் ஒப்பளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கொள்கை விளக்கக்குறிப்புகளில் உள்ள சிறப்பு அம்சங்கள்

தனித்துணை ஆட்சியரால் (முத்திரை) நிர்ணயம் செய்யப்பட்ட சொத்து மதிப்பு குறித்து சம்பந்தப்பட்ட நபர்களுக்குத் திருப்தி ஏற்படவில்லை எனில், தனித்துணை ஆட்சியரின் (முத்திரை) முத்திரைத் தீர்வை நிர்ணய ஆணையை எதிர்த்து, அவர்கள் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரியான பதிவுத்துறைத் தலைவருக்கு மேல்முறையீடு செய்து கொள்ள முடியும். மேலும், வருவாய் கட்டுப்பாட்டு தலைமை அதிகாரி என்ற முறையில், சுயவிருப்பின் அடிப்படையில் (Suomotu) சீராய்வு செய்யும் அதிகாரமும் பதிவுத்துறைத் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அருமனை சார்பதிவகத்திற்கான ஒரு புதிய கட்டடம் ரூ.20.10 இலட்சம் செலவில் கட்டப்படும்.

கும்பகோணம், மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள பதிவுறு அறை ரூ.1.65 இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்படும்.

சீட்டு நிதிகள்

சட்டத்திற்குப் புறம்பாக நடத்தப்படும் சீட்டுகள் மற்றும் அங்கீகாரமற்ற சீட்டுகள் குறித்து பொதுமக்களை எச்சரிக்கை செய்வதற்காக சீட்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சீட்டுக்களைக் குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறையேனும் ஆய்வு (review) செய்யுமாறு கள அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ★

வரித்தும் வரிகுறைப்பும்

வரிச் சலுகை

ஏழை எளிய மக்கள் பயன்படுத்தும் கைப்பம்புகள், அடிச்சுரக்குகள், மண்ணெண்ணெய் விளக்குகள் மற்றும் அடுப்புகளின் உதிரி பாகங்கள் ஆகியவற்றின் மீதான வரி தற்போது அறவே நீக்கப்பட்டு உள்ளது.

★ சைக்கிள் பூட்டுகள் மற்றும் இலவம் பஞ்சு விதைகள் மீதான வரி 11 விழுக்காட்டில் இருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டு உள்ளது.

★ காகிதக் கோப்பைகள் மற்றும் குறிப்பிடப் படாத சாயங்கள் மீதான வரி 11 விழுக்காட்டில் இருந்து 8 விழுக்காடாக குறைக்கப்பட்டு உள்ளது.

★ கூட்டுறவு பால் சங்கங்கள் விற்பனை செய்யும் அட்டைப் பெட்டியில் அடைத்து விற்பனை செய்யும் பாலுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆவின் நிறுவனம், பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் பயன்பெறுவர்.

★ மேலும், ரூபாய் ஐம்பதுக்குக் குறைவான மதிப்புள்ள காலணிகளுக்கு இருந்த வரிவிலக்கை, ரூபாய் நூறு வரை சில்லறை விற்பனை விலையுள்ள காலணிகளுக்கு நீட்டிக்கப்படுகிறது. ★



திட்டம் அரசு திட்ட நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு 197 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் 6 நிலையங்கள் கட்ட அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

மண்டல அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்ட

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அத்தியாவசிய பொது நலப் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்த 30 மாவட்டத் தலைநகரங்களிலும் செயல்படுகின்ற மண்டல அலுவலகங்களுக்காக 17 மாவட்டங்களில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. எஞ்சிய மாவட்டங்களில் சொந்த கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. நாகப்பட்டினம், கரூர், சேலம் மாவட்டங்களில் நிலம் தேர்வு செய்யப்பட்டவுடன் பணி மேற்கொள்ளப்படும்.

கிடங்குகளில் அலுவலக அறைகள் மற்றும் சுமை தூக்குவோருக்கு ஓய்வு அறைகள்

நடப்பு ஆண்டில் குடவாசல், வேதாரண்யம், தஞ்சை பிள்ளையார்பட்டி, பேராவூரணி, ஆலங்குடி, பாபநாசம், திருத்துறைப்பூண்டி, பெரம்பலூர், முசிறி மற்றும் வேலூர் ஆகிய 10 கிடங்கு வளாகங்களில் அலுவலக அறைகளும், மேலும் குடவாசல், வேதாரண்யம், தஞ்சை பிள்ளையார்பட்டி, ஆலங்குடி, பாபநாசம், திருத்துறைப்பூண்டி, வேலூர், அரக்கோணம், திண்டிவனம் மற்றும் பொள்ளாச்சி ஆகிய 10 கிடங்கு வளாகங்களில் சுமை தூக்கும் பணியாளர் ஓய்வு அறைகளும் ரூ.35 இலட்சம் செலவில் கட்டப்படும். •

புதிய கிடங்குகள் கட்ட

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசிய பொருட்கள் சேமிப்புக்கென நடப்பாண்டில் கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, நீடாமங்கலம், வேப்பன்தட்டை, பெரியகுளம், ஆண்டிப்பட்டி, போடிநாயக்கனூர் ஆகிய 7 வட்டங்களில் தலா ரூ.33 இலட்சம் மதிப்பீட்டில் செயல்முறைக் கிடங்குகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய நெல் கொள்முதல் நிலையங்கள் கட்ட

காவிரி நீர்ப்பாசன பகுதி விவசாயப் பெருங்குடி மக்களின் நலனுக்கென ஆண்டுதோறும் சம்பா மற்றும் குறுவைப் பருவங்களில் இயக்கப்படுகின்ற 950 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கென சேமிப்பு மற்றும் உலர்கல வசதிகளுடன் நிரந்தரக் கட்டடங்கள் கட்டும்

உணவுத்துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட திட்டங்கள்

வீட்டு மருத்துவ முறைகள்

காய்ச்சல்

★ கைபிடி அளவு நில வேம்பு இலை, 5 கிராம் மிளகு, 5 கிராம் எடையுள்ள தோல் நீக்கிய இஞ்சி ஆகியவைகளை நன்றாக நைத்து இரண்டு டம்ளர் தண்ணீரில் கொதிக்க வைத்து அரை டம்ளர் தண்ணீராக சுண்ட வைத்து காலை மாலை இரு வேளை குடித்துவர டைபாய்டு காய்ச்சல் குணமாகும்.

★ கைபிடி அளவு மிளகு எடுத்து கருக வறுத்து பின்பு தூளாக்கி அரைத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கொதிக்க வைத்து அரை டம்ளராக சுண்ட செய்து இரண்டு தேக்கரண்டி தேன் விட்டு காலை மாலை இரு வேளை குடித்துவர மூன்று தினங்களில் சுரம் தீரும்.

★ துளசி இலை 10 கிராம், மிளகு 5 கிராம் எடுத்து இரண்டையும் மைய அரைத்து உளுந்தளவு மாத்திரைகளாக செய்து காலை மாலை இருவேளை தேனில் குழைத்துக் கொடுக்க காய்ச்சல் குணமாகும்.

★ கைபிடி அளவு தும்பை பூவை ஒரு பாத்திரத்தில் போட்டு வதக்கி அதில் ஒரு டம்ளர் தண்ணீர் ஊற்றி நன்றாக கொதிக்க வைத்து வடிக்கட்டி கால் டம்ளராக காய்ச்சி அதில் இரண்டு தேக்கரண்டி தேன் கலந்து குடிக்க சீதளத்தால் வந்த காய்ச்சல் குணமாகும்.

ஜலதோஷம்

★ மஞ்சளைச் சுட்டு புகையை நுகர ஜலதோஷம் தீரும்.

★ ஆடா தொடை இலை சாற்றில் பனங்கற்கண்டு சேர்த்து காய்ச்சி, தேன் பதத்தில் இறக்கி அரை டம்ளர் வெந்நீரில் இரண்டு தேக்கரண்டி மேற்கண்ட

மணப்பாகை ஊற்றி கொடுக்க நீர் கோர்வை தீரும்.



★ ரோஜாபூவின் இதழ், காட்டு சீரகம் ஆகியவற்றை வகைக்கு 5 கிராம் எடுத்து அரைத்து அதில் இரண்டு சிட்டிகை அளவு மெல்லிய துணியில் வைத்து முகர்ந்து வர ஜலதோஷம் போகும்.

★ சுக்கும் மிளகும் சம அளவு எடுத்து இரண்டு வெற்றிலை யுடன் சேர்த்து அரைத்து ஒரு டம்ளர் தண்ணீர் விட்டு கொதிக்க காய்ச்சி அரை டம்ளராக்கி 10 கிராம் பனங்கற்கண்டை சேர்த்து கொடுக்க எளிதில் ஜலதோஷம் குணமாகும்.

இருமல்

★ 10 கிராம் மிளகை நன்றாக இடித்து ஒரு டம்ளர் தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து கால்

டம்ளர் தண்ணீராக சுண்ட செய்து வடிகட்டி, அதில் இரண்டு தேக்கரண்டி தேன் சேர்த்துக் குடிக்க வரட்டு இருமல் நிற்கும்.

★ சிற்றரத்தை 5 கிராம் எடுத்து நைத்து ஒரு டம்ளர் தண்ணீரில் நன்றாக கொதிக்க வைத்து, வடிகட்டிகாலை மாலை இருவேளை அரை டம்ளர் வீதம் சர்க்கரை சேர்த்துக் கொடுக்க இருமல் குணமாகும்.

★ கற்பூரவல்லி இலை சாற்றுடன் சம அளவு தேன் சேர்த்து மூன்று வேளை சாப்பிட இருமல் நிற்கும்.

★ வில்வ இலை, துளசி இலை ஆகியவற்றை வகைக்கு கைபிடி அளவு எடுத்து சாறு பிழிந்து நல்லெண்ணெயில் சேர்த்து காய்ச்சி வடிகட்டி இரண்டு தேக்கரண்டி அளவுக்கு வாயில் விட்டு தொண்டையில் படும்படி கொப்பளித்து கீழே துப்பிவிட வேண்டும். இப்படி தொடர்ந்து செய்துவர உள்நாக்கு வரளுவதால் உண்டாகும் இருமல் நிற்கும்.



தலைவலி

★ சுத்தம் செய்த கரிசலாங்கண்ணி இலையை கைபிடி அளவும் 5 கிராம் மிளகும் இரண்டு பூண்டு பல்லும் சிறிது உப்பும் சேர்த்து மை போன்று அரைத்து அதை மூன்று சம அளவாக பிரித்து காலையில் மட்டும் மூன்று நாட்களுக்குச் சாப்பிட்டுவர அடிக்கடி வரும் தலைவலி தீரும்.

★ தும்பைப் பூவை நல்லெண்ணெயில் காய்ச்சி தலைமுழுகி வர தலைப்பாரம் தலைவலி தீரும்.

★ கடுகு ரோகிணியை சுத்தம் செய்து மெல்லிய மாவாக பொடித்து துணியில் மூட்டைக்கட்டி முகர்ந்து வந்தால் தலைவலி குணமாகும்.

★ சுக்கை உறைத்து இருபுறமும் உள்ள பொட்டுகளில் கனமாக பற்றுபோட பத்து நிமிடத்தில் தலைவலி தீரும்.

கண்வலி

★ நந்தியாவட்டை பூவால் ஒத்தடம் கொடுக்க கண்ணெரிச்சல் தீரும். புளியம் பூவை அரைத்து கண்ணைச் சுற்றிப் பற்றுப் போட கண்வலி, கண்சிவப்பு மாறும். நேந்திரப்பூண்டு சமூலத்தையும் சுத்தம் செய்து சிறிய துண்டுகளாக அரிந்து 200 கிராம் எடுத்து ஒரு துணியில் முடிந்து 400 மில்லிலிட்டர் நல்லெண்ணெயில் போட்டு வேடுகட்டி 21 நாட்கள் ஆரியபுடம் போட்டு பின்பு வடிகட்டி காலை மாலை இருவேளை 2 துளிகள் கண்ணில் விட்டுவரப் பார்வை மங்கல், பீளைகட்டுதல், கண்ணில் எரிச்சல், சதைவளர்தல், பார்வை பாதிப்பால் ஏற்படும் தலைவலி, ஒற்றைத் தலைவலி போன்றவை தீரும்.

★ முருங்கைக் கீரையை உணவாக சமைத்து உண்ண கண் நோய் தீரும்.

★ நாமக்கட்டியை சந்தனம் போல் உரைத்து கண் இரப்பைகளின் மேல் பூசிவர கண் நோய் தீரும்.

★ சோற்றுக் கற்றாழையின் மேல்தோலை சீவி உள்ளே இருக்கும் சதையை கண்களின் மீது வைத்து துணியால் கட்டிவிட வேண்டும். இப்படி மூன்று நாட்கள் செய்துவர கண்சிவப்பு மாறிவிடும்.

காதுவலி

★ தோல் நீக்கிய சுக்கை சுண்டவைத்து பொடித்து இரண்டு டம்ளர் தண்ணீரில் போட்டு காய்ச்சி ஒரு டம்ளராக சுண்டவைத்து அதில் பனங்கற்கண்டை சேர்த்து காலை மாலை இருவேளை சாப்பிட காது குத்தல் குணமாகும்.

★ எருக்குத் தைலத்தை 4 துளிகள் காதில்விட்டுவர காதுச்சீழ், நாற்றம், இரத்தம் வருதல் வலி குணமாகும்.

★ எலுமிச்சை பழச்சாற்றில் 4 துளிகளை காதில் விட்டுவர காதுவலி தீரும்.

★ திருநீற்று பச்சிலையை வாட்டி பிழிந்து சாறு எடுத்து இரண்டு துளிகள் காதில் விடக் காது நோய், காது மந்தம் குணமாகும்.

★ நாயுருவி வேரை இடித்து சாறு எடுத்து காதில்விட காதுவலி குணமாகும்.

நன்றி :

மருத்துவ அறிவியல் மலர்

சென்னை குறளகம் "காதி கிராப்டில்'' 17.9.2001 அன்று பொம்மை கண்காட்சியினை மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய தலைவர் திரு. கே.பாண்டுரங்கன் அவர்கள் திறந்து வைத்து விற்பனையை துவக்கி வைத்தார். தமிழ்நாடு அரசு கைத்தறி கைவினை துணிநூல் மற்றும் கதர்துறை செயலர் திருமதி. ஜெயந்தி, இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு, மாநில இயக்குநர் திரு.ஜி.வெங்கட நாராயணன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

பொம்மை கண்காட்சி



நவராத்திரி விழாக் காலங்களை ஒட்டி தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் சென்னை, குறளகம், காதி கிராப்டில் கொலு பொம்மை கண்காட்சியை தொடர்ந்து 31 ஆண்டுகளாக நடத்தி வருகிறது. விஞ்ஞான வேகத்தில் உலகம் சென்று கொண்டிருக்கின்ற இந்த நிலையில் பாரம்பரியம் மிக்க மட்பாண்ட தொழில் நசிந்து விடாமல் பாதுகாத்து அத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற எண்ணற்ற தொழிலாளர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து அவர்களுக்கு இவ்வாரியம் உதவி புரிந்து வருகிறது. கதர் வாரியத்தினுடைய 5 அலகுகளும் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட 94 தொழில் கூட்டுறவு சங்கங்களும் மட்பாண்ட தொழிலை செய்து வருகின்றனர். இந்த அலகுகளில் பொதுவான மட்பாண்டங்களோடு விதவிதமான கலைத்திறன் மிக்க கவின்மிகு பொம்மைகளும் தயாரிக்கப் படுகின்றன. மொத்தம் 1,15,150 கைவினைஞர்கள் இந்த தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதில் 56,345 பேர் மகளிர் என்பது குறிப்பிடத்தக்கது. சென்ற ஆண்டு கண்காட்சியின் போது குறளகம் காதி கிராப்டில் மட்டும் ரூ.30 இலட்சத்திற்கு பொம்மைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு ரூ.45 இலட்சம் ஆக விற்பனை குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சியில் தமிழ்நாட்டில் விருத்தாசலம், வீரப்பெருமாநல்லூர் திண்டிவனம், கடலூர், ஸ்ரீபெரும்புத்தூர், காஞ்சிபுரம், பண்ருட்டி, விழுப்புரம், கும்பகோணம், திண்டுக்கல், கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் சென்னை கொசப்பேட்டை ஆகிய ஊர்களில் தயாரிக்கப்பட்ட வண்ணமிகு பொம்மைகள் இடம் பெற்றுள்ளன. பல்வேறு மண்வகைகளில் வழவழப்பான அழகுமிகு தோற்றத்தில் பீங்கான் பொம்மைகள், 4 அடி உயரமுள்ள தும்பிக்கை உயர்த்திய யானைகள், பளிங்கு பொம்மைகள், கிளிஞ்சல்கள் பொம்மைகள், செம்பு, கருப்பு மற்றும் வெள்ளை உலோகங்களில் செய்யப்பட்ட பொம்மைகள், சந்தனமரம், ரோஸ்வுட், நெட்டி, கொம்புகள், பிளாஸ்டர் ஆப் பாரிஸ், கண்ணாடி ஆகியவற்றிலிருந்து செய்யப்பட்ட அற்புத கலை திறன் மிக்க பொம்மைகள் காண்போர் கருத்தை கவரும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. தவிர கல்லிலே செதுக்கப்பட்ட கலைவண்ணமிக்க சிலைகளும் பாண்டிச்சேரி மாநிலத்தில் தயாரிக்கப்பட்ட டெரக்கோட்டா பொம்மைகளும் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தமிழகம் தவிர கர்நாடகம், கேரளம், ஆந்திரம், மத்திய பிரதேசம் போன்ற பல்வேறு மாநிலங்களிலிருந்தும் புத்தம் புதிய புதுமை பொம்மைகள், துர்கா பூஜைசெட், கிரிவலம் செட், பிரதோஷம் செட், அஷ்டலட்சுமி செட், கருடசேவை, தசாவதாரம், பூஜைசெட்டி பொருட்கள், விவசாய தொழில், ஏர் இண்டியா மகாராஜா, நடனவிநாயகர் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. எளியோரும் வலியோரும் வாங்கிடும் வண்ணம், சிறுவர்களும், பெரியோரும் பாராட்டும் வண்ணம் ரூபாய் 10 முதல் ரூ.5,000 வரை விலை மதிப்புடைய பொம்மைகள் மக்கள் தேவைக்கேற்ப விற்பனைக்கு உள்ளது..

தமிழக அரசின் 2001–2002 ஆம் ஆண்டின் புதிய திட்டங்களின் கீழ் ஆண்டு முழுவதும் கண்காட்சி நடத்த நிரந்தர அமைப்பு ஏற்படுத்துதல் மற்றும் விற்பனை பிரிவுகளை வடிவமைத்தல் போன்ற திட்டம் இவ்வாரியத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி பொம்மைகள், மரச்சாமான்கள், தோல் பொருட்கள், கைமுறை காகிதம், கைவினைப்பொருட்கள், பாய், சணல் மற்றும் கதர் பொருட்கள் ஆகியவைகளை ஆண்டு முழுவதும் பொருட்காட்சியாக அமைக்கப்படவுள்ளது. இந்த பொருட்காட்சி நடத்திட படிமேடை, அடுக்கம் மற்றும் காட்சிப்பெட்டி போன்ற நிரந்தரமான அமைப்புகளை ரூ.3.64 இலட்சத்தில் நிறுவவும் குறளகம் கதர் அங்காடியில் உள்ள மூன்று கதர் விற்பனைப் பிரிவுகளை ரூபாய் 2.60 இலட்சம் மதிப்பில் புதியதாக வடிவமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நவராத்திரி பண்டிகையை சிறப்பாக கொண்டாடும் பொருட்டு சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைத்து தரப்பு மக்களின் ரசனைக்கேற்ப கண்ணைக் கவரும் வண்ண பொம்மைகள் இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. இதை பொதுமக்கள் வாங்குகின்ற போது ஆயிரக்கணக்கான கைவினைஞர் களுடைய தொழிலை மதித்து அவர்களுடைய உழைப்புக்கு உயர்வளிக்கின்ற திருப்தியும் ஏற்படும். •

பெண்மை வாழ்க என்று கூத்திடுவோமடா



பொறுமைப் பொருளாகிய
பெண்ணைக் கிறிஸ்து என்றும்,
காந்தி என்றும் யான்
போற்றுகிறேன்.
துன்பப் பொறையில் விளைவது
இன்பம்.

- ஆஸ்கார் ஒயில்டு

கண்ணுக்குப் புலனாகாத அமைதி,
பெண் வடிவாகிக் கண்ணுக்குக்
காட்சியளிக்கின்றது.

- நச்சினார்க்கினியார்

கடவுள் எல்லா இடங்களிலும் இருக்க
முடியாது. அதனால்தான் – தாயைப்
படைத்தார்.

- யூத பொன் மொழி

அழகிய பெண். ஒரு நகை. நல்ல பெண்
ஒரு பொக்கிஷம்.

- ஸாதி

ஆணும் பெண்ணும்
நிக்ரெனக் கொள்வதால்
அறிவி லோங்கிஇவ்
வையம் தழைக்குமாம்

- பாரதியார்

மண்ணில் மலர்ச்சி காண மகளிர்க்கே அதிகாரம்

மகளிர் அதிகாரப் பகிர்வு ஆண்டு

Women's Empowerment Year 2001

புதிய அமைச்சரவை பதவி ஏற்பு

தமிழ்நாட்டின் புதிய முதலமைச்சராக பெரியகுளம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் பதவி ஏற்றார். மேதகு ஆளுநர் டாக்டர் சி.ரங்கராஜன் அவர்கள் 21–9–2001 அன்று சென்னை ராஜ்பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

முதலமைச்சராக திரு.ஓ.பன்னீர்செல்வம் பதவி ஏற்றபின் மற்ற அமைச்சர்களுக்கு ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பதவி ஏற்பு நிகழ்ச்சிக்கு பிறகு முதலமைச்சரும் அமைச்சர் பெருமக்களும் ஆளுநருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். மறுநாள் முதலமைச்சரும் அமைச்சர்களும் தலைமைச் செயலகத்திற்கு வந்து தங்கள் பணிகளை மேற்கொண்டனர்.



மருதுபாண்டியர்

200-வது ஆண்டு நினைவு நாள்

மாண்புமிகு முதலமைச்சர் உரை

சிவகங்கைச் சீமையின் வரலாற்று வீரர்களான மருது சகோதரர்களுக்கு வணக்கம் செலுத்துகிற இந்த நினைவு அஞ்சலி விழாவில் கலந்து கொள்ளும் நல்வாய்ப்பு கிடைத்ததற்காக நான் பெருமைப்படுகிறேன். மருது பாண்டியர்கள் ஆங்கிலேயரோடு போரிட்டு, வீரமரணம் அடைந்த அதே நாளில் அவர்களது வீரத்திற்கும், தியாகத்திற்கும் நாம் புகழஞ்சலி செலுத்திக் கொண்டிருக்கின்றோம். இந்தச் சிவகங்கைச் சீமையில் உள்ள இந்த மண் மருது பாண்டியர்கள் ஆண்ட மண்! மருது பாண்டியர்கள் மாண்ட மண்!

இன்று 2001ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ஆம் நாள் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர், 1801ஆம் ஆண்டு இதே நாளில் இந்த திருப்பத்தூர் மண்ணில் ஆங்கிலேயர்களால் மருது பாண்டியர்கள் தூக்கிலே தொங்கவிடப்பட்டனர். அந்த நாளில், மருது பாண்டியர்கள் மட்டுமல்ல, 500க்கும் மேற்பட்ட மக்களும் தூக்கிலிடப்பட்டனர்.

ஆங்கிலேயர்களுக்கு இந்த மண்ணின் மீது அத்தனை ஆத்திரம் வருவதற்கு, இது வீரம் விளைந்த மண் என்பதே காரணம். சிவகங்கைச் சீமையை ஆண்டு வந்த முத்து வடுகநாதர் ஆற்காட்டு நவாப்பிடம் போரிட்டு வீரமரணம் அடைந்தார். அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்தார், அவரது துணைவியார் அரசி வேலுநாச்சியார்! வேலு நாச்சியாரை எதிர்த்தவை இரண்டு படைகள். அவை ஆற்காடு நவாப் படையும்! ஆங்கிலப் படையும்! இந்த இரண்டு கூட்டணிப் படைகளையும் எதிர் கொண்டார் வீர மங்கை வேலுநாச்சியார்.

வேலுநாச்சியார் என்ற வீரப்பெண்மணியின் போர்ப்படைத் தளபதியாக விளங்கிய வீரர்கள்தான் சின்ன மருதும், பெரிய மருதும்! பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில், தாய் மண்ணைக் காக்க அந்நியரை எதிர்த்து வீரமரணம் அடைந்தவர் வீரமங்கை வேலுநாச்சியார்!

வேலுநாச்சியார் வீர மரணம் அடைந்த பிறகு சிவகங்கைச் சீமையை ஆளும் பொறுப்பை மருது சகோதரர்கள் ஏற்றார்கள். 21 ஆண்டு காலம் அவர்களது ஆட்சியில் நாடு செழித்தது நல்லோர் மகிழ்ந்தனர். சிவகங்கைச் சீமை சிறிய இடம்தான், ஆனால் அதனை ஆண்டவர்களோ பெரியவர்கள்! வீரத்தில், ஆட்சித் திறத்தில், அறிவாற்றலில், தமிழ் உணர்வில், ஈகைத் திறத்தில் அவர்கள் மிகப் பெரியவர்களாக விளங்கினார்கள்.

அருந்தமிழைப் போலவே மருது சகோதரர்கள் ஆன்மீகத்திலும் ஈடுபாடு கொண்டு இருந்தார்கள். காளையார் கோவிலிலும், குன்றக்குடியிலும் அவர்கள் செய்த கோயில் திருப்பணிகள் அவர்களது கடவுள் பக்தியை நமக்கு இன்றைக்கும் எடுத்துக் கூறுகின்றன.

இந்தப் பண்புகளுக்கு எல்லாம் சிகரம் வைத்தாற்போல், மருது சகோதரர்களிடையே அருள் உள்ளம் என்ற மற்றொரு பண்பும் சுடர் விட்டு நின்றது. வீரபாண்டிய கட்டபொம்மன் விடுதலைக்காக ஆங்கிலேயரோடு போராடி, கயத்தாறிலே தூக்கிலிடப்பட்ட பிறகு, தப்பி வந்த ஊமைத்துரைக்கு அடைக்கலம் அளித்தார் சின்ன மருது. ஆறுதல் தேடி வந்தவர்க்கு அபயம் அளித்தது, ஆங்கிலேயர்களின் பார்வையில் மன்னிக்க முடியாத குற்றமாகிவிட்டது. ஆனாலும், ஊமைத்துரையை விட்டு விட்டால் நாடு முழுவதையும் தருவதாக வெள்ளையர்கள் நப்பாசை காட்டினார்கள். 'அடைக்கலமாக வந்த ஒரு வீரரை ஆங்கிலேயர் கையில் ஒப்படைக்க முடியாது', என்று மருது சகோதரர்கள் மறுத்து விட்டதால் போர் மூண்டது. சிவகங்கைச் சீமை சின்னாபின்னமானது. மருது சகோதரர்கள் தூக்கிலே தொங்க

நேர்ந்தது. ஊமைத்துரையை மட்டும் வெள்ளைக்காரர்களிடம் ஒப்படைக்க உள்ளம் ஒப்பி இருந்தால், மருது சகோதரர்கள் அரசையும் இழந்து, தூக்குக் கயிற்றிலே தொங்கி உயிரையும் இழக்க நேர்ந்திருக்காது.

இந்த அரசு விழாவில் பங்கேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நாட்டிற்காகவும், மொழிக்காகவும் போராடிய பெருமக்கள் எவராக இருந்தாலும், அவர்களுக்கு விழா எடுத்து சிறப்பிப்பதில் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கு நிகர் புரட்சித்தலைவி அவர்கள் மட்டும்தான் என்பதை இந்த நேரத்தில் பெருமிதத்தோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

திருப்பத்தூரில் மருது பாண்டியர் நினைவிடத்தை அரசுடைமையாக்கி கடந்த 21.10.1992 அன்று, டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்த போது திறந்து வைத்தார்கள். அந்த நினைவிடத்தில் சின்னமருது, பெரிய மருது ஆகியோரின் 8 அடி உயர முழு உருவச்சிலைகள் அமைக்கப்பட்டு, அன்றே டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. அதேநாளில், காரைக்குடியில் கவியரசு கண்ணதாசன் மணிமண்டபமும் திறந்து வைக்கப்பட்டது. இருப்பினும் மருதுபாண்டியர்களின் நினைவிடம் மேலும் கூடுதல் வசதிகளுடன் விரிவாக்கப்பட வேண்டும் என்றும், மருது சகோதரர்களுக்கு மேலும் சிறந்த முறையில் புதிய திருவுருவச் சிலைகள் நிறுவப்பட வேண்டும் என்றும் சிவகங்கை மாவட்ட மக்கள் கோரிக்கைகள் விடுத்திருந்தனர். அதன் அடிப்படையில் மருது பாண்டியர் நினைவிடத்தில், 20 இலட்சம் ரூபாய் செலவில் நினைவகத்தை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்துள்ளது என்பதையும், மருது சகோதரர்களின் சிலைகளும் 5.5 இலட்சம் ரூபாய் செலவில் புதியதாக வடிவமைக்கப்பட்டு விரைவில் நிறுவப்பட உள்ளன என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று மாவீரர்களாகிய மருது சகோதரர்களின் சிலைகளுக்கு மாலையணிவித்து இந்த விழா மேடையிலே அவர்களது திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கும் வாய்ப்பு கிடைத்ததை எனக்கு கிடைத்த மிகப் பெரும் பேறாக நான் மதிக்கிறேன். இதற்கெல்லாம் காரணமாக இருக்கும் எங்கள் ஒப்பற்ற தலைவி இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கு எனது நன்றியை இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த விழாவைக் குறுகிய காலத்தில் மிகச் சிறப்பாக நடத்திக் கொடுத்த செய்தி–மக்கள் தொடர்புத் துறைக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு பேசிய மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு சிறப்புகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்ற கோரிக்கைகளை இங்கே சொன்னார்கள். ஒன்றை மட்டும் நான் இந்த கூட்டத்தின் வாயிலாக உறுதிபட கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். அவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் கூடிய சீக்கிரம் அரசு ஆணைகளாக வரும்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில்
24–10–2001 அன்று நடைபெற்ற மருதுபாண்டியர்
200ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சியில்
மாண்புமிகு முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம்
ஆற்றிய உரையிலிருந்து...

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின்

பிறந்த நாள் விழா

இராமநாதபுரம் மாவட்டம் – பசும்பொன் கிராமத்தில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்த நாள் விழா, 30.10.2001 அன்று நடைபெற்றது.

30.10.2001 அன்று காலை 10.00 சென்னை – நந்தனத்தில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு நிதி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

30.10.2001 அன்று காலை 7.30 மணிக்கு மதுரை – கோரிப்பாளையத்தில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா.காளிமுத்து அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர், இராமநாதபுரம் – பசும்பொன் கிராமத்தில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நினைவிடத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களும், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா.காளிமுத்து அவர்களும் மற்றும் அமைச்சர் பெருமக்களும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

★ ★ ★

சமூக சீர்திருத்தக் கருத்துக்களை தமது கவிதை வரிகளால் வெளிப்படுத்தி நாட்டு மக்களுக்கு தேசிய உணர்வையும் ஊட்டிய தேசிய கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனாருக்கு இந்திய அரசு அவரது உருவப் படம் பொறித்த அஞ்சல்தலையை வெளியிட்டு மாபெரும் கவிஞரை கௌரவப்படுத்தியது. பாவேந்தர் பாரதிதாசன் அஞ்சல்தலையை, அஞ்சல்துறைத் தலைவர் திருமதி வத்சலா ரகு வெளியிட, மாண்புமிகு மின்துறை அமைச்சர், திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

சென்னை, கலைவாணர் அரங்கில் 9.10.2001 அன்று பாவேந்தரின் அஞ்சல்தலை வெளியிடப் பட்டது. அஞ்சல்தலை வெளியீட்டு விழாவில், செய்தி–சுற்றுலாத்துறைச் செயலர் திரு.ராமதாஸ், இ.ஆ.ப., அவர்கள் தமது வரவேற்புரையில், எழுச்சி மிகுந்த சமூக சீர்திருத்தக் கருத்துக்களை நாட்டுக்கு வழங்கிய தமிழ்க் கவிஞரின் நினைவைப் போற்றி ஆஞ்சல்தலை வெளியிடுவதைப் புகழ்ந்துரைத்தார்.

மாண்புமிகு செய்தி, வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் தமது உரையில் குறிப்பிட்டதாவது : பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தமது இளமைக் காலத்தில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு நாட்டுக்காக உழைத்தவர். பாரதியார் மீது இருந்த பற்று காரணமாக, கனக சுப்புரத்தினம் என்ற தமது இயற்பெயரை பாரதிதாசனாக மாற்றி பாரதியாரை தமது குருவாக ஏற்றுக் கொண்டார். பகுத்தறிவுக் கட்டுரைகள், சமூக சீர்திருத்தக் கவிதைகள் குறிப்பாக குடும்பக் கட்டுப்பாடு பற்றிய கவிதைகளை தமிழ்நாட்டு மக்களுக்கு உணர்த்தி தந்தை பெரியார் அவர்களால் பாராட்டப்பட்டவர் பாரதிதாசன் அவர்கள்.

இத்தகைய எழுச்சி மிகுந்த கவிஞருக்கு 1968–இல் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில்

பாவேந்தர் பாரதிதாசன் அஞ்சல் தலை வெளியீட்டு விழா

சென்னை, கடற்கரையில் முழு உருவச் சிலை பேரறிஞர் அண்ணாவால் அமைக்கப்பட்டது.

மேலும் அவருக்கு சிறப்பு செய்யும் வகையில் 1978 ஆம் ஆண்டு பாரதிதாசன் விழா கொண்டாடப்பட்டது. தமிழக அரசின் சார்பில் பாவேந்தர் விருது சிறந்த தமிழ் கவிஞர்களுக்கு வழங்கப்படுகிறது.

பெண்கள் முன்னேற்றத்திற்காகவும், பெண் சமுதாயத்திற்காகவும் புரட்சிகரமான கருத்துக்களை கவிதைகளால் உணர்த்தி பெண் அடிமை போக்க பாடுபட்ட பாவேந்தருக்கு அஞ்சல்தலை வெளியிட்ட இந்திய அஞ்சல் துறைக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

தேசத்திற்காக பாடுபட்டவர்களுக்கு அஞ்சல் தலை வெளியிடப்படுகிறது என்பதைக் குறிப்பிட்டு, சமூக, பொருளாதார மற்றும் பெண் கல்வி உள்ளிட்ட சீர்திருத்தக் கருத்துக்களை வெளியிட்ட பாவேந்தர் பாரதிதாசனாருக்கு அஞ்சல் தலை வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைவதாக கூறினார் அஞ்சல்துறைத் தலைவர் திருமதி.வத்சலா ரகு.

மாண்புமிகு மின்துறை அமைச்சர், திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் தமது பேருரையில், "தமது பாடல்கள் மூலம் தமிழ்ப் பற்றை உணர்த்திய பாவேந்தர் அவர்கள், பெண்கல்வி, பெண்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்பதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

ஒரு பெண் படித்தாலே அந்த குடும்பமே படித்ததுபோல் என்று பெண் கல்வியின் அவசியத்தை இந்த உலகிற்கு உணர்த்தியவர் தான் பாவேந்தர் அவர்கள்.

1991–96ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் அன்றைய முதல்வர் அவர்கள் பெண் கல்விக்காக பல சிறப்பான திட்டங்களை வழங்கி அதனைச் செயல்படுத்த கூடுதலான நிதி உதவிகளை ஒதுக்கியதோடல்லாமல், பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்திட மகளிர் காவல் நிலையங்கள், தொட்டில் குழந்தைத் திட்டம் முதலிய திட்டங்களை கொண்டுவந்து பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட பாவேந்தரின் இலட்சியங்களை நிறைவேற்றினார்.

பெண்கள் சொந்தக் காலில் நிற்க, சுயஉதவி குழுக்கள் மற்றும் சுய வேலைவாய்ப்பின் மூலம் பொருளாதார ரீதியில் தங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று தமது உரையில் கூறினார்

• • •

சென்னை கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில் 2-10-2001 அன்று நடைபெற்ற மகாத்மா காந்தி பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு கல்வியமைச்சர், மாண்புமிகு செய்தி–விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல்துறை அமைச்சர், செய்தி–சுற்றுலாத்துறைச் செயலர் மற்றும் செய்தித்துறை இயக்குநர் ஆகியோர்.

தமிழ்நாட்டின் உலக சாதனை!

தேசிய தன்னார்வ இரத்தக்கொடை நாளையொட்டி, தமிழ்நாடு எய்ட்சு கட்டுப்பாடு சங்கம், சென்னை மாநகராட்சி எய்ட்சு கட்டுப்பாடு சங்கத்துடனும், சென்னைப் பல்கலைக்கழகத்துடனும் இணைந்து 1.10.2001ஆம் நாள் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை சென்னையில், மாபெரும் இரத்தக்கொடை முகாம் ஒன்றை சீராகவும் – செம்மையாகவும் – சிறப்பாகவும் – வெற்றிகரமாகவும் நடத்தி முடித்து, உலக சாதனை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்நாடு எய்ட்சு கட்டுப்பாடு சங்கத்தின் வரலாற்றில், முதன்முதலாக நடத்தப்பட்ட இந்த மாபெரும் இரத்தக்கொடை முகாம் சென்னை நேரு உள்விளையாட்டரங்கத்தில் நடத்தப்பட்டது.

எச்.ஐ.வி./எய்ட்சு நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு பணிகளில் முன்மாதிரி மாநிலமாகத் திகழும் தமிழ்நாடு, முதன்முதலாக மாபெரும் இரத்தக்கொடை முகாம் நடத்தி 3818 அலகுகள் (Units) இரத்தம் சேகரித்து, அரிய முறையில் உலக சாதனை ஏற்படுத்தியுள்ளது.

கின்னஸ் புத்தகத்தில் தற்போது சாதனையாளர்களாக இருப்போர், அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் மிசவுரி பல்கலைக்கழகத்தினராவர் (The American Red Cross/ University of Missouri). இவர்கள், தாங்கள் நடத்திய இரத்தக்கொடை முகாம் மூலம் சேகரித்தது 3155 இரத்த அலகுகள் (Units) ஆகும்.

தமிழ்நாடு எய்ட்சு கட்டுப்பாடு சங்கம் ஒரே ஒரு நாள், ஒரே இடத்தில் நடத்திய மாபெரும் இரத்தக்கொடை முகாமில் சேகரிக்கப்பட்டது 3818 இரத்த அலகுகள் ஆகும். இப்புள்ளி விவர அடிப்படையில் பார்த்தால், பாதுகாப்பான இரத்த சேகரிப்பில் தற்போதைய உலக சாதனையாளராக இருப்பது தமிழ்நாடு ஆகும்.

3818 அலகுகள் இரத்தம் சேகரித்த இரத்தக்கொடை முகாம் நடத்திய உலகின் முதல் நகரம் 'சென்னை' என்ற புகழும் கிட்டியுள்ளது. இச்சாதனை குறித்து கின்னஸ் புத்தகத்தில் உரிய இடம் தந்து பிரசுரிக்குமாறு வேண்டி, அதற்குரிய ஆவணங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

காலை முதல் மாலை வரை இரத்தக் கொடையளிக்க வந்த மொத்த நபர்களில் 10 விழுக்காடு அளவினர், மருத்துவம் மற்றும் ஹீமோகுளோபின் பரிசோதனைகளுக்குப்பின், இரத்தக்கொடையளிக்கும் வாய்ப்பற்றவர்கள் எனத் திரும்ப அனுப்பப்பட்டனர்.

அதே போல் இரத்த சோகை நோய்க்காளானோர் உடல் எடை எதிர்பார்ப்புக்கும் குறைவாக உடையவர்கள் என்போரும் திரும்ப அனுப்பப்பட்டனர். இரத்தக்கொடை அளிக்க வந்தவர்கள், மேற்படி வளாகத்தில் மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு, அதன்மூலம் தகுதியானவர்கள்தான் என உறுதி செய்யப்பட்ட பின்பே இரத்தக்கொடையளிக்க அனுமதிக்கப்பட்டனர். மேலும், ஒவ்வொரு மாணவர்க்கும், மாணவிக்கும், மற்றவர்களுக்கும் தந்நிலை விளக்கம் அளிக்க ஏதுவாக, பல்வேறு கேள்விகள் அடங்கிய படிவங்கள் விநியோகிக்கப்பட்டு, தகவல்கள் திரட்டப்பட்டன. அதன்பின்தான் – அவர்கள் அளித்த தகவல்கள், இரத்தக் கொடையாளருக்கான் இலக்கண வரைமுறைகளுக் குட்பட்டிருக்கிறது எனத் தெரிந்த பிறகே இரத்தக்கொடை பெறப்பட்டது.

மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட படிவங்கள் இரத்த வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். அவர்கள் தொடர்ந்து இரத்த வங்கிகளுக்குச் சென்று இரத்தக் கொடையளிக்கலாம்.

இரத்தக்கொடையாளிகள், இரத்தம் சேகரிப்போர், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தமிழ்நாடு எய்ட்சு கட்டுப்பாடு சங்கம் ஆகிய நால்வரும் ஒரே சமயத்தில் – ஒரே இடத்தில் இதுவரை கூடியதே இல்லை. இந்த ஆண்டு தேசிய தன்னார்வ இரத்தக் கொடை நாளையொட்டி (1.10.2001), முதன்முறையாக இந்த நான்கு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும், ஒருங்கிணைந்து செயல்பட்டு மாபெரும் இரத்தக் கொடை முகாமை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார்கள். மேலும், சென்னையிலுள்ள அரசு இரத்த வங்கிகள், செஞ்சிலுவை இரத்த வங்கி, தனியார் இரத்த வங்கிகள் என 32 இரத்த வங்கிகளும் முதல்முறையாக, ஒரே வேளையில் – ஒரே இடத்தில் கூடி இரத்தம் சேகரித்ததும் இந்த மாபெரும் இரத்தக்கொர்டை முகாமில்தான்.

மானுடம் பேணவும், மனிதநேயம் காக்கவும் வேண்டி நடத்தப்பட்ட இரத்தக்கொடை முகாமை வெற்றிகரமாக நடத்துவதன் பொருட்டு, தமிழ்நாடு எய்ட்சு கட்டுப்பாடு சங்கம் பல்வேறு முன்னேற்பாடுகளை மிகுந்த முனைப்புடன் செய்து முடித்தது. சென்னையிலுள்ள பல்வேறு கல்லூரிகள் வாயிலாக, இரத்தக்கொடை அளிப்பதற்காகத் தன்னார்வலர்களைத் திரட்டியது. இதில், கல்லூரி முதல்வர்கள், கல்லூரி கல்வி இயக்கக அலுவலர்கள், தேசிய நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் ஆகியோர் சங்கத்திற்கு உறுதுணையாக இருந்தார்கள்.

சென்னை பல்கலைக்கழகம், கல்லூரி கல்வி இயக்ககம், தமிழ்நாடு எம்.ஜி.ஆர். மருத்துவ

பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், தொழில்நுட்ப கல்வி இயக்ககம், தேசிய நாட்டு நலப்பணித் திட்டம் ஆகியவர்களிடமிருந்து நல் ஆதரவு கிட்டியது. கல்லூரி மாணவ, மாணவிகள், சாரை சாரையாக வந்து இரத்தக்கொடை அளித்தார்கள்.

தமிழ்நாடு எய்ட்சு கட்டுப்பாடு சங்கம் பல்வேறு துறைகளின் அலுவலர்களோடும், பல்கலைக் கழகங்களைச் சார்ந்தவர்களோடும் பல கூட்டங்களை நடத்தி, இரத்தக் கொடையாளிகளைத் திரட்டுவதற்கான அனைத்துப் பணிகளையும் நிறைவேற்றியது. அதேபோல், சென்னையிலுள்ள இரத்த வங்கிகளைச் சார்ந்த மருத்துவ அலுவலர்களோடு கூட்டங்கள் பல நடத்தி, முகாம்கள் வெற்றிகரமாக – பிசகின்றி தக்கவாறு நடத்துவது குறித்து பல கூட்டங்களை நடத்தி, உரிய முடிவுகளை மேற்கொண்டு, அவற்றை நிறைவேற்றியது. சிறப்பாக, கல்லூரிதோறும் உள்ள தேசிய நாட்டு நலப்பணித் திட்டப்பணியாளர்களின் தனிக்கூட்டம் ஒன்றை நடத்தி, தன்னார்வலர்களாக வந்து கொடையளிக்கும் மாணவ, மாணவிகளை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறு முடிவுகளை மேற்கொண்டு அவற்றையும், அவர்கள் வாயிலாக தமிழ்நாடு எய்ட்சு கட்டுப்பாடு சங்கம் நிறைவேற்றியது.

எல்லாவற்றிற்கும் மேலாக, இரத்தக்கொடை முகாம் குறித்து, உயர்நிலை அலுவலர்கள் அடங்கிய கூட்டம் ஒன்றும், தலைமைச் செயலகத்தில் நடத்தப்பட்டது. தமிழ்நாடு அரசின் தலைமை செயலாளர் திரு. பி.சங்கர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடத்தப்பட்ட இந்தக் கூட்டத்தில், இரத்தக்கொடை முகாமை வெற்றிகரமாகவும், தவறு ஏதுமின்றியும், செவ்வனே நடத்துவது குறித்து பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன. அம்முடிவுகள் அனைத்தையும் தமிழ்நாடு எய்ட்சு கட்டுப்பாடு சங்கம் நிறைவேற்றியது.

கொடைப்படிவம் (Donor Card), காப்பீட்டுப் பிரிமியம், பாராட்டுச் சான்றிதழ் ஆகியவை வழங்கப்பட்டன. சென்னையிலுள்ள கல்லூரி மாணவ, மாணவிகளை அடிப்படையாகக் கொண்டு, இந்த இரத்தக்கொடை நடத்தப்பட்டது என்றாலும், பத்திரிக்கைகள் வாயிலாகவும், வானொலி மற்றும் தொலைக்காட்சி வாயிலாகவும், இந்த இரத்தக்கொடை முகாமில் பொதுமக்களும் கலந்து கொண்டு இரத்தக்கொடை அளிக்கலாம் என பலபட செய்திகள் பரப்பப்பட்டன. அதன் காரணமாக, காவல்துறை பயிற்சியாளர்கள் இந்திய ஆட்சிப் பணியைச் சார்ந்த அலுவலர்கள், கப்பல் பொறியாளர் (Marine Engineer) கனரகத் தொழிற்சாலையைச் சார்ந்த தொழிலாளர் எனப் பொதுமக்கள் பலரும் தாங்களாகவே முன்வந்து இரத்தக்கொடை அளித்துள்ளார்கள்.

பாரத் பெட்ரோலியம், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், இந்திய கேஸ் நிறுவனம் (Gas Authority of India), 'ஓ என் ஜி சி' (ONGC), சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் (Chennai Petroleum Corporation) தெர்மோபென்பால் (Thermopenpol), ஹிந்துஸ்தான் லேடக்ஸ், எழும்பூர் பாரத ஸ்டேட் வங்கி, அபெக் ஆகிய நிறுவனங்கள் நிதி அளித்து புரவலர்களாக உதவினார்கள்.

எச்.ஐ.வி./எய்ட்சு குறித்த கண்காட்சியும், ஓவிய கண்காட்சியும் நடத்தப்பட்டது. அத்துடன் இரத்தக்கொடை முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளாக பல்வேறு கலை/இசை நிகழ்ச்சிகளும், நாடகங்களும் நடத்தப்பட்டன.

இந்த இரத்தக்கொடை முகாம் நடந்து கொண்டிருந்த நேரத்தில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. பி. சங்கர், இ.ஆ.ப., அவர்கள், அரசு நல்வாழ்வுத்துறை செயலாளர் திரு. சையத் முனீர் ஹோடா, இ.ஆ.ப.,

அவர்களுடன் வருகை தந்தார்கள். அவர்களை, திட்ட இயக்குநர் திரு. இரா. கிருத்துதாசு காந்தி, இ.ஆ.ப., அவர்களும், மாநகராட்சி ஆணையாளர் திரு. ஆச்சார்யலு, இ.ஆ.ப., அவர்களும், துணை ஆணையர் டாக்டர். பி. சந்திரமோகன், இ.ஆ.ப., அவர்களும், அரசு நல்வாழ்வு–குடும்ப நலத்துறையின் கீழ்வரும் பல்வேறு துறைகளின் இயக்குநர்களும் வரவேற்று இரத்தக்கொடை முகாமை சுற்றிக் காண்பித்தார்கள். மேலும் தேசிய எயிட்சு கட்டுப்பாடு நிறுவனத்திலிருந்து தேசிய இரத்தப் பாதுகாப்புக்கான ஆலோசகர் டாக்டர். சர்தானா, புது தில்லியிலிருந்து பார்வையாளராக வந்து இந்த முகாமை பார்வையிட்டுச் சென்றார்.

மாநிலத்தில் ஆண்டுதோறும் 3 இலட்சம் அலகுகள் (Units) இரத்தம் சேகரிக்கப்படுகிறது. இதில் 50 விழுக்காடு இரத்தம் தன்னார்வலர்களிடமிருந்து சேகரிக்கப் பட்டதாகும். மீதமுள்ளவை உறவினர்களிடமிருந்து பெறப்பட்டவை.

பொதுமக்கள் உட்பட அனைவரும், விருப்பார் வத்துடன், தாங்களாகவே முன்வந்து இரத்தக்கொடை அளித்திட வேண்டுமென ஊக்குவிக்கும் பொருட்டு, பல்வேறு தகவல்–கல்வி–தொடர்பு பணிகள் மிகுந்த முனைப்புடன் நிறைவேற்றப்பட்டன. சிறப்பாக, சென்னையின் அகில இந்திய வானொலி நிலையமும், சென்னை தொலைக்காட்சியும், இரத்தக்கொடை முகாம் நடைபெறுவதற்கு முன்பாகவே – கிட்டத்தட்ட இருவார காலமாக, இரத்தக்கொடை முகாம் குறித்தும், எச்.ஐ.வி./ எய்ட்சு குறித்தும், பல்வேறு நிகழ்ச்சிகளின் வாயிலாக மக்களிடையே தக்க தகவல்களைப் பரப்பின. இதேபோல், தமிழ்நாட்டின் மாவட்டங்களில் இருந்து செயல்படும் அனைத்து அகில இந்திய வானொலி நிலையங்களும் இத்தகைய தகவல்களை ஒலிபரப்பின. அத்தனை செய்திகளையும் இலவசமாகப் பரப்பி, இரத்தக் கொடையளிக்குமாறு அனைவரையும் ஊக்குவித்து வந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இரத்தக்கொடை முகாமில் பொறியியல் கல்லூரிகள், கலை மற்றும் விஞ்ஞான கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், தொழில்நுட்ப பயிற்சி மையங்கள் (Technicians) என 75 கல்லூரிகளைச் சார்ந்த மாணவ, மாணவிகள் இம்முகாமில் கலந்து கொண்டு இரத்தக்கொடை அளித்தார்கள்.

இவ்வளவு பேர்களிடமிருந்து பெருமளவில் இரத்தம் சேகரிக்கும்போது, அவ்வளவு இரத்தமும் முறையாகப் பயன்படுத்தப்படுமா என்ற கேள்வி எழும். அனைத்து இரத்த வங்கிகளின் மருத்துவர்களையும் முன்னதாகவே கூட்டி, அவர்களுடன் அனைத்துக் கோணங்களிலும் கலந்துரையாடி, அலசி ஆராய்ந்து முடிவு செய்த பின்புதான், பெருமளவில் இரத்தம் சேகரிப்பது என முடிவு செய்யப்பட்டது.

மொத்தத்தில், இரத்தக்கொடையாளிகளுடைய பாதுகாப்பிற்கும், அவர்களின் வசதிகளைப் பேணுவதற்கும் முக்கியத்துவம் அளித்து இந்த முகாம் நடத்தப்பட்டது.

அதேபோல், தமிழ்நாடு அரசு செய்தி மற்றும் சுற்றுலாத்துறையின் ஏற்பாட்டின் பேரில் தமிழ்நாடு எய்ட்சு கட்டுப்பாடு சங்க திட்ட இயக்குநர் இரா. கிருத்துதாசு காந்தி, இ.ஆ.ப., அவர்கள், பத்திரிக்கையாளர் கூட்டம் ஒன்றை 28.9.2001ஆம் நாளன்று நடத்தி, இரத்தக்கொடை முகாம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்கள். பத்திரிக்கைகள் பலவும் அந்தச் செய்திகளை வெளியிட்டு இரத்தக்கொடை முகாமுக்கு ஆக்கம் சேர்த்தன.

மருந்துக் கட்டுப்பாடு இயக்ககம் மற்றும் சென்னையிலுள்ள இரத்த வங்கிகளின் மருத்துவ அலுவலர்கள் ஆகியோரை ஈடுபடுத்தி, இரத்தக்கொடை முகாம், மருத்துவ ரீதியான எந்தப் பிரச்சினையும் எழாது,

சிறப்பாக நடைபெறுவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு எய்ட்சு கட்டுப்பாடு சங்கம் செய்தது.

இரத்தம் கொடுப்பதைப் பணத்திற்காகத் தொழிலாகவே செய்தார்கள். 1998ஆம் ஆண்டிலிருந்து, இது அரசால் தடை செய்யப்பட்டுள்ளது. உறவினர்களிடமிருந்து இரத்தம் பெறுவது ஓரளவு வழக்கமாக உள்ளது. இதுவும் தவிர்க்கப்பட வேண்டும். அனைவரும், தன்னார்வத்துடன் இரத்தக்கொடை அளிக்க வேண்டுமென்பது உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கையாக உள்ளது. அந்த இலக்கை நோக்கி தமிழ்நாடு எய்ட்சு கட்டுப்பாடு சங்கம் பயணித்துக் கொண்டிருக்கிறது. இரத்தக் கொடையளிக்கத் தன்னார்வலர்கள் பலர் தயாராக உள்ளார்கள் என்பதை, வந்த கல்லூரிகளுக்கு போக்குவரத்துச் செலவிற்காக ரூபாய் ஆயிரம் வழங்கப்பட்டது. மேலும், கொடையாளர்களுக்கு 50 படுக்கைகள் கொண்ட ஐந்து குருதிக்களங்களில் மொத்தம் 250 பேர்களுக்கு ஒரே வேளையில் இரத்தம் எடுக்கப்பட்டது. பத்து படுக்கைகளுக்கு ஒரு மருத்துவர் இருந்தார். 77 மருத்துவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள், 85 தொழில் நுட்புனர்கள் (Technicians), 79 செவிலியர்கள், 82 உதவியாளர்கள், பல நோக்கு பணியாளர்கள் எனப் பலரும் இம்முகாம் வெற்றிகரமாக நடைபெற உதவினார்கள்.

இரத்தக்கொடை அளிக்க வந்த தன்னார்வலர்கள் பற்றிய தகவல்கள், அச்சுப்படிவங்களில் சேகரிக்கப் பட்டுள்ளன. அவை இரத்த வங்கிகளுக்கு

அனுப்பப்படுகின்றன. எனவே, இவர்கள் இரத்த வங்கிகளுக்குச் சென்று தொடர்ந்து இரத்தக்கொடை அளிக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு எய்ட்சு கட்டுப்பாடு சங்கம் நடத்தி முடித்துள்ள இந்த மாபெரும் இரத்தக்கொடை முகாம் நிரூபித்துள்ளது.

இரத்தம் தேவைப்படுபவர்கள் தேவையை நிறைவு செய்துகொள்ள தங்கள் உறவினர்களைச் சார்ந்திருக்க வேண்டியதில்லை. 'இரத்த வங்கிகளை நம்பி இரத்தம் பெறலாம்' என்ற நம்பிக்கையை இம்முகாம் உருவாக்கியிருக்கிறது. பொதுமக்களிடையே இரத்த வங்கிகள் மீது நல்ல நம்பிக்கை உருவாக இந்த இரத்தக்கொடை முகாம் உதவியுள்ளது.

ஆயிரக்கணக்கான மாணவர்கள் மற்றும் மாணவிகள் விருப்பார்வத்துடன் வந்து இந்த இரத்தக்கொடை முகாமில் இரத்தம் அளித்தார்கள். 50 பேர்களுக்குக் குறையாமல்

பெறப்படும் இரத்தம் அனைத்தும், 100க்கு 100 விழுக்காடு அளவு, தன்னார்வலர்களிடமிருந்து மட்டும் பெறவேண்டும் என்பதே அரசின் முழுமுதற் நோக்கமாகும்.

இளைய சமுதாயத்தினரான மாணவ–மாணவிகளின் ஒட்டுமொத்த சக்தியை வெளிக்கொணர இந்த மாபெரும் இரத்தக்கொடை முகாம் உதவியது எனலாம். இந்த மாபெரும் இரத்தக்கொடை முகாம் வெற்றிக்குரிய அத்தனை பாராட்டுக்களும் மாணவ, மாணவிகளையே சாரும்!

புவி

துவக்கத்தில் புவியைச் சூரியன் சுற்றி வருவதாக நம்பினர். இக்கோட்பாட்டின் மூலரிஷி இயோடாக்சியஸ் (கி.மு.360) என்பவரே. சாமோஸ் நாட்டின் அரிஸ்டார்கஸ் (கி.மு.310–230) எனும் தத்துவ ஞானி, ''விண்மீன்களும் சூரியனும் நகராமல் நின்ற இடத்திலேயே நிலைத்து நிற்கின்றன; சூரியனை மையமாக்கி புவிதான் வட்டமடிக்கிறது'' என்றார்.

சூரிய மையக்கோட்பாடு கோப்பர்னிகஸ் (1473–1543) எனும் வானவியல் நிபுணரால் தான் முதன்முதலில் அறிமுகமானது. இவரது (1543) விண்சுற்றுப் பாதைகளின் இயங்கமைப்பு (De Revolutioni Bus orbium Coelestium) எனும் ஆய்வுநூல், சூரியனே பிரபஞ்ச நாயகன் என்றும் புவி அதனை சுற்றி வருகிறது என்றும் விவரித்தது.

சர் ஐசக் நியூட்டனின் (1642–1726) புவி மையக் கோட்பாடு குறிப்பிடத்தகுந்தது. நிறை ஈர்ப்பு விதிகளை வரையறுத்து இயக்க விதிகளுடன் அவற்றைத் தொடர்புறுத்தி விளக்கிய அவரது ''பிரின்சிபியா'' (Principia) எனும் அறிவியல் நூல் வானாய்வுச் சிந்தனையோட்டத்தில் மகத்தான திருப்புமுனை யாயிற்று. இன்றைய நவீனக் கோட்பாடுகள் கோப்பர்னிகஸ் கொள்கையை ஒட்டியே புவியும் ஏனைய கோள்களும் உருவானதைச் சித்தரிக்கின்றன்.

விண்வெளியில் எங்கிருந்தோ கிளம்பிவந்த வால் விண்மீன்கள் சூரியனில் மோதியதாலேயே கோள்கள் உருவாயின என வாதித்தார் காம்டி–டி–பஃபோன் எனும் பிரெஞ்சு இயற்கை இயலாளர். இன்று நிலவுகிற நெபுலா கருதுகோளை கிபி1775இல் இம்மானுவேல் காந்த் என்னும் ஜெர்மானிய வானவியல் மேதை வெளியிட்டார். சூரியனைச் சுற்றிவந்த நெபுலா வளிமங்கள் உறைந்து திரண்டு பூமியும் பிற கிரகங்களும் உருப்பெற்றன என்பது அவர் கருத்து. கிபி 1900இல் டி.சி.சாம்பர்லின், எஃப்.ஆர்.மௌல்டன் எனும் இரு அமெரிக்க வானவியலரும் பஃபோன் கோட்பாட்டை ஆதரித்தனர். கிபி 1943இல் மீண்டும் நெபுலா கருதுகோளின் இன்னொரு பரிமாணத்தை வான்வீசாக்செர் என்னும் ஜெர்மானிய விஞ்ஞானி வெளியிட்டார். சுமார் 600 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வளிமமும் தூசியுமாகச்

சுழன்றடித்த மேகத்திரளிலிருந்து தோன்றியதே சூரிய மண்டலம் என்பது இவர் கோட்பாடு.

ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன்னர் புவியியல் வல்லுனர்கள் நடத்திய அறிவியல் தேடல்களின் பலனாக புவியின் வயது சுமார் 460 கோடி ஆண்டுகள் என்பது முடிவாயிற்று. பழம் பாறைகளின் தொன்மை அடிப்படையில் இது கணிக்கப்பட்டது.

நிலநடுக்கங்கள் பற்றி எழுந்த ஆய்வினால் புவியின் உள்ளமைப்புகள் குறித்து அறிய முடிந்தது. நிலநடுக்கத்தின் போது அதிர்ச்சி அலைகள் அவை கடந்துசெல்லும் உள்பிரதேசங்களின் தன்மைகளைச் சுட்டிக்காட்டும். அதன்படி புவியின் மையப்பகுதியில் திட உள்ளகமும் (Solic Inner Core), அதனைச் சுற்றி புறக்கூடும் (Outer Core),அதற்கும் வெளியே உறை போன்ற மான்டில் (Mantle) அமைப்பும், அதனை மூடிய புறணி (Crust) எனும் வெளித்தோடுமே புவியின் கட்டமைப்பு அடுக்குகளாகும். உள்ளகத்தின் அடர்த்தி ஒரு கனசென்டிமீட்டரில் 13 கிராம்கள். இந்த மையப்பகுதி 1,300 கி.மீட்டர் கனம் உடையது. உருகிய நிலையில் தோன்றும் புறக் கூட்டின் கனம் 2,080 கி.மீ.

மான்டில் நடு உறைப்பகுதி 2,900 கி.மீ. கனமானது. புறணியோ ஆங்காங்கே 12 முதல் 60 கி.மீட்டர் வரை வேறுபடுகின்றது. உள்ளகத்தில் அதாவது சுமார் 6,370 கிலோமீட்டர் ஆழத்தில் வெப்பநிலை 4,000 டிகிரி செல்சியஸ். அழுத்தமோ 40 இலட்சம் வளிமண்டல அழுத்தங்களுக்கு ஒப்பானது. நடுஉறை பல வகைகளில் முக்கியத்துவம் வாய்ந்தது. புவி ஆரத்தில் பாதியைக் கொண்ட இது (2,900 கி.மீட்டர்) புவியின் கன அளவில் 83 சதவிகித இடத்தை அடைத்துக் கொள்வதுடன், முழுநிறையில் 67 சதவிகிதம் பொருண்மையையும் அடக்கிக் கொண்டுள்ளது. தவிர புறணித் தகடுகளின் சலனத்திற்கு ஆற்றல் ஊட்டுவதே இந்த நடு உறைப் பகுதிதான்.

நிலமட்டத்திலிருந்து சராசரி 45 முதல் 56 கிலோ மீட்டர்கள் ஆழத்தில் தொடங்கும் நடுஉறை, 2,900 கிலோ மீட்டர் ஆழம் வரை இறங்கி மையப்புறக் கூட்டினோடு (Outer Core) ஒட்டி நிற்கிறது. புவியின் வெளிப்பகுதியான குளிர்ந்த புறணியையும், உருகின நிலையிலுள்ள மையப்புறக் கூட்டையும் பிரிப்பது இந்தத் தடித்த நடு உறை. இது மக்னீசியம், இரும்பு உலோகங்கள் செறிந்த சிலிக்கேட் கனிமங்களால் ஆனது. ஆழத்திற்கேற்ப இதன் அடர்த்தி 3.5 கிராம் கனசென்டி மீட்டர்கள் முதல் சுமார் 5.5 கி.க.செ.மீ. வரை அதிகரிக்கிறது.

இந்த நடு உறையின் மேல் தட்டில் சுமார் 250 கிலோமீட்டர் ஆழம் வரை இளகின பாகுக்கோளம் (Asthenosphere) படர்ந்திருக்கிறது. நடு உறைக்கு ஒரு நெகிழ்மத்தன்மை (Plastic) ஊட்டுவது இக்கோளமே. இதனாலேயே மேல் பொருக்கில் ஒட்டிக் கொண்டிருக்கும் கடல்களும் கண்டங்களும் இளகின பாகுக்கோளத்தில் மிதவைகள் மாதிரி இலேசாக நகர்ந்து சென்ற வண்ணம் இருக்கின்றன.

புவியின் மேற்பரப்பை நான்கு கோளங்களாக வகுக்கலாம் (1) பாறைக் கோளம் (Lithosphere) பூமியின் மேற்பரப்பில் காணப்படும் நிலப்பகுதிகள் மட்டுமல்லாது கடலின் அடிப்படுகைகளும் உட்பட்டது. (2) நீர்க்கோளம் (Hydrosphere) கடல்கள், நதிகள், ஏரிகள் முதலான நீர்ப்பரப்புகள் அடங்கிய பகுதி. நீர்க்கோளத்தினுள் ஏறத்தாழ 146,00,00,000 கன கிலோமீட்டர்கள் தண்ணீர் நிறைந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. (3) வளி மண்டலம் (Atmosphere) நில நீர்ப்பரப்புகளைப் போர்த்தி புவி சூழ்ந்து நிற்கும் காற்று மண்டலம் (4) உயிர்கோளம் (Biosphere) மேற்சொன்ன முதல் மூன்று கோளப்பகுதிகளில் உயிரினங்கள் வாழும் பகுதிகளை உள்ளடக்கியது.

பாறைக்கோளம்

பாறைக்கோளம் புவி மேல்பகுதியில் உள்ள கண்டங்களையும் கடல் படுகைகளையும் கொண்டது. கண்டங்களின் நிலம் சராசரி 40 கி.மீ. தடிமனுள்ளது. கடற்படுகைகளோ 10 அல்லது 12 கிலோ மீட்டர்களுக்கு மேல் அதிகத் தடிமனாக இருப்பதில்லை. புவி கொள்ளளவில் ஒரு விழுக்காடும், நிறையில் 0.4 விழுக்காடும் பாறைக்கோளமே.

புவி நுட்பரீதியில் பாறைக்கோளமானது நிலப்பரப்பும் கடல் அடித்தளமும் சேர்ந்தது தான் என்றாலும், பொதுவாக நிலப்பகுதியை மட்டும் அது சுட்டுவதாகக் கொண்டு கணக்குப் பார்த்தால் புவியின் மொத்தப் புறப்பரப்பளவில் 3/10 பாகம் பாறைக் கோளம், எஞ்சிய 7/10 பாகம் கடல்கள்.

பாறைகள் தூளாகப் பொடிந்திட வானிலை (Weather), காலநிலை (Climate), ஈரப்பதம் (Humidity), இடுக்குகளில் வேர் நுழைத்துப் பரவும் தாவரங்களின் வளர்ச்சி போன்ற பல அம்சங்கள் உண்டென்றாலும் வானிலைப் பருவமாற்றங்களின் பங்கு மகத்தானது. கோடை வெயிலில் சூடான பாறைகள் திடீர் மழையில், திடீரெனக் குளிர்விக்கப்படும் போது வெடிப்பு விழுந்து கீறிவிடுகின்றன. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இந்நிலை நீடித்தால் அவை நொறுங்கிச் சிறு

துகள்களாகும். அவ்வாறே பாறைகளுக்கு நடுவில், இடுக்குகளில் தேங்கி நிற்கும் தண்ணீர் குளிர்காலத்தில் உறைந்து பனிக்கட்டிகளாகி விரிவடையும் போதும் பாறைகளில் கீறல் வெடிப்பு விழும். இப்படி ஒன்றுக்கொன்று மெச்சமான சிதைவுகளால் மண்நிறைந்த நிலப்பரப்பு உருவானது.

பாறைக்கோளத்தின் உள்ளமைப்பினை மூவகைப்படுத்தலாம் (1) கனற் பாறைகள் (Igneous Rocks) (2) படிவப்பாறைகள் (Sodimentary Rocks) உருமாற்றப்பாறைகள் (Metamorphic Rocks). புவியின் உள் பகுதியிலிருந்து உருகின ''மாக்மா'' பாறைக்குழம்புகள் வெளியாகி உறைவதால் கனற்பாறைகள் தோன்றின. புவியின் புறணியில் சுமார் 95 விழுக்காடும் இவ்வகைப் பாறைகள்தாம். இவற்றிலும் மூன்று பிரிவுகளைக் காணலாம். கிரானைட் (Granite) எனும் கருங்கல்; ''பசால்ட்'' (Besalt) எனும் மிருதுப்பாறை, எரிமலைப்பாறை என்பன அவை. எல்லாக் கண்டங்களிலும் பிரதானமாகத் தென்படுவது கருங்கல் பாறைகளே. கடல் அடித்தளத்தில் உள்ளவை பெரும்பாலும் ''பசால்ட்'' வகை. எரிமலைப் பாறைகள், குமுறும் எரிமலை பீச்சி வெளித்தள்ளிய பாறைக் குழம்புகளால் உருவாயின.

கடல் அடித்தளங்களில் காணப்படும் அடுக்கடுக்கான படிவங்களால் ஆனவை படிவப் பாறைகள். இவை பூமி மேல்பொருக்கில் சுமார் 5 விழுக்காடே அடங்கியிருப்பினும், நிலப்பரப்பின் முக்கால் பாகமும் பரந்துகிடப்பது இவ்வகைப் படிவங்களே. பொருளாதார அடிப்படையில் அதிக முக்கியம் வாய்ந்தவை இந்தப் படிவப்பாறைகள். நிலக்கரி, எண்ணெய் மற்றும் விலையேறிய கனிமங்களின் விளைநிலம் இது.

பாறைகள் தோன்றும் கணத்திலேயே வெம்மை, உயர்அழுத்தம் அல்லது வேதியல் வினைத்திறன் இவற்றால் உருத்திரிந்து உண்டான பர்றைகளை உருமாற்றப் பாறைகள் என்கிறோம்.சான்றாக : சுண்ணாம்புக்கல் (Lime Stone) அதிவெப்பத்தால் உருமாறி பளிங்குகல் தோன்றுகிறது.

இன்று நாம் காணும் புவிப்பரப்பு கடந்த காலங்களைவிட அடியோடு மாறிவிட்டது. ஆல்ஃபிரெட் வேக்னர் (1880–1930) எனும் ஜெர்மானிய அறிஞர் கண்டங்களின் நகர்ச்சிக் கோட்பாடு என்கிற புதிய சித்தாந்தத்தினை 1951இல் வெளியிட்டார்.

மலைகளை அவற்றின் தோற்றுவாய்க்கு ஏற்ப நான்கு வகைக்ளாகப் பிரிப்பது உண்டு. அவை : மடிப்பு மலைகள் (Fold Mountains) தடுப்பு மலைகள் (Block Mountains) எரிமலைகள் (Volcanic Mountains) சிதைந்த மலைகள் (Residual Mountains) என்பனவாகும். அழுத்தத்தினால் வளைந்து மடிந்து உருவானவை மடிப்பு மலைகள். ஒரு மேசை விரிப்பில் விழும் வளைவுச் சுருக்கங்கள் மாதிரி புவியின் புறணிக்குக் கிடையாக அழுத்தித் தள்ளும்போது அதன் மேல் ஒட்டில் சின்னச் சின்ன வளைவுகள் விழும். அழுத்தம் அதிகரிக்கும்போது அவை விசிறி மடிப்புகள் போன்று படிந்து ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்காய் உயர்ந்துவிடும். உலகின் உயரமான மலைகள் அனைத்துமே இத்தகைய விளைவால் நிமிர்ந்தவையே.

புவிப்பரப்பில் விழுந்த விரிசல் அல்லது கீறல்களை ஒட்டிய பகுதிகள் செங்குத்தாக உயர்ந்தெழுவதன் விளைவாக தோன்றியவையே தடுப்புமலைகள். மிதவைத் துண்டங்கள் ஊட்டும் அழுத்த விசையே இவ்வகை உயர்ந்தெழும் புவிச்சலனங்களுக்குக் காரணம். இரு பக்கமும் தாழ்ந்த பிரதேசங்கள் கொண்டு, மத்தியில் நெடிது உயரும் நிலப்பகுதியே தடுப்பு மலையாகிறது. பார்ப்பதற்குச் சரிவின்றிச் செங்குத்தாகச் செதுக்கிய சுவர் மாதிரி இருக்கும். பிரான்சிலுள்ள வாஸ்ஜஸ் (Vosgies) இவ்வகையைச் சார்ந்தது.

குமுறி வெடிக்கும் உட்பாறைக் குழம்புகள் வழிந்து சுற்றுப்புறங்களில் படிந்துயர்ந்து கெட்டியாவதால்



உயர்ந்து நீர் மட்டத்திற்குமேல் இவ்வகைத் தீவுகளாகத் தெரிகின்றன. சான்றாக, அஸ்சென்சன் மற்றும் டிரிஸ்டான் டாகுங்கா ஆகியன மத்திய அட்லாண்டிக் கடலின் அடியில் முகடுகளாகப் (Ridge) பொங்கிய மலைத் தொடரிலிருந்து எழுந்த கடற்தீவுகளாகும்.

எரிமலைக் குன்றுகள் (Volcanic Mountains) எழுகின்றன. அவற்றின் கூம்பிய உச்சியில் வாய்போல் வட்டக்குழிவு ஒன்றும் காணப்படும். ஜப்பானிலுள்ள ஃபியூஜியாமா, இத்தாலியிலுள்ள வெசுவியஸ் ஆகியன இவ்வகைக்குச் சிறந்த சான்றுகளாகும்.

சில மலைகள் பருவ மாற்றங்களினால் சிதைந்து, ஆறுகளினால் அரிக்கப்பட்டு தேய்ந்து வெறும் மேட்டு நிலமாக மட்டும் காணப்படும். இவற்றையே சிதைவு மலைகள் என்கிறோம். நியூயார்க்கில் உள்ள காட்ஸ்ஹில் மலைகள் இவ்விதம் சிதைந்தனவே.

தீவுகள்

தீவுகளும் விரிந்த நிலப்பரப்புகளே. மிகப் பெரிய 16 தீவுகளின் மொத்தப் பரப்பளவு 560 இலட்சம் சதுர கிலோமீட்டர்கள். இது ஐரோப்பாக் கண்டத்தின் அளவைவிடப் பெரியது. இவை தவிர ஆயிரக்கணக்கில் சிறுதீவுகளும் உள்ளன. இந்தத் தீவுகள் அனைத்தையும் கண்டத்தீவுகள், கடற்தீவுகள், பவளத்தீவுகள் என முப்பெரும் பிரிவுகளுள் அடக்கலாம்.

கண்டத்தீவுகள் (Continental Islands) என்பன பிரிட்டிஷ் தீவுக்கூட்டங்கள் அல்லது நியு ஃபௌண்ட்லாந்து போல கண்டங்களின் அருகுச் சுற்றுவட்டாரத்திற்குள் அமைந்தவையே. இத்தீவுகள் அண்டையிலுள்ள கண்டங்களின் நிலவியல் கட்டமைப்பினைப் பெற்றிருக்கும். கடற்தீவுகளோ (Oceanic Islands) கடல்களின் மார்பில் முளைத்தவை. இவற்றுக்குப் பக்கத்துக் கடற்கரையின் நிலப்பண்புகள் அறவே கிடையாது.

பெரும்பாலும் கடலின் அடிமலைகள் அல்லது கடலின் அடி எரிமலைகளின் உச்சநிலப்பரப்புகளே

பவளத்தீவுகள் (Coral Islands) எனப்படுவன பவளப்பூச்சிகள் (Coral Polyps) எனும் ஒரு வகைக் கடல் நுண்ணுயிரிகளால் உருவான தீவுகள் ஆகும். இவ்வுயிரிகள் கூட்டங்கூட்டமாகவே குடியிருக்கும். இந்த நுண்ணுயிரிகள் இறந்ததும் இவற்றின் சடலங்கள் புற்றுகள் போல் பெருங்கொத்துக்களாகப் படரும். இவை கடல் மட்டத்திற்கு மேலெழுந்து உயரும்போது தீவுகளாக உருமாறுகின்றன. இந்தப் பவளத்தீவுகள் சுண்ணாம்புக்கல் ஒத்த பொருளினால் ஆனவை.

பவள நுண்ணுயிரிகளில் பலவகையுண்டு. அவை பல வினோத வடிவங்களில் வளர்கின்றன. விசிறிகள் மாதிரி, விரித்த குடைகள் மாதிரி, கட்டுகள் மாதிரியெல்லாம் சில பவளப் பாறைகள் உள்ளன. ஆயினும் பெரும்பான்மையானவை கூர்த்த கொம்புகள் போன்றவையே. அவை முல்லைப்பூ போலவும், இளநீலம், பச்சை, ஊதா போன்ற கவர்ச்சிகரமான பல நிறங்களிலும் காணப்படுகின்றன.

ஒருவகைப் பவளங்கள் வரப்புகட்டுவதில் வெகுசாமார்த்தியமானவை. வெப்பப் பிராந்தியக் கடல்களில் செழித்து வளரும் இப்பவளத் தீவுகளின் கரையோரங்களில் இவ்வகை வரப்புத் திட்டைகளைக் (Reefs) காணலாம். பட்டுத்துணிக்கு விளிம்பில் குஞ்சம் தைத்தாற்போலத் தீவுக்கரைகளில் தழைத்து நிற்கும் இவற்றை *விளிம்புத் திட்டைகள்* (Fringing) எனவும் அழைக்கலாம். வெப்ப பிரதேசத் தீவுகளின் இப்பவள விளிம்புத் தொடரே கடல்நீரின் ஆக்ரோஷமான படையெடுப்புக்கு எதிரான அரண் அமைக்கிறது. ஒரு தீவு நீருக்குள் மூழ்கப் போவதாக வைத்துக்கொண்டால் முதலில் கடற்கரைகள் தாம் அமிழும். அவ்வேளையிலும் பவளத்திட்டையோ உயர்ந்து வளரும். அந்நிலையில் இந்த வரப்புத்திட்டைக்கும் தீவிற்கும் இடையே ஆழிசூழ்ந்து கங்கணமிடும் இவ்வகை வரப்பினைத் "தடுப்புத் திட்டை" (Barrier Reef) என வழங்குகிறோம்.

ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து கடற்கரைக்கு இணைக்கோட்டு விளிம்பாகத் தென்படும் பெருந்தடுப்புத் திட்டை (Great Barrier Reef) இவ்வகைப் பொருத்தமான எடுத்துக் காட்டாகும். இது சுமார் 2,000 கிலோமீட்டர்கள் நீளமுடையது. ஆழமில்லாத கழிமுகங்களைச் (Lagoons) சுற்றி வளையமிடும் தாழ்வான பவளத் தீவுகளை "அட்டோள்கள்" (Atolls) என்று மேனாட்டார் குறிப்பர். தமிழில் இதனை வளையத் தீவுகள் எனலாம். பிரிமணைவடிவான இந்த அட்டோள்கள் பவளத்தீவின் வளர்ச்சியின் இறுதிக் கட்டமாகும். பவளத் தடுப்புத் திட்டைகள் தோன்றியபிறகு, அவற்றின் மத்தியில் உள்ள தீவு மெல்ல மெல்லக் கடலினுள் மூழ்கி, முடிவில் சுற்றிலுமிலுள்ள பவளத்தீவு மட்டுமே மிஞ்சும். பார்ப்பதற்குக் கடலின் நடுவில் பிரம்மாண்டமான காற்சிலம்பு போன்று கிடக்கும். மத்தியில் ஆழமற்ற கடற்கழிமுகம். இந்தப் பவள வரப்பின் சுண்ணாம்புக்கல் காலத்தால் சிதைவுற்று மணலாகும். அங்கு காற்றும் பறவைகளும் சுமந்து வந்து தூவும் விதைகள் முளைவிடத் தாவரங்கள் துளிர்க்கும். உயிர் வாழச் சாதகமான சூழ்நிலைகள் பிறக்கும். பின்னர் கல்வரப்பாக உயர்ந்த பவளப்பாறைத் தொடர் பவளத்தீவாக மாறிவிடும்.

நீர்க்கோளம்

நீர்க்கோளத்தினுள் ஏறத்தாழ 1,46,00,00,000 கனகிலோமீட்டர்கள் தண்ணீர் நிறைந்துள்ளது என்பது இன்றைய கணிப்பு. இதில் கடல்கள் மற்றும் நில உட்கடல்கள் 97.3 சதவிகிதமாகும். ஏனைய 2.7 சதவிகிதமும் பனியாறுகள் (Glaciers), பனிச்சிகரங்கள், நன்னீர் ஏரிகள், ஆறுகள், நிலத்தடி நீர் போன்றவை.

புவியியல் வரலாற்றின் துவக்கத்திலிருந்தே உலகின் மொத்த நீர் அளவு கிட்டத்தட்ட மாறாமல் இருக்கிறது. ஆயினும் கடல்நீருக்கும் நன்னீருக்கும் இடையேயுள்ள கொள்ளளவு விகிதம் மட்டும் தட்பவெப்ப நிலைகளுக்கேற்ப அவ்வப்போது மாறுபடுகிறது. ஆவியான கடல்நீர் குளிர்காலத்தில் பனியாறுகளாகவும் பனிச்சிகரங்களாகவும் உறைவதனால், நன்னீர் அளவு அவற்றில் அதிகரிக்கும். வெப்பம் உயரும்போது பனியாறுகளும், பனிச்சிகரங்களும் மீண்டும் உருகி நன்னீராகக் கடலில் கலக்கின்றன. கடந்த எழுபது எண்பது ஆண்டுகளில் கடல் மட்டம் மெல்லப் பொங்கி உயர்ந்து வருவதாக ஆய்வுகள் அறிவிக்கின்றன.

கடல்கள்

புவியின் முழுப்பரப்பின் 70.8 விழுக்காடு கடல்கள். இவற்றில் 144.5 கோடி கன கி.மீ. நீர் நிறைந்துள்ளது. கடல்நீரில் கிட்டதட்ட 3.5 விழுக்காடு வரை உப்புகள் கரைந்திருக்கின்றன. குளோரின், சோடியம், மக்னீசியம், கந்தகம், கால்சியம், பொட்டாசியம், புரோமின், ஸ்டிரான்ஷியம், போரான் போன்றவற்றுடன் மிக நுண்ணிய அளவில் கரி, சிலிக்கான், அலுமினியம், ஃபுளூரின், அயோடின் ஆகிய மூல உப்புகளும் காணப்படுகின்றன.

இயற்கை விசைகளுக்கு உட்பட்ட கடல் நீர் எப்போதும் இயங்கிக்கொண்டே இருக்கின்றது. சூரிய வெப்பமே இதன் இயக்கத்திற்குக் காரணம். நிலநடுக்கோட்டுப்பகுதிகளில் சூரியனால் சூடேற்றப்பட்ட தண்ணீர் விரிவடைந்து ஒரு சில அங்குலங்கள் உயருகிறது. இங்ஙனம் அதிகப்படி உயர்ந்த நீர் வட, தென் துருவங்கள் நோக்கி வழிகிறது.

இந்த அடி ஒழுக்குகளின் பாய்விற்குப் புவியின் சுழற்சி விசையாலும் ஒரு சிக்கல் எழுகிறது. புவி கிழக்கு நோக்கிச் சூழல்வதனால் கடல்நீர் மேற்குமுகமாக அடித்துச் சுருட்டப்படுகிறது. வட அரைக்கோளத்தில் (Northern Hemisphere) அது வலஞ்சுழியாகவும், தென் அரைக்கோளத்தில் (Southern Hemisphere) இடஞ்சுழியாகவும் அமையும். இதுவே "கோரியாலிஸ் விளைவு" (Coriolis Effect).

பெருங்கடல்கள் (Oceans) அல்லது சமுத்திரங்கள் எனப்படுவன. கண்டங்களைப் போல் திட்டவட்டமான எல்லைகள் கொண்டவை அல்ல. இவை ஒன்றோடொன்று மருவிக் கலப்பதனால் இவற்றின் எல்லைகளை வேலியிட்டு வரையறுக்க இயலாது என்ற போதிலும், புவியியல் வல்லுநர்கள் இவற்றைப் பசிபிக், அட்லாண்டிக், இந்திய, ஆர்டிக் பெருங்கடல்களாகப் பிரித்துள்ளனர்.



இந்தப் பெருங்கடல்களில் கடல்கள் (Bays) விரிகுடாக்கள் (Gulfs) மற்றும் இதர பெருங்கடல் உட்புகு முகங்கள் (Inlets) ஆகியன அடங்கும். பசிபிக் பெருங்கடலே உலகில் மிகப்பெரியதும் தொன்மை வாய்ந்ததுமாகும். புவிப்பரப்பளவில் 35.25 விழுக்காடு விரிந்தது. 16,880 க.மீ. அகலமுடையது. உலகிலேயே ஆழங்கூடிய (11,516 மீட்டர்கள்) மிண்டானோ ஆழப்பகுதி (Mindanao Deep) இங்குள்ளது. உலகிலேயே அதிக எண்ணிக்கை கொண்ட தீவுக்கூட்டங்கள் செறிந்து காணப்படுவதும் இங்குதான். மைக்ரோனேசியா (Mirconesia) மெலானேசியா (Melanesia) பாலினேசியா (Polynesia) ஆகிய முப்பெரும் பிரிவுத் தீவுகள் இதில் உள்ளன.

இரண்டாவதாக அளவிற் பெரியது 20.9 விழுக்காடு புவிப்பரப்பளவைக் கொண்டுள்ள அட்லாண்டிக் பெருங்கடல். இதன் அதிகபட்ச ஆழம் (மில்வாக்கீ ஆழப்பகுதி) 8,381 மீட்டர்கள். மூன்றாவதாக இந்தியப் பெருங்கடல். இது கன்னியாகுமரி தொட்டு தென்துருவத்தில் அண்டார்டிக் வரை விரிந்துள்ளது. இது புவிப்பரப்பளவின் 14.65 விழுக்காடாகிறது. இதன் அதிகபட்ச ஆழம் 7,725 மீட்டர்கள் (பிளானட் ஆழப்பகுதி).

ஆர்டிக் என்பது அலைவீசும் சமுத்திரமே இல்லை எனலாம். இதில் கப்பற்பயணம் சாத்தியமில்லை. வட துருவத்தினைச் சுற்றிப் படர்ந்த இப்பகுதியில் குளிர்காலத்தில் தண்ணீர் உறைந்து பனிக்கட்டியாகிவிடும். ஆண்டின் இதரப் பருவங்களில் இந்தப் பனிக்கட்டித் துண்டங்கள் பாளம்பாளமாக இடம் பெயர்வதுமுண்டு. எனினும் இவ்வாறாக 130 இலட்சம் சதுர கி.மீக்கும் அதிகமான இடத்தை நிரப்பிக் கொண்டிருப்பதாலேயே பெருங்கடல் என்ற சிறப்புடன் இது அழைக்கப்படுகிறது.

பெருங்கடல்கள் நான்கே ஆயினும், ஏழு கடல்களாகப் பிரித்துக் கூறுவது மரபு. அதாவது முதல் மூன்று பெருங்கடல்களையும் நிலநடுக்கோட்டின் வடக்கு தெற்கு எனப்பிரித்து, அவற்றுடன் ஆர்டிக் பெருங்கடலையும் சேர்த்து மொத்தம் ஏழு கடல்கள், வட பசிபிக், தென் பசிபிக், வட அட்லாண்டிக், தென் அட்லாண்டிக், வடஇந்திய, தென்இந்திய, ஆர்டிக் என்பன அவை.

ஆறுகள்

உலகின் மிக நீளமான இரண்டு ஆறுகள் தென் அட்லாண்டிக் பெருங்கடலில் சேரும் அமேசான் மற்றும் மத்திய தரைக் கடலில் கலக்கும் நைல் ஆகும். 1969 ஆம் ஆண்டு அளவீட்டின்படி அமேசான் ஆறு 6,448 கி.மீ. நீளமுடையது. பிந்திய கணிப்புகள் 6,750 கி.மீ. என்கின்றன. நைல் ஆற்றின் நீளமோ 6,670 கி.மீ.

ஆறுகளைப் பொறுத்தமட்டில் அவை சுமந்து செல்லும் தண்ணீர்ப் பெருக்களவும், அவற்றின் விவசாய அல்லது போக்குவரவுப் பயன்பாடுகளுமே மிக முதன்மையானவையாகும். இந்த வகையில் மதிப்பிட்டால் அமேசான் ஆறே முதலிடம் வகிக்கிறது. இந்த ஆற்றில் 3,700 கி.மீ. வரை ஒரே பாதையில் பயணம் செய்யலாம். தவிர உலகிலேயே மிக அதிக அளவு நீர் ஒழுகிப் பாய்வது இந்த ஆற்றில்தான். நொடிக்கு சராசரி 1,19,000 கன மீட்டர்கள். இது வெள்ளப் பெருக்கத்தின்போது 2,00,000 கன மீட்டர்களாக உயரும். மேலும் இதன் ஆற்றுப்படுகை உலகிலேயே மிகப் பெரியது. 70 இலட்ச சதுர கி.மீ. இதற்கு சுமார் 15,000 துணை ஆறுகள் (Tributaries) உண்டு. அவற்றுள் 3,200 கி.மீ. நீளமிக்க மெடெய்ராவே மிகப்பெரியது.

வளிமண்டலம்

புவியைப் பாதுகாக்கும் கவசப் போர்வை வளிமண்டலமாகும். சூரிய வெம்மையையும் ஒளியையும் மிதப்படுத்தி புவிக்குள் அனுப்பி வைப்பதில் வளிமண்டலத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது. இதிலுள்ள ஓசோன் (Ozone) படலம் சூரியனிலிருந்து வரும் அபாயகரமான புற ஊதாக் கதிர்ப் பகுதிகளை உறிஞ்சி உலகின் உயிரினங்கள் அழியாமல் பாதுகாக்கிறது.

காற்றழுத்தம் என்பது புவியின் ஒரு குறித்த புள்ளியின் மேல் காற்றின் முழு எடையும் ஊட்டும் அழுத்தம் ஆகும். உண்மையில் காற்றின் அடர்த்தியோ மிகமிகக் குறைவு. சாதாரண அறை வெப்பநிலையிலும் அழுத்தத்திலும் ஒரு லிட்டர் காற்றின் எடை சுமார் 1.3 கிராம்கள். கடல் மட்டத்தில் காற்றழுத்தமானது ஒரு சதுர சென்டி மீட்டரில் 1033.6 கிராம் எடையளவாகும் (14.7 பவுண்டுகள்/சதுர அங்குலம்) இதனையே ஒரு ''வளிமண்டல அழுத்தம்'' (Atmosphere) என்று குறிக்கின்றோம்.

வளிமண்டலம் வெவ்வேறு வளிமங்களாலும் (Gases) நீராவியினாலும் நிறைந்துள்ளது. புவிக்கு மேல் 50 கிலோ மீட்டர் உயரம் வரையிலான வளிமண்டலத்தில் சுமார் 78 விழுக்காடு நைட்ரஜனும், 21 விழுக்காடு ஆக்சிஜனும், மிகக்குறைந்த அளவுகளில் ஆர்கான், கரியமிலவாயு (கார்பன்–டை–ஆக்சைடு). நியான், ஹீலியம், மீத்தேன் போன்ற வளிமங்களும் இறங்கு வரிசையில் அடங்கியிருக்கின்றன. 50 கி.மீ. அப்பால் வளிமண்டலத்தில் ஆக்சிஜன் (O_1), ஓசோன் (O_3), ஹீலியம், ஹைட்ரஜன் அணுக்களும் இடம் பெறுகின்றன.



அணுநிலையில் ஹைட்ரஜன் உயர்வளி மண்டலத்தில் நிலைபெறுவதை அப்போலோ 16 திட்டத்தின்போது சந்திரத் துறையில் விட்டுவந்த தொலைப்படக்கருவி உறுதிப்படுத்தியது. பூமியிலிருந்து 64,000 கி.மீ. வரை ஹைட்ரஜன் அணுக்களே நிறைந்துள்ளது.

ஏறத்தாழ 0.01 முதல் 1 சதவிகிதம் வரையிலான நீராவி, வளிமண்டலத்தில் சுமார் 12 கி.மீ. உயரத்திற்குள்ளாகப் பரவியிருக்கிறது. வளிமண்டலத்தில் நீராவியின் அளவு மிகச் சொற்பமேயானாலும், அதன் முக்கியத்துவம் பெரிது. நீரின்றி வானிலை இல்லை; புவியின் நீர்க்கோளத்திலிருந்து வெப்பத்தாலும் தாவரங்களின் உதவியாலும் வளிமண்டலத்துள் நுழைகிற நீராவி மீண்டும் குளிர்வடைந்து பனியாகவும் மழையாகவும் பெய்கிறது.

மேகங்களை அவற்றின் தோற்ற வடிவிற்கேற்பப் பலவாறாகப் பிரிக்கலாம். "சிரஸ்" (Cirrus) மேகங்கள் வளையல் பூச்சிகள் போன்று சுருண்டவை. சுமார் 12 கி.மீட்டர் உயரம் வரை பரவி நிற்கும். "குமலஸ் இனம்" (Cumulus) வட்டவடிவக் குவியல்களாய் உருண்டு திரண்டவை. ''ஸ்ட்ராடஸ்'' (Stratus) மேகங்கள் ஆகாயத்தில் சிதறிக்கிடக்கும் பஞ்சு முகிலினங்கள், நிம்பஸ் (Nimbus) கார்மேகங்கள் தாம் பயங்கர இடிமழையின் மூலக்கருக்கள்.

மேகங்கள் பூமியை நோக்கி உதறும் மின் தாக்குலுக்கு (Leader Stroke) எதிராக புவியும் வலுமிக்க தாக்கினை மேகங்களை நோக்கி வீசுகிறது. இந்த முன்னோடித்தாக்கும், புவியின் எதிர்தாக்கும் (Counter Stroke) எல்லாம் இமைப் பொழுதினுள் நடந்து முடிகின்றன. இதுவே மின்னல். மின்னலின் உயர்வெப்பத்தால் திடீரென்று காற்று விரிவடையும். வெம்மை தணிந்தபின் குளிர்வதனால் மீண்டும் சுருங்கிடும். காற்றின் இந்த திடீர் விரிவாக்கமும் சுருக்கமும்தான் இடிமுழக்கம். மின்னலும் இடியும் ஒரே சமயத்தில் நிகழ்வதாயினும் மின்னல்தான் முதன்முதலில் நம்மை வந்தடைகிறது. ஏனெனில் ஒளிவேகம், ஒலி வேகத்தினும் மிக அதிகம்.

வளிமண்டலப் பண்பும், கட்டமைப்பும் உயரே செல்லுந்தோறும் மாறுபடுகிறது. குத்துயரத்திற்கேற்ப இதனை நான்கு முக்கிய மண்டலங்களாகவும் அவற்றுக்கு இடையே மூன்று இடைப்பகுதிகளாகவும் பிரிக்கலாம். அவையாவன : 1.ட்ரோபோஸ்ஃபியர் (Troposhere) எனும் வெப்பம் தணிவுறும் திருப்ப இடைப்பகுதியும் 2. ஸ்ட்ரோடோஸ்ஃபியர் (Stratosphere) எனும் வெப்பச் சீரடுக்கு மண்டலமும் அதன் மேல் ஸ்ட்ரோடோபாஸ் (Stratopause) எனும் அடுக்கு இடைப்பகுதியும் 3. மெசோஸ்ஃபியர் (Mesophere) எனும் இடை மண்டலமும் அதன் மேல் மெசோபாஸ் (Mesopause) எனும் இடைப்பகுதியும் 4. அயன மண்டலம் (Ionosphere) அல்லது வெப்ப மண்டலம் (Thermosphere).

புறமண்டலத்திற்கு (Exosphere) அப்பால் விளங்குவது காந்தமண்டலம் (Magnetosphere) இதன் எல்லையாகத் திகழ்வது காந்த இடைப்பகுதி (Magnetopause), வளி மண்டலத்திற்கு வெளியே உள்ள காந்த மண்டலமே புவியின் வேலியாகும். தாழ்வான படலமான திருப்ப மண்டலத்திற்கும், அதற்கடுத்த சீரடுக்கு மண்டலத்திற்கும் (Stratosphere) இடைப்பட்ட பகுதியே ''திருப்ப இடைப்பகுதி–(Tropopause). நிலநடுக்கோட்டிலிருந்து துருவப்பிரதேசங்களுக்குச் செல்லுந்தோறும் இதன் உயரம் தணிந்து வருகிறது. அதாவது வெவ்வேறு அட்சரேகைகளில் (Latitude) வெவ்வேறு உயரத்தில் இது அமைகிறது. இதற்கும் மேலாக 30 கி.மீ. தடிமனில் அமைந்ததே ''சீரடுக்கு மண்டலம்''. இப்படலத்தில் வெப்பநிலை ஒரே சீராக இருக்கிறது. எனவேதான் ஜெட் விமானப் போக்குவரத்திற்கு இது பயன்படுகிறது.

• • •

மின் விபத்தை தவிர்க்க...

பருவ காலங்களில் பலத்த மழை, பெரும் காற்று இடிகளாலும், மேல்நிலை மின் கம்பிகள் அறுந்து தரையில் விழுவதற்கும், மின்மாற்றிகளையும், கம்பிகளையும் தாங்கி நிற்கும் மின் கம்பங்களிலும், கேபிள்களிலும் மின் கசிவு ஏற்படவும், அதனால் மின் விபத்துகள் மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் அதிகம் ஏற்படுவதோடு, பேரிழப்பும்



உண்டாகின்றது. எனவே, பொது மக்கள் கீழ்க்கண்ட பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைபிடிக்குமாறு அரசு தலைமை மின் ஆய்வாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ பருவ மழைக் காலங்களில் மின் மாற்றி பொருத்தப்பட்ட மின் கம்பங்கள், கேபிள்கள், பியூஸ் பெட்டிகள் ஆகியவற்றின் அருகில் பொதுமக்கள் செல்லவோ, அவற்றைத் தொட்டுப் பார்க்கவோ வேண்டாம்.

★ கால்நடைகளை மின் கம்பங்களில் கட்டாதீர்கள்.

★ பொதுச்சாலை மற்றும் நடைபாதைகளில் அறுந்து விழுந்து கிடக்கும் மேல்நிலை மின் கம்பிகளை அகற்றவோ தொடவோ எவரும் முயற்சிக்காதீர்கள். விவரங்களை அருகிலுள்ள தமிழ்நாடு மின்வாரிய அலுவலகத்திற்கு உடன் தெரிவித்திடுங்கள்.

★ சாய்ந்து நிற்கும் மின் கம்பங்களில் அருகிலோ மிகத் தாழ தொங்கிக் கொண்டிருக்கும் மேல்நிலை மின் கம்பிகளின் அருகிலோ எவரும் செல்ல முயற்சிக்க வேண்டாம். அவற்றைத் தொட நேர்ந்தால் மின் விபத்திற்கு உள்ளாக நேரிடும். எனவே கவனம் தேவை.

★ மேல்நிலை மின் கம்பிகள் மீது விழுந்து கிடக்கும் முறிந்த மரக்கிளைகளையோ, பொருட்களையோ அகற்ற முயலாதீர். விபத்து நேரிடும். உயிரிழப்பு நிகழக்கூடும். விவரங்களை அருகிலுள்ள மின்வாரிய அலுவலகத்திற்கு உடன் தெரிவிக்கவும்.

★ பருவ மழைக்காலத்திற்கு முன்பாக, மேல்நிலை கம்பிகளின்மீது படர்ந்து உரசிக் கொண்டிருக்கும் உங்கள் வீட்டுத் தோட்ட மரக் கிளைகளை/தென்னை பட்டைகளை வெட்ட மின்வாரியத்திற்குத் தெரிவித்து வெட்டச் செய்யுங்கள். இதன் மூலம் மின் கம்பிகள் அறுந்து விழுவதை தடுக்கவும், மின் விபத்துக்களைத் தடுக்கவும் அரசிற்கு உதவி செய்யுங்கள்.

★ மேல்நிலை மின் கம்பி அறுந்திருந்தாலோ, மிகத் தாழ தொங்கிக் கொண்டிருந்தாலோ மின் கம்பம் பழுதுபட்டிருந்தாலோ தாங்கு கம்பி அறுந் திருந்தாலோ, விவரங்களை உடனே அருகிலுள்ள மின்வாரிய அலுவலகத்திற்கு தெரிவியுங்கள்.

★ பருவ மழை நேரங்களில் சாலையில் மின் கசிவு காரணமாக மின் அதிர்ச்சியை நீங்கள் உணர்ந்தால் மற்றவர்களை உடனே எச்சரியுங்கள். எவரையும் தொட அனுமதிக்காதீர்கள். உடனே அருகிலுள்ள மின்வாரிய அலுவலகத்திற்கு தெரிவியுங்கள்.

★ வீட்டு தரையிலோ, சுவரிலோ நீங்கள் மின் அதிர்ச்சியை உணர்ந்தால், மின்னோட்டத்தை தடை செய்யுங்கள். உடனே லைசென்சு பெற்ற மின் ஒப்பந்தக்காரரை அணுகி உங்கள் வீட்டு ஒயரிங்கை சோதனை செய்து பழுதை சீர் செய்து கொள்ளவும்.

★ ஈ.எல்.சி.பி. (மின் கசிவு தடுப்பான்) – யை பொருத்தி மின் கசிவினால் ஏற்படும் மின் விபத்தை தவிர்த்திடுவீர்.

★ மின் கம்பங்களில் கொடிக் கயிற்றைக் கட்டி துணிகளை உலர்த்த முயலாதீர்கள்.

• • •

இன்றைய மழைநீர் சேகரிப்பு! நாளைய குடிநீர் பாதுகாப்பு!!

நீரியல் சுழற்சி

இயற்கையின் அமைப்பில் நாம் வாழும் பூமிப்பகுதி மட்டுமே மூன்றில் இரண்டு பாகம் தண்ணீரைக் கொண்டுள்ளது என்பது ஆராய்ச்சியாளர்களின் கூற்றாகும். மேலும் பூமிப்பகுதியில் உயிர்வாழும் செடி கொடிகளிலிருந்து மனிதன் வரையுள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் தண்ணீர் பிரதானமான தாகும். எனவேதான் உலகப் பொதுமறை கண்ட திருவள்ளுவர் ''நீரின்றி அமையாது உலகு'' என்று தண்ணீரின் தேவையை வலியுறுத்தியுள்ளார்.

சூரிய வெப்பத்தின் மூலமாகக் கடல் நீர் ஆவியாகி, மழை தரும் மேகங்களாக உருவெடுக்கிறது. இந்த மேகங்கள் குளிர்ந்து, மழையாகப் பூமியில் விழுகின்றன. இந்த மழைநீர், ஆறுகள் மற்றும் குளங்கள் வழியாகப் புரண்டோடி நிலத்தடி நீரை மேம்படுத்துகிறது. மிகுதியான நீர் கடலில் சென்று கலக்கிறது. இந்த நீரியல் சுழற்சி தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. நீரியல் சுழற்சி கீழுள்ள படத்தில் விளக்கப்பட்டுள்ளது.

நகரப்பகுதிகளில் தண்ணீர்த் தட்டுப்பாடு! ஏன்?

தமிழ்நாட்டில் பொதுப் பயன்பாட்டிற்காகவும், குடிநீருக்காகவும் ஊரணிகள் அல்லது கிராமக் குளங்கள் மற்றும் கோவில் குளங்கள் அமைத்து, மழைநீரைச் சேமித்து, ஆண்டு முழுவதும் பயன்படுத்தி வருகிறோம்.

சென்னை போன்ற பெருநகரங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அதிகமாகக் கட்டப்படுகின்றன. அவற்றைச் சுற்றியுள்ள இடங்கள் திறந்த வெளியாக விடப்படாமல் சிமெண்ட் கான்கிரீட்டால் மூடப்படுகின்றன. இதனால் மொட்டை மாடியிலும், குடியிருப்பைச் சுற்றியுள்ள இடங்களிலும் விழும் மழைநீர் பூமிக்குள் செல்ல வாய்ப்பில்லாமல் தெருக்களில் தேங்கி நிற்கிறது. ஒருசில சமயங்களில் இது வெள்ளச் சூழலையும் உண்டாக்குகிறது. அந்தச் சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கும் மழைநீர் சேமிப்பு அவசியமாகிறது.

மழைக் காலங்களில், மழைநீரை அது பெய்யும் இடத்திலேயே சேமிப்பதுதான் சிறந்ததாகும். மழைநீரைத் திறந்த வெளிகளிலோ (ஏரி, குளம், குட்டைகள்) அல்லது நிலத்தடியிலோ சேமிக்கலாம்.

சென்னை போன்ற பெருநகரங்களில் திறந்த வெளிகள் குறைந்து கொண்டு வருவதால், இங்கெல்லாம் மழைநீரை நிலத்தடி நீராக மட்டுமே சேமிக்க முடியும். மழைக்காலம் ஒவ்வொரு வருடமும் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குத்தான் நீடிக்கும். அப்போது பெய்யும் மழைநீரைச் சேமித்தால்தான் நமக்கு மீதமுள்ள ஒன்பது மாதங்களுக்குத் தட்டுப்பாடில்லாமல் குடிநீர் கிடைக்கும்.

நம் ஒவ்வொரு வீட்டிலும் மழைநீரைச் சேமிப்பதன் மூலம் மழைநீர் தெரு நோக்கி ஓடுவதைத் தடுத்து, வெள்ளச் சூழலை வெகுவாகத் தவிர்க்கலாம். ஏனென்றால், ஒவ்வொரு வீட்டிலும் சேமிக்கப்படாத மழைநீர்தான் அப்பகுதிகளில் வெள்ளச் சூழலை ஏற்படுத்துகிறது. மேலும் மாடியில் விழும் மழைநீர்க் குழாய்கள் மூலம் தோட்டப் பகுதிக்குக் கொண்டு செல்லப்படுகிறது; ஒருசில அடுக்குமாடிக் குடியிருப்புகளில் இந்த மழைநீர் சாக்கடைகளில் விடப்படுகிறது. இதனால் நமக்கு மழைநீரின் பலன் முற்றிலும் கிடைக்காமல் போய்விடுகிறது.

கிராமப்புறங்களின் நிலை

கிராமப்புறங்களில் பெய்யும் மழைநீர் வீணாக வழிந்தோடுகிறது. ஆக்கிரமிப்பு மற்றும் பல இதர காரணங்களால், ஊரணிகள் மற்றும் கிராமக் குளங்களை முழுமையாகப் பயன்படுத்த இயலுவதில்லை. அதனால், கிராமங்களில் கூட நீர்த் தட்டுப்பாடு அதிகமாகக் காணப்படுகிறது. இத்தகைய மழைநீரை கசிவுநீர்க் குளங்கள் அல்லது ஏரிகள் உள்ள பகுதிகளுக்கு நீரோடை மூலமாகத் திருப்பி, மழைநீரைச் சேமிக்க இயலும். இத்தகைய கசிவுநீர்க் குளங்களின் மூலமாகச் சுற்றுவட்டாரத்திலுள்ள நிலத்தடி நீர் மட்டம் பெருமளவில் உயரும். இந்த நிலத்தடி நீர்வளத்தினைக் கொண்டு விவசாயத்தை நல்ல முறையில் மேற்கொள்ள இயலும்.

நமது மாநிலத்தில் உள்ள 40,000–த்திற்கும் மேற்பட்ட ஊரணிகள் மற்றும் குளங்களில் மழைநீர் சேகரிக்கப்பட்டால், கடலில் வீணாகக் கலக்கும் மழைநீரின் அளவினைக் கட்டுப்படுத்த இயலும். மழைநீர் சேகரிப்பு மூலம் நமது கோடைகால நீர்த்தேவையைச் சமாளிக்க இயலும். நிலத்தடி நீர் குடிப்பதற்குத் தகுந்ததாக இல்லாமல் இருப்பின், மழைநீர் சேமிப்பினால் ஒருசில



வருடங்களில் நீரின் தன்மை மாறி அது குடிப்பதற்கு உகந்ததாக மாற வாய்ப்புள்ளது. இக்காரணங்களினால் மழைநீரைச் சேமிப்பது முக்கியமானதாகிறது.

மழைநீர் சேகரிப்பு முறைகள்

கிணறுகளின் மூலம் மழைநீர் சேகரிப்பு - தனி வீடு

மொட்டை மாடியிலிருந்து வரும் மழைநீரை வடிகுழாய் மூலமாகத் தரைமட்டத்தின் கீழே செங்கல் ஜல்லி நிரப்பிய (2 அடி X 2 அடி X 3 அடி) தொட்டி மூலம் வடிகட்டி கிணற்றினில் சேருமாறு செய்யலாம். தனி வீடுகளிலும், அடுக்குமாடிக் குடியிருப்புகளிலும் கிணறுகள் இருந்தால் மொட்டை மாடிக் குழாய்களை இணைத்துத் தொட்டியில் விழும் மழைநீரைக் கிணற்றுக்குள் செலுத்தி விடலாம். இப்படிக் கிணற்றுக்குள் விடப்படும் மழைநீர் சுத்தமாகவே இருக்கும் என்பதால், இதை நம் அன்றாடத் தேவைக்கு உபயோகப்படுத்துவதில் எவ்விதத் தயக்கமும் காட்ட வேண்டியதில்லை. மேற்கண்ட கட்டமைப்பிற்கான குறைந்தபட்ச செலவுத்தொகை ரூ.1,200 ஆகும்.

வடிகட்டிக் குழிகள் மூலம் மழைநீர் சேகரிப்பு

3 மீட்டர் ஆழமும் 30 செ.மீ. விட்டமும் உள்ள குழியை 3 மீட்டர் இடைவெளி விட்டுத் தோண்டி அதில் செங்கல் ஜல்லியை நிரப்பி அதன் மேல் 15 செ.மீ. பகுதியில் ஆற்று மணலை நிரப்ப வேண்டும். உள்வாயிலை ஒட்டி 7.5 செ.மீ. உயரத்திற்குச் சிறுசிறு தடுப்புச் சுவர்கள் எழுப்பினால் நீர் ஊற ஏதுவாகும். கிணறு இல்லாத வீடுகளில் வசிப்பவர்கள் அல்லது மேல் மாடியில் விழும் மழைநீரைக் கிணற்றில் செலுத்த விருப்பப்படாதவர்கள், அந்த நீரை ஆழ்துளைகளில் செலுத்தி நிலத்தடி நீரைப் பெருக்க வழிசெய்யலாம். இதற்கான செலவுத் தொகை ரூ.2,500 ஆகும்.

கூழாங்கல் படுகை மூலம் மழைநீர் சேகரிப்பு - அடுக்கு மாடிக் குடியிருப்புகள்

வீட்டுத் தடுப்புச் சுவர் உள்எல்லையின் மூன்று பக்கங்களிலும், 3¼ அடி அகலமும், 5 அடி ஆழமும் கொண்ட குழியைத் தோண்டி அதில் 5 முதல் 7.5 செ.மீ. அளவுள்ள கூழாங்கற்களை நிரப்பினால் மொட்டை மாடியில் விழும் மழைநீர் கூழாங்கல் படுகைக்குச் செல்ல ஏதுவாகும். அடுக்குமாடிக் குடியிருப்புகளின் சுற்றுப்புறச் சுவற்றின் உள்பகுதியைச் சுற்றி இந்தக் கூழாங்கல் படுகை அமைப்பதற்கான செலவுத் தொகை ரூ.5,000 ஆகும்.

கசிவுநீர்க் குட்டைகள்

நிலத்தில் வழிந்தோடும் மழைநீரை கசிவுநீர் குட்டைகளில் நிரப்ப வேண்டும். இவ்வாறு நிரப்பப்பட்ட நீர், நிலத்தடியினுள் நாளடைவில் ஊடுருவிச் சென்று நிலத்தடி நீரை மேம்படுத்த வாய்ப்பாகிறது. எனவே, இதுபோன்ற குட்டைகள் அமைக்கப்படும் இடங்களில் நிலம் மிகவும் ஈரப்புத் தன்மை கொண்டதாக அமைய வேண்டும். இதற்காகத் தேவைப்படும் மழைநீரை அருகில் அமைந்துள்ள ஓடைகள் மற்றும் கால்வாய்களிலிருந்து பெறலாம்.

தடுப்பு அணை

தடுப்பு அணைகள் பெரும்பாலும் கால்வாய்கள் மற்றும் சிறிய ஆறுகளின் குறுக்கே அமைக்கப்படுவனவாகும். இந்த அணைகள் ஆறுகளின் குறுக்கே கட்டப்படுவதால் ஆறுகளின் நீர்வரத்து அணையின் ஒருபுறம் தடுக்கப்பட்டுத் தேங்குவதற்குச் சாதகமாகிறது. இவ்வாறு ஆற்று நீர் தேக்கப்படுவதால் அது பூமியினுள் ஊடுருவச் சாத்தியமாகிறது. இதனால் நீர்வளம் சுற்றுப்புறப் பகுதிகளில் பெருகுவதற்கு வாய்ப்பாகிறது.

நிலத்தடி தடுப்பு அணை

நிலத்தடி தடுப்பு அணைகள் ஆற்றின் குறுக்கே அமைக்கப்படுவதாகும். இந்த அணைகள் ஆற்றின் மணல் பகுதியின் அடியில் பூமிக்குள் புதையுமாறு அமைக்கப்படும். இதுபோன்ற அணைகள் சுவர்களாலும், களிமண் போன்ற நீர்க்கசிவு ஏற்படாத கட்டுமானப்



பொருட்களாலும் அமைக்கப்படுவதால் நிலத்தடி நீர் ஆற்றின் படுகையிலேயே பூமிக்கடியில் தேக்கி வைக்கப்படுகிறது.

மழைநீர் சேகரிப்புத் திட்டத்தின் பயன்கள்

★ நிலத்தடி நீர் மட்டம் உயரும்.

★ கடலோரப் பகுதிகளில் நிலத்தடி நீரின் உப்புத்தன்மை குறையும்.

★ வீணாகும் மழைநீரை நிலத்தடியில் சேமித்து பயன்படுத்த ஏதுவாகும்.



★ பெருநகரங்களில் ஆங்காங்கே மழைநீர் தேங்குவது தவிர்க்கப்படலாம்.

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே பசும்புல் தலைகாண்பு அரிது (குறள்)

மரம் வளர்ப்பதன் மூலம் சுற்றுப்புற சூழல் மாசுபடுதலை தவிர்ப்பதுடன் குளுமை சூழ்நிலையைப் பெருக்கி அதன்மூலம் வானத்தின் மழைமேகங்களை ஈர்த்து மழையைத் தருவிக்கும் ஆற்றல் பெருக்கப்படுகின்றது.

தெரிந்து கொள்வோம்!

மழைநீரைச் சேகரிப்பதால் எனக்கு என்ன பயன்?

மழைநீரைச் சேகரித்து கிணற்றிலோ அல்லது குழாய்க் கிணற்றிலோ அல்லது நிலத்தடியில் நீர் சேமிப்பு மூலம் பயன்படுத்துவதால் பூமியின் நீர்வளம் அதிகரிக்கும்.

மழைநீரை சேகரித்து நேரடியாகப் பயன்படுத்தலாமா?

வீட்டுக் கூரையின் மேல் விழும் மழைநீர் வடிகால் குழாய்கள் மூலம் பெறப்பட்டு வடிப்பான்கள் மூலமாக நேரடியாக நீர்த் தொட்டிகளில் நிரப்பப்பட்டு உபயோகப் படுத்தலாம். எனினும் நீர்த்தன்மையைப் பாதுகாக்க அவ்வப்போது சிறிதளவு பிளீச்சிங் பவுடர் சேர்த்துக் கொள்ளலாம்.

சேகரிக்கப்படும் மழைநீரின் அளவு குறித்த விவரங்கள் எப்படி கணக்கிடப்படுகிறது?

வீட்டின் கூரையின் பரப்பளவையும் சராசரி மழையளவின் அறுபது சதவீதத்தையும் பெருக்கினால் வரும் தொகை சேகரிக்கப்படும் மழை நீரின் அளவாகும். உதாரணத்திற்கு 100 ச.மீ. வீட்டுக் கூரையின் மேல் பெறப்படும் சராசரி மழையளவான 1,200 மி.மீ என்று கணக்கிட்டால் 100 x 1200 x 0.6 = 72,000 லிட்டர் அளவு சேகரிக்க இயலும்.

களிமண் உள்ள பகுதிகளில் எவ்வாறு பூமியின் நீர்வளத்தை அதிகரிப்பது?

களிமண் உள்ள ஆழம் வரை குழி அமைத்து அதில் மணல் மற்றும் கூழாங்கற்களை நிரப்பி மழைநீரை செலுத்தலாம். களிமண் ஆழம் அதிகமுள்ள பகுதிகளில் நீர் சேகரிப்பு குழியின் உள்ளே குழாய்க்கிணறு அமைத்து அதனையும் கூழாங்கற்களால் நிரப்பி பயன்படுத்தலாம்.

கடினப்பாறை பகுதியில் எந்த முறையைச் செயல்படுத்தலாம்?

கடினப்பாறை பகுதிகளில் மேல்பகுதி சிதைந்த பாறைகளின் ஆழம் வரை பள்ளம்



எடுத்து மணல் மற்றும் கூழாங்கற்களை நிரப்பி நீர் சேகரிக்கலாம். மேலும், சிதைந்த பாறை அதிக ஆழம் வரை இருப்பின் (சுமார் 5 மீட்டருக்கு மேல்) ஒரு துளைக்கிணறு அமைத்து அதில் கூழாங்கல் நிரப்பி, மழைநீரைச் சேகரிக்க வேண்டும்.

மழைநீர் சேகரிப்பிற்கான உத்தேச செலவு என்ன ஆகும்?

1. கிணறுகளின் மூலம் மழைநீர் சேகரிப்பிற்கு தனிவீட்டிற்கு ரூ.1,200 ஆகும்.
2. வடிகட்டிக் குழிகள் மூலம் மழைநீர் சேகரிப்பிற்கு ரூ.2,500 ஆகும்.
3. வீட்டுத் தடுப்புச் சுவர் சுற்றி கூழாங்கல் படுகை அமைத்து மழைநீர் சேகரிப்பிற்கு ரூ.5,000 ஆகும்.

★ ★ ★

சத்தியத்திற்கு
உயிர் கொடுத்த
சத்திய சீலர்

அன்புப் பாதையில் சென்று, இன்று
இன்ப சுதந்திரத்தைத் தந்தவரே
இந்தியாவின் ஏழ்மையை போக்க எளிமையாய்க்
காட்சி தந்தவரே நீர் வாழ்க!

யுத்தத்தை விரட்ட சத்தியாகிரகம்
ஏழ்மையை விரட்ட எளிமை
அறவழியில் நின்று அரும்பணி
என வாழ்ந்த தியாக சீலரே நீர் வாழ்க!

சத்திய வாழ்வில் ஏற்பட்ட சோதனையிலும்
உண்மையையே உலகிற்கு உணர்த்தி
சத்தியத்திற்கு உயிர் கொடுத்த
சத்திய சீலரே நீர் வாழ்க!

□ கோ. சண்முகம்

மகனே!... நீ பிறந்த அன்று உன் தந்தை அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே யில்லை. அந்த மருத்துவ மனையினையும், பிரசவ அறையினையும் சந்தோஷமாய்ச் சுற்றிச் சுற்றி வந்து குதூகல மடைந்தார். பிறந்த மூன்றாம் நாள் மருத்துவமனையைவிட்டு வீட்டிற்குப் புறப்பட்டோம். காரில் வரும் வழியெல்லாம் பாட்டும் சந்தோஷச் சிரிப்பும் ஏக அமர்க்களமாய் இருந்தது. நீ பிறந்த மகிழ்ச்சியைக் கொண்டாட வீட்டிற்கு வந்ததும் வேலைக்காரர்களுக்கெல்லாம் புதுத்துணிமணிகளை வாங்கிக் கொடுத்தார் உன் அப்பா.

உன் மீது பிறர்கண் பட்டுவிடக் கூடாதென்பதில் நாங்கள் இருவருமே சர்வ ஜாக்கிரதையுடன் உன்னைப் பராமரித்துவந்தோம். அப்படியிருந்தும் பாவி யாருடைய கண்பட்டதோ தெரியவில்லை, அன்றே உன் மிருதுவான மேனியில் இரத்தத் துளிகள் காணப்பட்டதும் பதறிப் போனேன். அதிர்ச்சியடைந்து போயிருந்த என்னை உன் அப்பாதான் சமாதானப் படுத்தினார். உன்னை யறியாமலேயே உன் கை பட்டு தொப்பூழ் கொடியிலிருந்து இரத்தம் கசிந்துள்ளது என்பது பிறகுதான் எனக்குத் தெரியவந்தது என்றாலும் எனக்குள் பதைபதைப்பு அடங்க நீண்டநேரமாயிற்று.

கொஞ்சம் கொஞ்சமாய் நீ வளர்ந்தாய். உன்னைச் சாப்பிட வைப்பதற்குள் போதும் போதும் என்றாகி விடும். உன்னைச் சாப்பிட வைப்பதற்கு உனக்கு ஏதாவது கதை சொல்லவேண்டும். அதற்காகவே நான் நிறைய கதைகளைப் படிக்க வேண்டியிருந்தது. இந்தச் சோறு எப்படி உண்டானது என்று நீ ஒரு நாள் கேட்க அதற்கு உழவன் வயலில் நெல்லை விதைப்பதிலிருந்து... அது ஒரு பிடி அரிசியாகி, வெந்து சோறாவது வரை ஒவ்வொன்றாகச் சொன்னேன். "ஓ... ஒரு பிடி அரிசியை உண்டாக்க இவ்வளவு சிரமம் இருக்கிறதா ?... அப்படியானால் இப்படிச் சேகரித்த உணவை வீணாக்காமல் சாப்பிடுகிறேன்" என்று நீ சமர்த்தாய் பதில் சொல்லி அன்று முதல் ஒழுங்காகச் சாப்பிடத் தொடங்கினாயே... மகனே... அதெல்லாம் உனக்கு நினைவிருக்கிறதா!...

திடீரென்று உன்னைப் பற்றிய நினைவுகளே என்னைச் சுற்றிச் சுற்றி வருவதற்குக் காரணமே நேற்று உன் நண்பன் கொண்டுவந்த அதிர்ச்சியான செய்திதான். அதிலிருந்து மீள முடியாமல்தான் நான் உன் நினைவால் பிதற்றிக் கொண்டிருக்கின்றேன்.

நேற்றுகாலை, உன் தந்தை வழக்கம்போல செய்தித்தாளைப் புரட்டிக் கொண்டிருந்தார். அடுப்படியில் நான் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தேன். உன்னைப் போலவே ஒரு வாலிபன் இராணுவ உடையில் வந்தான். அவனைப் பார்த்ததும் எங்களுக்குள் ஏதோ ஓர் இனம்புரியாத பீதி. உன் அப்பா அவனை உள்ளே அழைத்தார். தயங்கியபடியே உள்ளே வந்தான். அவனுக்கும் சேர்த்து தேநீர் கொடுக்கலாம் என்றெண்ணி உடனே சமையற்கட்டிற்குச் சென்றேன். அடுத்த சில நொடிகளில் வெளி அறையில் தடாலென்ற... சத்தம்... ஓடிவந்து பார்த்தேன்... உன் தந்தை துவண்ட கொடியினைப்போல் சோபாவில் சுருண்டு விழுந்து கிடந்தார். பதறிப்போனேன். அந்த இராணுவ வீரனின் வருகைக்கான அர்த்தம் புரிந்தது. ஒரு கோடி இடி என் தலையில் விழுந்ததுபோல பேரதிர்ச்சி.

என்னுடைய இயல்பான நிலைக்கு நான் திரும்பினேனா என்பது எனக்கே புரியாத கலக்கத்தில் உழன்றேன். உன் அப்பா மெல்ல மெல்ல தலையைத் தூக்கி என்னைப் பார்த்தார். யாருக்கு யார் ஆறுதல் கூறமுடியும் ? கணநேரத்தில் அவரது கண்களை இருள் கப்பிக் கொண்டன. சோகத்தின் சாயல் முகத்திலும் படர்ந்தது. பேசக்கூட வலுவில்லாமல் நா குழறியது. என்றாலும் ஒரு சில வார்த்தைகள் புரிந்தன.

"மகனே...! நீ எங்கே இருக்கிறாய் ? உன் நண்பன் கூறிய விஷயமெல்லாம் உண்மையா ?... ஆறு நாட்கள்... ஆறு நாட்களாய் உனக்கு ஒரு சொட்டு தண்ணீர் கூட கொடுக்காமல் கைகளைப் பின்புறமாகக்கட்டி, பனிமலைச் சிகரத்தில் பட்டினி போட்டுக் கொடுமைச் செய்தார்களா அந்தப் பாகிஸ்தானியர்கள் ?... இங்கே வந்து பாரடா உன் வீட்டை... இங்கு

ஒரியா மொழிச் சிறுகதை

மூலம் :
பரமிதா சத்பதி

தமிழில் :
பின்னலூர் மு.விவேகானந்தன்

உண்பதற்கு ஆளில்லை... எவ்வளவோ தின்பண்டங்கள் தினம் தினம் வீணாகிக்கொண்டிருக்கிறது. நீரூற்றி வளர்த்த தென்னை மரங்கள் குலைகுலையாய் இளநீரைச் சுமந்துகொண்டு உனக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன!... என் செல்வமே... நீ வளர்த்த அல்லிச் செடிகள் தள்ளாடிக் கொண்டிருக்கும் அளவிற்குத் தோட்டத்தில் உள்ள குளத்தில் நிறைய நீர் இருக்கிறது. ஆனால்... நீயோ... ஒரு சொட்டு தண்ணீர்கூட கிடைக்காமல் நா வறண்டு போய்விட்டாயா?... கடவுளே... இதென்ன கொடுமை... யாருக்கு என்ன தீங்கு செய்தேன்?... என் மகனை இப்படித் தண்டித்து விட்டாயே...!" உன் அப்பாவின் புலம்பல் தொடர்ந்து கொண்டே இருந்தது.

அன்றைய மதியம் விமானம் மூலம் உன் அப்பா புறப்பட்டுச் சென்றார். அதற்குள்ளாகச் செய்தி பரவி வீட்டிற்கு கூட்டம் வரத் தொடங்கிவிட்டது. போய் வருகிறேன் அம்மா என்று கூறிச் சென்று இரண்டு மாதங்கள் தானே ஆகிறது. நீ விரைவில் வருவாய் என்று ஆசை ஆசையாய் உன்னைக் காணக் காத்திருந்தேனடா தங்கமே! அதற்குள் இப்படியொரு இடி விழுமென்று எதிர்பார்க்கவில்லையடா கண்ணே!

ஒப்பாரி வைத்து வைத்து ஒடுங்கிப்போய்விட்ட எனக்கு இரண்டாவது தடவையாக ஊசி போடுவதற்கு டாக்டர் குப்தா வந்திருந்தார். மயக்க நிலையிலேயே இருந்த எனக்கு நினைவு வந்து வந்து போயிற்று. வாய்விட்டுப் புலம்ப வலுவில்லாத நிலையிலும் என் மனம் புலம்பியது, ஆன்மா அழுதது, அண்டமே இருண்டு சுழன்றது. என் ஒப்பாரி ஓயவில்லை. "மகனே... உனக்கு நினைவிருக்கிறதா?... அப்பொழுது உனக்கு ஐந்து வயதிருக்கும். உன் அப்பாவிற்கு ஆல்வாரில் வேலை. டவுன் ஹால் மைதானத்தில் நடைபெற்ற சிறுவர்களுக்கான ஓவியப் போட்டியில் கலந்து கொள்ள வேண்டுமென்று அடம்பிடித்து கலந்து கொண்டாய். "நான் ஒரு போர்வீரன்" என்னும் தலைப்பில் ஓவியம் வரைந்து அதில் முதல் பரிசையும் நீ தான் வென்றாய்.

முறுக்கிய மீசையுடன் கையில் துப்பாக்கி ஏந்தி இராணுவ உடையில் நீ



வரைந்த அந்த ஓவியத்தை நீ மறந்திருந்தாலும் இன்னும் அது பசுமையாக என் நெஞ்சில் நிற்குதடா! உன் ஓவியத்தைப் பார்த்து உன் அப்பா எவ்வளவு பெருமைபட்டுக் கொண்டார் தெரியுமா?... "என் மகன் பெரிய வீரனாக வருவான். அவன் வரைந்த படத்தைப் பார்த்தாலே உங்களுக்குத் தெரியும்" என்று வீட்டிற்கு வருவோர் போவோரிடமெல்லாம் காட்டிக்காட்டிப் பூரித்துப் போவாரே, அது உனக்கு நினைவிருக்கிறதா?

அப்படி அவர் சொல்லும் பொழுதெல்லாம் 'எனக்குள் ஒரு இறுக்கம், ஒரு நெருடல் இருந்து கொண்டுதான் இம்சைப்படுத்தும். அப்படி அவர் ஒருமுறை கூறும்பொழுது, "ஏங்க, என்ன வேலைக்குப் போகணும்னு அவன் ஆசைப்படு றானோ தெரியாது. அப்படியிருக்க நீங்களே ஏன் அவன் பெரிய இராணுவ வீரனா வரப்போறான்னு உங்க விருப்பத்த 'அவன்மேல திணிக்கறீங்க' என்று மடக்கினேன். ஆனால் விதியை யார்தான் மாற்றமுடியும்?

தாத்தாவின் முகம், பாட்டியின் கண்கள், அப்பாவின் பேச்சு, அம்மாவின் சாயல் இப்படி ஒரு குழந்தைக்கு ஏழு தலைமுறையின் விசேஷ குணங்கள் இயல்பாக வரும் என்று கூறுவார்கள். உன் குறுகுறு பார்வையும், பேச்சும், நடையும் ஒட்டுமொத்தமாக நம் பரம்பரையையே பிரதி பலிப்பதாய் இருக்கும். அதனால்தான் நீ யாரையாவது கிண்டல் செய்தாலோ அல்லது குத்தலாகப் பேசினால்கூட கோபப்படாமல் உன் குறும்புத் தனத்தை வெகுவாக நான் ரசிப்பேனடா? அந்தக் கிண்டலும், குறும்புத்தனமும் செய்ய நீ வரமாட்டாயா?...

வெளியே வராண்டாவில் யாரோ பேசிக்கொள்வது என் காதில் கேட்கிறது. கண்டவர்களை காந்தம்போல கவர்ந்திழுக்கும் உன் கண்கள் இரண்டையும் தோண்டி யெடுத்து விட்டார்களாம்... இரும்பு போல வலிமையுள்ள உன் உடல் இளகிய வெண்ணெய்யைப்போல கரைந்துவிட்டதாம்... உனக்காகப் பரிதாபப்பட்டுக் கொண்டு கண்ணீர் விடும் மக்கள் வெள்ளம் வீட்டைச் சுற்றி, ரோட்டைச் சுற்றி கூட்டங்கூட்டமாக அலைமோதிக் கொண்டிருக்கிறது.

அதோ... அந்தக் கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு "அத்தை அத்தை" என்று அலறியடித்துக் கொண்டு ஓடிவருகிறாள் ரத்னா. நீ அவளுக்குப் பரிசாகப்போட்ட வைர நெக்லஸ் கழுத்தில் மின்னிக் கொண்டுதான் இருக்கிறது. இந்த டிசம்பர் மாதத்தில் அவளுக்கும் உனக்கும் திருமணம் கூட நிச்சயிக்கப் பட்டுவிட்டது. "இராணுவத்தில் இருப்பவன் சீக்கிரத்தில் திருமணம் செய்து கொள்ளவேண்டும்" என்று உன் தந்தை அடிக்கடி கூறுவார். அவளிடம் எங்களுடைய திருமண ஆல்பத்தைக்காட்டி, நான் எப்படி யெல்லாம் உடையணிந்திருந்தேனோ அப்படியெல்லாம் நீயும் ஒப்பனை செய்து கொண்டு ஒரு திருமண ஆல்பத்தைத் தயாரிக்க வேண்டும் என்று கூறினேன். நாணத்தோடு அவள்

அதற்குச் சம்மதம் தந்தாளே, அவளைக்கூட நீ மறந்துவிட்டாயா?

ரத்னா என் அருகில் குலுங்கிக் குலுங்கி அழுதுகொண்டு நின்றாள். நானும் இதுவரையில் மயக்கநிலையில் என்னென்ன பிதற்றிக் கொண்டிருந்தேன் என்பதை உணர முடியாமலேயே லேசாகக் கண் விழித்துப் பார்த்தேன். ரத்னா அருகில் நின்ற டாக்டர் குப்தாவிடம் ஏதோ கூறினாள். எனக்கு மீண்டும் ஊசி போடப்பட்டு மயக்கமடைந்தேன். "கடவுளே, என் பேரக்குழந்தைகளைப் பார்க்காமல் நான் சாகக்கூடாது" என்பதுதான் என்னுடைய வேண்டுதல். ஆனால் ... ஆனால்... இப்பொழுது...

வீட்டிற்கு வெளியே கூடியிருந்த கூட்டத்தின் இரைச்சல் சட்டென்று அடங்கியது. ஏழெட்டு இராணுவ வண்டிகளின் சப்தம் மட்டும் கேட்டது. ஆராத்துயரோடு உன் தந்தை இராணுவ வண்டியிலிருந்து இறங்க நாலைந்து இராணுவ அதிகாரிகள், தேசியக்கொடியால் போர்த்தப்பட்டு மலர் வளையம் வைக்கப்பட்டிருந்த ஆறடி நீளமுள்ள மரத்தாலான சவப்பெட்டியைச் சுமந்து வந்து வீட்டிற்குள் வைத்தனர் இராணுவ மரியாதையுடன்.

சவப்பெட்டியின் மேல் பகுதியைத் திறந்து காட்டினர். ஐயோ... கடவுளே... இப்படியொரு கொடுமை எனக்கு ஏற்படவேண்டுமா... என் நெஞ்சே வெடித்துவிடும் போலிருந்தது. உடலில் உள்ள இரத்தம் உறைந்துவிட்டது போன்றிருந்தது... நடுக்கமும் பதற்றமும் நாடித் துடிப்பை, உச்சத்திற்கே கொண்டு போய்விட்டது.



ஆறு அடி நீளமுள்ள அந்தப் பெட்டியில் மூன்றடி நீளத்தில் வெள்ளைத் துணியால் நன்றாகச் சுற்றி மூடப்பட்ட பிண்டம். மகனே அது நீ தானாம்... பாவிகள் உன் இரண்டு கால்களையும் வெட்டிவிட்டதால்... பூரணமாக உன் உருவத்தைக் கூட பார்க்கமுடியாத பாவியாகிப்போனோம். உன் தந்தையோ சாறு பிழிந்தெடுக்கப்பட்ட கரும்புச்சக்கைப்போல பரிதாபமாக இருந்தார். அவரைச் சமாதானப் படுத்தும் சக்தி எனக்கில்லை. இரத்த அழுத்தம் அதிகமாகவே, டாக்டர் குப்தா எனக்கு மற்றொரு ஊசிபோட்டார். நான் எப்படிக் கண் அயர்ந்து போனேன் என்பது எனக்குத் தெரியாது.

என் செல்வமே!.. இனி எப்படி உன் முகத்தைப் பார்ப்பேன்! எங்கே பார்ப்பேன்! சோகத்தின் விளிம்பில் நின்ற எனக்குத் தூக்க ஊசி வேறு போட்டுவிட்டார்கள். அதனால் என் துக்கம் தணிந்துவிடுமா என்ன?... மகனே! என்னை விட்டுப் பிரிய உனக்கு எப்படியடா மனம் வந்தது என்று வாய்விட்டுக் கதறினேன்.

என் கண்முன்னே ஒரு பெரிய உருவம் வந்து 'உஷ்... சத்தம் போடாதே என்று சைகை மூலம்' உணர்த்தியது. வெள்ளைவெளேரென்று பூதாகரமான உடல், பனிமலை போன்ற உருவம். அதன் தலைமுடி காடுகளைப் போன்று அடர்த்தியாக இருந்தது. அந்த உருவம் என்னைப் பார்த்து "யார் நீ?" என்று கேட்டது. அதற்கு நானோ, "நான் என் மகனைப் பறிகொடுத்துவிட்டேன். அவனைத் தேடிக் கதறுகிறேன்" என்று கூறவே, அந்தப் பெரிய உருவம் மீண்டும் "உஷ்... சப்தம் போடாதே என்று எச்சரிக்கை செய்தபடியே, ... அவன் அதோ அங்குதான் தூங்கிக் கொண்டிருக்கிறான்... அவன் நிம்மதியாகத் தூங்கட்டும்... அவனைத் தூக்கத்திலிருந்து எழுப்பித் தொந்தரவு செய்யாதே..." என்றது.

"என்னைவிட என் மகன் மீது உனக்கு அவ்வளவு அக்கறையா? அப்படிப்பட்ட அக்கறையுள்ள நீ யார்" என்று ஆவேசமாக வினவினேன். அதற்கு அந்த உருவமோ மிகவும் சாந்தமாக, "நான் தான் கார்கில் வீரத்தாய்" என்று பதிலிறுத்திக் கொண்டே இதோபார் என் உடலை என்று காட்டியது.

வெள்ளைவெளேரென்று இருந்த அந்த உருவத்தின் ஒவ்வொரு பகுதியிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. என் உடல்மீது 356 குண்டுகள் துளைத்து இரத்தம் வழிந்து கொண்டிருக்கிறது. ஒரு மகனை இழந்ததற்கே இப்படி ஓலமிடுகிறாயே, 356 மகன்களை அநியாயமாக இழந்து தவிக்கும் என் பரிதாபத்தை சோகத்தை நான் யாரிடம் போய்ச் சொல்வேன் என்று அந்த உருவம் கூறிக்கொண்டிருக்கும் போதே அதன் உடல் முழுவதும் வெள்ளை நிறம்மாறி இரத்தக்கறை படிந்து சிகப்பு வண்ணமாக மாறிக்கொண்டே வந்தது. "அவர்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கிறார்கள். மாதக்கணக்கில் கண் துஞ்சாமல் கடமையாற்றிய வீரர்கள் இப்பொழுதாவது, அவர்கள் கண் அயர்ந்து தூங்கட்டும், அவர்களைத் தொந்தரவு செய்யாதே" என்ற அந்த கார்கில் வீரத்தாய்... அந்த நெடிய வெண்மையான உருவம் திடீரென்று மறைந்து விட்டது.

"நீண்ட நேரம் இரவில் நீ கண் விழித்துப் படிப்பாய். சில நேரங்களில் அசதியில் அப்படியே தூங்கிவிடுவாய். உன் அறைக்கு வந்து எட்டிப் பார்ப்பேன். உன் தூக்கத்தைக் கெடுக்கக் கூடாதென்று எண்ணி, போர்வையை எடுத்து உனக்குப் போர்த்திவிட்டு விளக்குகளை அணைத்து விட்டு வந்து விடுவேன். பஞ்சுமெத்தையில் படுத்துப் பழகிப் போன உனக்குப் பனிப்பாறைகள் தான் மெத்தையானதோ?... மகனே!... நான் எங்கே போவேன், யாரிடம் கேட்பேன். உன் முகவரி எனக்குத் தெரிகிறதோ இல்லையோ, நீ கார்கில் வீரத்தாயின் பாதுகாப்பில் இருப்பதால் இனிமேல் ``Care of the Mother of Kargil War" என்றே கடிதம் எழுதுகிறேன், அது நிச்சயம் உனக்கு வந்து சேரும்.

• • •

கூட்டுறவுத்துறை

சீரமைக்கப்பட்ட மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம்

1. சேவைக் கட்டணம் முழுமையாகத் தள்ளுபடி
2. வட்டி 18 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதமாகக் குறைப்பு
3. திருப்பிச் செலுத்தும் காலம் நீட்டிப்பு: 118 நாட்களிலிருந்து 147 நாட்களாக நீட்டிப்பு
4. தினந்தோறும் செலுத்துவதற்குப் பதில் வாரம் ஒரு முறை செலுத்துதல்
5. ரூ.1,000 கடன் பெறுபவர்கள் இதுவரை வட்டி மற்றும் சேவைக் கட்டணமாக ரூ.177 செலுத்தினர். ஆனால் தற்போது ரூ.31.20 வட்டி மட்டும் செலுத்தினால் போதுமானது. இதனால் ரூ.146.80 கடன் சுமை குறைகிறது.

மகளிர் உரிமை ஆண்டு 2001

மகளிர் வளர்ச்சிப் பிரிவு

எல்லா மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலும் மகளிர் வளர்ச்சிப் பிரிவு ஏற்படுத்தப்படும். இப்பிரிவு தொழில் முனைவோரை கண்டறிதல், சுய உதவிக் குழுக்கள் கண்டறிதல், அவர்களுக்கு கடனுதவி செய்தல் போன்ற பணிகளையும் செய்யும்.

மகளிர் வளர்ச்சிக் கடன் திட்டம்

மகளிர் தொழில் முனைவோருக்கு திட்ட மதிப்பீட்டின் பேரில் ரூ.10 இலட்சம் வரை கடன் வழங்கப்படும். வட்டி 15 சதவிகிதத்திலிருந்து வணிக வங்கிகளைவிட 1 சதவிகிதம் வட்டி குறைவு.



உழைக்கும் மகளிருக்கு சிறப்புக் கடன் திட்டம்

மாத வருமானம் பெறும் மகளிருக்கு ரூ.20,000 அல்லது சம்பளத்தில் 5 மடங்கு இதில் எது குறைவோ அதை அவர்கள் ஆரம்பிக்கும் தொடர் வைப்புக் கணக்குத் தொகையின் அடிப்படையில் வழங்கப்படும். 3 ஆண்டுகளில் 15 சதவிகிதம் வட்டியில் மாத சம தவணைகளில் கடனைத் திரும்பச் செலுத்த வேண்டும்.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் கருவூல நிதி மேலாண்மைப் பிரிவு (Treasury Management Cell) ஆரம்பித்தல்

கூட்டுறவு வங்கிகளிலுள்ள உபரி நிதியை இலாபகரமாகப் பயன்படுத்த அரசுக்கடன் பத்திரங்களான குறுகிய கால Treasury Bills நீண்டகால Government Securities ஆகியவற்றில் முதலீடு செய்ய திட்டமிடப் பட்டுள்ளது. அரசுக் கடன் பத்திரங்களில் அவசியமான நேரத்தில் முதலீடு செய்யவும், வங்கியின் தேவையைப் பொறுத்து இப் பத்திரங்களை விற்பதற்கும் வழி உண்டு. இப்பணிகளைச் சிறப்பாகச் செய்யத் தனிப்பிரிவு ஆரம்பிக்கப்படும். இப்பிரிவு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியோடு ஒருங்கிணைந்து செயல்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கடன் திட்டம்:

தமிழ்நாட்டிலுள்ள மக்கள் தொகையில் 20 சதவிகிதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உள்ளனர். ஆனால் இம்மக்கள் தொகைக்கேற்ப கூட்டுறவு வங்கிகளால் கடன் வழங்கப்படுவதில்லை. இம்மக்களில் சிறு தொழில்கள், சிறுவணிகம் செய்ய ரூ.5,000 வரை கூட்டுறவு வங்கிகளில் கடன் வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரில் தொழில்முனைவோர் (Entrepreneurs) முன்வந்தால் அவர்களுக்கு திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் ரூ.10 இலட்சம் வரை கடன் வழங்க கூட்டுறவு வங்கிகள் நடவடிக்கை எடுக்கும்.

கூட்டுறவு வங்கிகள் கணினிமயமாக்கல்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், 128 நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் 5 கோடி வைப்பு நிதி உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றில் வங்கியியல் நடவடிக்கைகள் அனைத்தும் மூன்றாண்டுகளில் கணினிமயமாக்கப்படும். தற்போது சில பிரிவுகள் மட்டுமே கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

நியாயவிலைக் கடை பணியாளர்களுக்கு பயிற்சி

தமிழகத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளில் உள்ள பணியாளர்களுக்கு நுகர்வோரை கனிவாகவும், இனிமையாகவும் அணுகவும் எடைக் குறைவு இல்லாமல் வழங்கவும் ஒரு பணியிடைப் புத்தாக்க பயிற்சி வழங்கப்படும். •

16ஆம் பக்கத் தொடர்ச்சி

தென்னிந்தியாவுக்கும் வட இந்தியாவுக்குமிடையே கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே மிகப் பெரிய அளவுக்கு வாணிகம் நடைபெற்று வந்தது. தமிழகத்தில் ஊர்கள் சில பண்டங்களின் உற்பத்தியில் சிறந்து விளங்கின. பாண்டி நாட்டு முத்துகளைப் பற்றி மெகஸ்தனிஸ் சாலவும் புகழ்ந்து பேசுகின்றார். தாமிர வருணி, பாண்டிய கவாடம் ஆகிய இடங்களில் கிடைத்த முத்துகளும், மதுரையில் நெய்யப்பட்ட பருத்தி ஆடை வகைகளும் கௌடிலியரின் அருத்தசாத்திரத்தில் புகழிடம் பெற்று விளங்குகின்றன. உறையூர், பருத்தி நெசவில் பேர் பெற்று விளங்கிற்று. தமிழகத்துப் பண்டங்கள் வடநாட்டுக்கு வங்கக் கடல் வழியாகவே சென்றன. தரை வழியாக நடைபெற்ற வாணிகம் மிகவும் குறைவுதான்.

தமிழகம் அயல்நாடுகளுடன் மேற்கொண்டிருந்த வாணிக உறவானது தமிழரின் நாகரிகம், பண்பு, கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்குக் கைகொடுத்து உதவிற்று. குறிப்பாக வட இந்திய வாணிகத் தொடர்பினால் தமிழகத்துக்கு ஏற்பட்ட நல் விளைவுகள் பல. தீமைகளும் பல. வட இந்தியாவிலிருந்து வாணிகச் சரக்குகளுடன் ஆரிய மக்களும் சிறுசிறு கூட்டமாகத் தமிழகத்தில் நுழையலானார்கள். ஆரியரின் நாகரிகத்துக்கும் பண்பாடுகளுக்கும் தமிழரின் நாகரீகத்துக்கும் பண்பாடுகளுக்கும் ஆழ்ந்த வேறுபாடுகள் உண்டு. அவர்களுடைய மொழிக்கும் தமிழ் மொழிக்கு மிடையே முரண்பாடுகள் பல உண்டு. ஆரியரின் கடவுளர் வேறு, தமிழர் வழிபட்டு வந்த கடவுளர் வேறு. ஆரியரின் வாழ்க்கை முறைகள் வேறு, தமிழரின் வாழ்க்கை முறைகள் வேறு. இடம் விட்டு இடம் பெயரும் மக்கட் கூட்டங்களில் பெரும்பாலார் உடற்கட்டும் நெஞ்சுரமும் இளமையும் வாய்வளமும் வாய்ந்தவர்களும், கலைஞர்களும், புதுமை வேட்கையினரும் மட்டுமே சேர்ந்திருப்பர். நோய்வாய்ப்பட்டவர்களும், அறிவிலிகளும், கோழை நெஞ்சினரும் இடம் பெறார்கள். தமிழகத்தை நாடிவந்த ஆரியரும் முற்கூறிய நல்வாய்ப்புகள் அனைத்தும் பெற்றவர்களாகவே இருந்தனர். தமிழகத்துக்குள் அடிவைத்த ஆரியர்கள் பலர் தமிழ்நாட்டிலேயே தங்கி குடியேறிவிட்டனர். அவர்கள் மக்களுடன் கலந்து வாழ்ந்தும் தமிழ் மொழியைப் பயின்றும், தமிழரின் பழக்கவழக்கங்களைத் தாமும் மேற்கொண்டும், தமிழ்க்குடிகளாகவே மாறிவிட்டனர் எனினும், அவர்களுடைய நெஞ்சின் ஆழத்தில் மட்டும் தாம் வடவர்கள் என்றும், தம் நாகரீகமும் பழக்கவழக்கங்களும் மேலானவை என்றும், தமக்கு இடங்கொடுத்திருந்த தமிழ் மக்கள் தாழ்குடிகள் என்றும் ஓர் உட்குரல் ஒலிக்கக் கேட்டுக் கொண்டேயிருந்தது. நாளடைவில் தமிழகத்து மன்னர்களின் நன்மதிப்பையும், நட்புறவையும் இவர்கள் ஈட்டிக்கொண்டனர். அவற்றைத் தம் நலத்துக்கும், தம் குடி நலத்துக்கும் பயன்படுத்திக் கொள்ளும் அரியதொரு வாய்ப்பை ஆரியர் கைநழுவவிடவில்லை. அவர்கள் ஆரிய எழுத்துக்களின் ஒலிகளையும் ஆரியர் சொற்களையும் தமிழிலும் கலந்தனர். தம்முடைய பழக்க வழக்கங்களையும், சமயக் கோட்பாடுகளையும், தெய்வ வழிபாட்டு முறைகளையும், பண்பாடுகளையும் அவர்கள் தமிழகத்தில் பரவவிட்டனர். இரு வேறு இயல்புகள் படைத்த தமிழர், ஆரியர்களுக்கிடையே இனக் கலப்பும் உண்டாயிற்று. இக்கலப்புகள் யாவும் மெல்ல மெல்ல காலப் போக்கில் ஏற்பட்டனவேயன்றித் திடீரென்று ஒரு சில நாளில் ஏற்பட்டனவல்ல. எந்நாட்டிலும், எக்காலத்திலும் திடீர்க் கலப்புகள் நிகழுவது இயல்பன்று. தமிழகம் ஆரியமயமாக்கப்பட்டது என்று சிலர் கூறுவர். அவர்களுடைய கருத்துக்குச் சான்றுகள் கிடையா. எனவே, அதை உண்மை என நம்புவதற்கில்லை. வெகு காலமாகத் தனிச் சிறப்புடனும் தூய்மையுடனும் வளர்ந்து வந்த ஒரு நாகரிகமும் பண்பாடும் இடையில் நுழைந்த ஒரு மக்களினத்தின் முயற்சியால் வழக்கிறந்து அழிந்து மறைந்து போய்விட்டன. தமிழகம் ஆரிய நாடாகிவிட்டது என்னும் கூற்றானது வரலாற்றுக்கு முரண்பாடாகும். ஆரிய மொழி தமிழகத்தில் நுழைந்து பரவலாயிற்று என்பதை மறுக்க முடியாது. ஆரிய எழுத்தொலிகளும் சொற்களும் தமிழில் கலந்தனவாயினும் அவற்றுக்குத் தமிழர் ஓர் ஒதுக்கிடத்தையே அளித்து வந்தனர். அவற்றைத் தமிழில் ஆளுவதற்குத் தனி இலக்கண விதிகள் வகுக்கப்பட்டன.

ஆரிய மொழியின் கூட்டெழுத்து வடிவங்கள், எழுத்துப் புணர்ச்சி முறைகள், சொற்சேர்க்கை மரபுகள் தமிழில் இடம் பெறவில்லை. எனவே, அவ்வாரிய எழுத்தொலிகளையும் சொல்லமைப்புகளையும் தமிழில் சேர்ப்பதற்காகவே பிற்காலத்தில் கிரந்த எழுத்துக்கள் உருவாக்கப்பட்டன. ஆரியக் கடவுளர் தமிழகத்தில் சிறு தெய்வங்களாகவே விளங்கினர். சிந்துவெளி மக்களின் பசுபதியும் பண்டைய தமிழரின் மாயோனும் சேயோனும் தொடர்ந்து தமிழரின் வழிபாட்டைப் பெற்று வந்தனர். நாள்பட ஆரியர் மதக் கொள்கைகளையும் தமிழர் பின்பற்றினர்.

வடநாட்டுடன் வாணிகத் தொடர்பை மேற்கொண்ட தமிழகத்துக்கு மற்றொரு சீர்கேடு விளையலாயிற்று. இனம், குலம் ஆகிய வேறுபாடுகளினால் இடர்ப்பட்டுத் தடுமாறாத தமிழரின்சமூகம் காலப்போக்கில் பல சாதிகளாகப் பிரிந்தது. மக்களுக்குப் பிறப்பாலேயே உயர்வு தாழ்வுகள் கற்பிக்கப்பட்டன. பழந்தமிழகத்தில் திணைப் பிரிவுகளின்படியே வாழ்ந்து வந்த மக்கள் அவ்வாழ்க்கையினின்றும் நழுவினர். முல்லை நிலத்து இடையனும் குறிஞ்சி நிலத்துக் குறவனும் மருத நிலத்து வேளாண் பெண்ணை மணக்க முடியாது. அதைப் போலவே மருத நிலத்து வேளாண் இளைஞன் ஒருவன் நெய்தல் நிலத்துப் பரதவப் பெண்ணைக் காதலித்தல் இழுக்காகக் கொள்ளப்பட்டது. தமிழ்ச் சமூகத்துக்கு நேரிட்ட இந்த இன்னல்களைக் கண்டு அஞ்சிப் பல அறிஞர்கள் அவ்வப்போது தமிழருக்கு அறவுரைகள் வழங்கி வந்துள்ளனர். 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும், சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமை யான்' என்று முதன் முதல் தமிழருக்கு எடுத்தோதியவர் திருவள்ளுவர். இக்குறளை அறத்துப் பாலில் வைக்காது பொருட்பாலில்

வைத்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும். பொருட்பால் முழுவதும் மக்கள் சமுகத்தின் வாழவேண்டிய முறைகளை வகுக்கும் புறத்திணை இலக்கணமாகும். காலத்தால் திருக்குறள் ஆசிரியருக்குப் பிற்பட்டவரான திருமூலரும், ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்று கூறி மக்களைத் திருத்த முயன்றார். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த சைவ சமய குரவரான திருநாவுக்கரசர், 'சாத்திரம் பல பேசும் சழக்கர்கள்! கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்?'' என்று வினவுகின்றார். அவருக்கு ஏறத்தாழ இருநூறு ஆண்டுகட்குப் பிற்பட்டுத் தோன்றிய மாணிக்கவாசகரும், 'சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேன்...' என்று சாதி வேறுபாடுகளை அறவே வெறுக்கின்றார். சாதி சமய வேறுபாடுகளை, மக்களை விழுங்கிவிடும் ஆற்றுநீர்ச் சுழலுக்கு இவர் ஒப்பிடுகின்றார். சென்ற நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவரான இராமலிங்க அடிகளார், 'சமயம் குலம் முதல் சார்பெலாம் விடுத்த அமயந்தோற்றிய அருட்பெருஞ்சோதி என்றும், 'சாதி குலமென்றும்... ஓதுகின்ற பேயாட்டம்' என்றம் மக்கள் சமூகத்தை அலைத்து வருகின்ற சாதி வேறுபாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றார்.

தமிழர் மரபில் கலந்துவிட்ட ஆரியக் கருத்துகளும், சொற்களும், பண்பாடுகளும் இடத்திற்கேற்பத் தம் வடிவம் மருவித் தமிழ் வடிவை ஏற்றுக் கொண்டதுமுண்டு. அதைப் போலவே, தமிழரின் கருத்துக்களையும், சொற்களையும், பழக்க வழக்கங்களையும், பண்பாடுகளையும் ஆரியரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆடவன் அத்தை மகள் அம்மான் மகளை மணப்பதும், பெண் அத்தை மகன் அம்மான் மகனை மணப்பதும், பெண்மக்கள் முகத்தில் மஞ்சள் பூசிக் குங்குமப் பொட்டு அணிவதும், விருந்தினரை வரவேற்று அவர்கள் பிரிந்து விடைபெறும்போது அவர்கட்கு வெற்றிலை,பாக்குக் கொடுப்பதும், பெண்கள் விதவைக் கோலம் பூண்பதும், தமிழரின் வழக்கங்கள். இவற்றை ஆரியரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். தமிழ்மக்கள் வழிபட்ட தெய்வங்கள், சமயச் சடங்குகள், புராணக் கதைகள் ஆகியவை ஆரியருக்கும் உரிமையாயின.

ஆரியர்கள் தங்கள் வாழ்விற்கு இடந்தேடியும், மன்னரின் ஆதரவை நாடியுமே தமிழகத்தில் வந்து குடியேறினார்கள். அவர்கள் தமிழருடன் போர்புரியவில்லை. போரிட்டு நாடு பிடிக்கவுமில்லை. ஆரியரின் ஊடுருவல் தமிழகத்தில் நீண்டகாலமாக நடைபெற்று வந்தது. அவர்கள் தமிழரோடு தமிழராய்க் கலந்து தமிழரின் வாழ்க்கையையே தாமும் வாழ்ந்து தமிழரின் வாழ்க்கை மரபுகளில் பல மாறுதல்களைப் படிப்படியாய் உண்டாக்கினார்கள்.

ஆரியருக்கும் தமிழருக்குமிடையே பல போராட்டங்கள் நேர்ந்தனவென்றும், அவற்றின் இறுதியில் ஆரியரே வெற்றி கண்டனர் என்றும், அப்போராட்டங்களையே இராமாயணக் காவியம் குறிப்பிடுகின்றதென்றும், ஒரு சாரார் கூறுவர். புராணக் கதைகள் வேறு, வரலாற்று நிகழ்ச்சிகள் வேறு என்பதை இங்கு நாம் மறந்துவிடலாகாது. புராணக் கதைகள் பெரும்பாலும் கற்பனைப் படைப்புகள், அவற்றைக் கொண்டு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சிகட்குக் காரணம் காட்டல் பொருந்தாது. இராமாயணத்தைப் போலவே கந்தபுராணத்தையும் ஆரியர்–தமிழர் போராட்டங்களின் விளைவு என்று கூறுதலும் ஏற்புடைத்தன்று. கந்தபுராணத்தில் வரும் அகத்தியரானவர் இருக்கு வேதத்திலும், பல புராணக் கதைகளிலும், தமிழ் இலக்கியத்திலும் தோற்றமளிக்கின்றார். தமிழில் எழுந்துள்ள பிற்காலத்திய சித்தர் இலக்கியங்கள் பலவற்றுக்கு ஆசிரியராகவும் விளங்குகின்றார். எனவே, அகத்தியரை ஆரியர் என்றோ, ஆரிய மொழியையும், ஆரியக் குடியேற்றத்தையும் தமிழகத்துக் கொண்டு வந்தவர் என்றோ, அன்றித் தமிழகத்தில் தமிழ் பயிற்றுவிக்க வந்தவர் என்றோ கூறும் செய்திகள் யாவும் வெறும் கற்பனைகளேயன்றி வரலாற்று நிகழ்ச்சிகள் அல்ல என்பது தோற்றம். எனினும், அகத்தியர் யாராக இருந்திருப்பர் என்ற ஆராய்ச்சியில் ஆய்வாளர் பலர் ஊக்கங்காட்டி வருவது இயல்புதான். அகத்திய முனிவர் கயிலைமலையில் வாழ்ந்தவராகவும், விந்திய மலையின்செருக்கையடக்கியவராகவும், பொதிகை மலையில் வந்து தங்கியவராகவும் கந்தபுராணம் தெரிவிக்கின்றது. அகத்தியர் மலய மலையில் வாழ்பவர் எனப் பாகவதமும் மச்ச புராணமும் குறிப்பிடுகின்றன. அவர் ஆனைமலையில் வாழ்பவராகவும் கூறுவர். சிவபுராணங்களில் அவர் வேடராகவும், வில்லியாகவும் காட்சி தருகின்றார். அகத்தியர்கள் அரக்கக் குலத்தினர் என்றும், புலத்தியரின் மகனான அகத்தியர் ஒருவர் இராவணனின் முன்னோர் என்றும் வாயுபுராணம் பேசுகின்றது.

அகத்தியர் அனைவருமே ஏதேனும் ஒரு மலையுடன் தொடர்பு கொண்டிருப்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். அகத்தியர்களுக்கும் தமிழ்நாட்டுக்கு மிடையே நெருங்கியதொரு தொடர்பும் இருந்ததாகத் தெரிகின்றது. எனவே, அகத்தியர்கள் தமிழர் என்றும், புராண வரலாற்றுத் திரிபுகளின் மூலம் ஆரியராக்கப் பெற்றனர் என்றும் ஊகிக்க இடமேற்படுகின்றது.

தொல்காப்பியம் ஆக்கப்படுவதற்கு முன்பு 'அகத்தியம்' என்றோர் இலக்கண நூல் வழங்கி வந்ததாகவும் கூறும் மரபு ஒன்று உண்டு, எல்.டி.பார்னெட் என்பார் இதைப்பற்றித் தம் கருத்தைத் தெரிவிக்கின்றார். ஆரியர்கள் தமிழகத்துக்கு வந்து குடியேறிய பின்பு, தம் நாகரிகத்தினைப் பெருக்கிக் கொள்ளுவதற்கும், தமிழரின் பண்பாட்டுச் சிறப்புகளைச் சுருக்குவதற்கும் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாய் எழுந்ததொரு கற்பனையாகும் இஃது என்று அவர்கூறுகின்றார். அகத்தியரைப் பற்றிய புராணக் கதைகளும், பரசுராமரைப்பற்றிய புராணக் கதைகளும் இத்தகைய நோக்கத்தின் அடிப்படையில் எழுந்தவையேயாம் என்று கருத வேண்டியுள்ளது.

தமிழரின் சமயம், சமூக வாழ்வு, மொழி, இலக்கியம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகிய துறைகளெல்லாவற்றிலும் ஆரியர்கள் தலையிட்டு அவற்றைத் தம்இயல்புக்கு ஏற்ப மாற்றிவிட முனைந்து வந்தனர். மக்கள் பெயர்கள், கடவுளரின் பெயர்கள், ஊர்கள், ஆறுகள், மலைகள் முதலியவற்றின் பெயர்கள் யாவும் தமிழ் வடிவத்தை இழந்தன: ஆரிய வடிவத்தை ஏற்றன. ஆரியர் தம் பழக்க வழக்கங்கட்கும், மொழிக்கும் எத்துணை ஏற்றம் கற்பிக்க வேண்டுமோ அவ்வளவும் கற்பிக்கவும், அவற்றையே தமிழரின் வாழ்க்கை முறையில் ஆட்சியில் நிறுத்தவும் நுண்ணிய திட்டங்கள் பல செயற்படுத்தி ஓரளவு வெற்றியுங் கண்டார்கள். அவர்கள் புனைந்த புராணக் கதைகள் எல்லாம் அவ் வெற்றிக்குத் துணைபுரிந்தன. எடுத்துக்காட்டாக, விசுவாமித்திர முனிவருக்கு மக்கள் ஐம்பதின்மர் என்றும் அவர்களின் வழிவந்தவர்களை ஆந்திரர், புண்டரர், சபரர், புலிந்தர், முதிபர் ஆகியவர்கள் என்றும், அவர்கள் அனைவருமே 'தாசர்கள்' என்றும் ஐந்திரேய பிராமணம் என்னும் சமஸ்கிருத நூல் கூறுகின்றது. இப் பெயர்களை ஏற்ற நாடுகள் யாவற்றிலும் ஆரியர் குடியேறி அங்கெல்லாம் தம் நாகரிகத்தை வளர்த்துக் கொண்ட செய்தியையே இந்த ஐந்திரேய பிராமணம் எடுத்துக் கூறுகின்றது போலும். வடமொழிக்கு இலக்கணம் வகுத்த பாணினி என்பார் (சு. கி.மு. 600) வடநாட்டுப் பூகோள அமைப்பை நன்கு அறிந்தவர். அவர் நருமதைக்குத் தெற்கில் கலிங்கத்தை மட்டுங் குறிப்பிடுகின்றார்: ஆனால், தென்னாட்டைக் குறிப்பிட வில்லை. அவருக்குக் காலத்தால் பிற்பட்டவரான காத்தியாயனர் (கி.மு. 4 ஆம் நூற்றாண்டு) தம் இலக்கண நூலில் தென்னிந்திய நாடுகள் அனைத்தையுமே குறிப்பிடுகின்றார் இதைக் கொண்டு வடநாட்டு ஆரியர்கள் கி.மு.600–க்குப் பிறகே தமிழகத்திற்கு வந்து குடியேறியிருக்கவேண்டும் என்று கருத வேண்டியுள்ளது.

ஆதியில் ஆடுமாடு மேய்த்து வயிறு பிழைத்து நிலையற்ற வாழ்க்கையை நடத்தி வந்த ஆரியர்கள் கங்கை வெளியில் பரவிக் குடியேறினார்கள்: மாபெரும் அரசுகளை நிறுவினார்கள்: நல்வாழ்வு நடத்தினார்கள். தனி நாகரிகம் ஒன்றை வளர்த்துக் கொண்டார்கள். தம் மொழிவளத்தைப் பெருக்கிக் கொண்டார்கள். அவ்வாறாயின் அவர்கள் தத்தம் வாழ்ந்திருந்த இடங்களைத் துறந்து தெற்கு நோக்கிக் குடிபெயரக் காரணம் என்ன? கங்கைவெளியில் அவர்கட்கு நேர்ந்த இடையூறுகள் யாவை? அந்நியர் படையெடுப்பும் நிகழவில்லை. நாடு கடந்து வேற்று நாட்டுக்குச் செல்லுமளவுக்கு மக்கள் தொகையில் பெருக்கமோ, அதனால் வாழ்க்கை நெருக்கடியோ ஏற்பட வழியில்லை. ஆரியவர்த்தத்தின் தெற்கெல்லை விந்தியமலையென மனுதருமம் கூறுகின்றது. எனவே, நாடு கவரும் எண்ணமும் ஆரியர்களுக்கு இருந்திருக்க முடியாது. ஆய்ந்து பார்க்குமளவில், தம் நாகரிகத்தையும், பண்பாடுகளையும், கொள்கைகளையும் அயலாரிடத்தும் பரவச் செய்ய வேண்டும் என்னும் நோக்கம் ஒன்றே அவர்களை உந்தியிருக்கவேண்டும் என்று கருத இடமுள்ளது. சென்றவிடமெல்லாம் ஆரியருக்கு உண்டியும், உடையும், உறையுளும் ஆட்சிப் பொறுப்பும் வழங்குவதற்குத் தமிழகத்து மன்னர்களும் உடன்பாடாக நின்றனர். அவர்களுடைய நோக்கம் நிறைவேறுவதற்குப் பல வாய்ப்புகள் அவர்களை எதிர்நோக்கி நின்றன.

பௌத்தத் துறவிகளும், சமண முனிவர்களும், தமிழகத்துக்குள் நுழையும்பொழுதே ஆரியரின் குடியேற்றம் பெருமளவில் பரவிவிட்டிருக்கவேண்டும். இத் துறவிகளும், முனிவர்களும், தனித்தனியாகவும், குழுக்களாகவும் , தமிழகம் சேர்ந்து தொடக்கத்தில் தவத்தில் ஈடுபட்டிருந்து, பிறகு தத்தம் சமயக் கோட்பாடுகளை மக்களுக்கு ஓதும் தொழிலில் எழுச்சி பெற்றிருப்பார்கள். தமிழகத்தின் தென்கோடியில் அமைந்துள்ள சில மலைக் குகைகளில் கிமு. 3 ஆம் , 2 ஆம் நூற்றாண்டு பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. பஞ்சபாண்டவ மலையென்றும், பஞ்சபாண்டவப் படுக்கையென்றும் இக் குகைக்குப் பெயர் வழங்குகின்றது. புத்தருக்குப் 'பாண்டவப் பாதாளன்' என்றொரு பெயருமுண்டு. எனவே, இக் குகைகள் பௌத்தவிகாரைகளாக இருந்தன என்பது தெளிவாகின்றது. பௌத்த சமயமானது கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே குண்டூர் மாவட்டத்தில் நுழைந்து நிலைத்துவிட்டதெனப் பட்டி புரோலு கல்வெட்டுகள் கூறும் செய்திகள் மூலம் அறிகின்றோம். அசோகர் காலத்திலேயே காஞ்சிமாநகரில் பௌத்தம் நிலைபெற்றுச் சிறப்புடன் விளங்கிற்று.

மதுரை , திருநெல்வேலி மாவட்டங்களில் கி.மு. மூன்றாம், இரண்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அக் காலத்திலேயே சமண சமயம் தமிழகத்தில் பரவிவிட்டதற்கு இவை சான்று பகர்கின்றன. வடநாட்டில் சந்திரகுப்தர் காலத்தில் மிகக் கொடியதொரு பஞ்சம் ஏற்பட்டதாகவும், அதனால் பத்திரபாகு என்ற சமண முனிவர் ஒருவர், சமணர் பலர் தம்மைப் பின்தொடர, தெற்கு நோக்கி வந்து மைசூரில் குடியேறினார் என்றும் செவிவழிச் சமண வரலாறுகள் கூறுகின்றன. பிறகு விசாகாசாரியார் என்ற திகம்பர முனிவர் ஒருவரும் அவருடைய மாணவரும் சோழ பாண்டி நாடுகளில் பல இடங்கட்கும்வந்து சமண சமயத்தைப் பரப்பலானார்கள்: முதன்முதல் தமிழகத்தை நாடி வந்தவர்களான சமணர்கள தனித்திருந்து தவம் புரிவதையே தம் நோக்கமாகக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்களைத் தொடர்ந்து பிறகு தமிழகத்திற்கு வந்தவர்கள் சமண சமயத்தின் விரிவையே தம் குறிக்கோளாகக் கொண்டனர். அவர்களுள் தலைசிறந்து விளங்கியவர் குந்தா–குந்தாசாரியார் என்ற புகழ் பெற்ற சமண முனிவராவார். தமிழகத்தில் ஆண், பெண் ஆகிய இருபால் துறவிகட்கும் சமணப் பள்ளிகள் அமைக்கப்பட்டிருந்த செய்திகளைச் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் கூறுகின்றன. சமண முனிவர்கள் கருநாடகம் முழுவதும் பரவினார்கள். அப்பகுதியில் கி.பி

வியர்வை சிந்த உழைக்கின்ற
தொழிற்சாலைகளைவிடச்
சிறந்த கோயில்கள்
எங்குமில்லை

- ஜவஹர்லால் நேரு

.3 ஆம் நூற்றாண்டில் கங்கர்களின் ஆட்சி தோன்றுமுன்பே சமண சமயம் வேரூன்றிவிட்டது. இஃதன்றிச் சேர நாட்டிலும், கடற்கரையோரம் சமணர், பௌத்தர் ஆகிய இரு சமயத் துறவிகளும் தம் சமயப் பணிகளைத் தொடங்கிவிட்டனர். இவர்கள் தங்கியிருந்த குகைகள் பல திருவிதாங்கூர்ப் பகுதியில் காணப்படுகின்றன.

சமணமும், பௌத்தமும் மூண்டெழும் காட்டுத் தீயைப் போலத் தமிழகத்தில் பரவியதைக் கண்ட பார்ப்பனரும் தம் வைதிக நெறியைத் தமிழகத்தில் தழைத்தோங்கச் செய்ய வேண்டுமென்று முனைப் புற்றெழுந்தனர். தமிழகத்தை நாடி வந்த ஆரியர்களுள் சிலர் தம்மைப் 'பிருகத்சரணர்' அதாவது, பெரும் பயணர் என்று கூறிக்கொண்டனர். இன்றும் தமிழகத்துப் பிராமணருள் பிருகத்சரணர்கள் பெரும்பகுதியினராகக் காணப்படுகின்றனர்.

தமிழகம் நுழைந்து குடியேறிய ஆரிய மக்கள் காலம், இடம் ஆகிய சூழ்நிலைகளில் சிக்குண்டு தமிழருடன் திருமணத் தொடர்புகள் கொண்டு தாமும் தமிழராகவே மாறிவிட்டனர். தமிழகத்துப் பழக்கவழக்கங்களையும், வாழ்க்கை முறைகளையும் தாமும் மேற்கொண்டனர். தமிழகத்தில் தமிழர் யார், ஆரியர் யார் என்று பிரித்தறியலாகாவண்ணம் ஒரு சமுதாயம் உருவாயிற்று. காலப்போக்கில் தமிழகத்து ஆரியர் தாம் பேசி வந்த சமஸ்கிருதத்தையே மறந்துவிட்டனர்; தமிழையே தம் தாய் மொழியாக ஏற்றுக் கொண்டனர். பிராமணருக்கு நாளடைவில் ஏற்பட்ட ஏற்றத்தையும் செல்வாக்கையும் நோக்கித் தமிழருள் சிலரும் தம்மையும் ஆரியர் என்றே கூறிப் பெருமை ஈட்டிக்கொண்டனர். ஆரியன் என்னும் சொல் 'பெரியோன்' 'ஆசாரியன்', 'அறிவுடையோன்' என்னும் பொருளை ஏற்றது. ஆனால், திவாகரத்துக்குப் பிற்பட்டு எழுந்த பிங்கலந்தை நிகண்டு மட்டும் ஆரியரை மிலேச்சர் என்று கூறுகின்றது. அதற்குத் தக்க காரணம் இருக்க வேண்டும். அஃது ஆய்வுக்குரியதாகும்.

தமிழரின் அயல் தொடர்பை ஆயும்போது கிறித்தவ ஆண்டு தொடங்குவதற்கு முன்பு மூன்று நான்கு நூற்றாண்டுகளில் இப்பாரத நாடு முழுவதிலும் அரசியல் நிலைமை எவ்வாறு அமைந்திருந்தது என்று ஒரு சிறிது அறிந்துகொள்ளுதல் நலமாகும். வடக்கே கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் மகதப் பேரரசராக விளங்கிய நந்தர்கள் தமிழகத்தின்மேல் படையெடுத்ததாகச் சில வரலாறுகள் கூறுகின்றன.

நந்தரையடுத்து மௌரியக்குடி மன்னர்கள் மகதப் பேரரசைக் கைப்பற்றி ஆட்சிபுரியத் தொடங்கினர். அக்காலத்தில் கோசர்கள் தமிழ் மன்னர்மேல் பகைமை பூண்டிருந்தனர். அவர்களுக்கு உடந்தையாக மோரியர் தமிழகத்தின்மேல் படையெடுத்து வந்தனர். ஆனால் மோகூர் மன்னன் பழையன் என்பவன் அவர்களை வெற்றியுடன் எதிர்த்து நின்று புறமுதுகிட்டோடச் செய்தான்: அகநானூற்றுள் மாமூனார் என்ற பழந்தமிழ்ப் புலவர் இச் செய்தியைத் தெரிவிக்கின்றார். இவ் வகப்பாட்டுச் சான்றுகளினின்றும், அசோகரின் கல்வெட்டுச் செய்திகளினின்றும் மோரிய அரசு இக் காலத்திய சென்னைப்பட்டினம் வரையில் பரவியிருந்தது என அறியலாம்.

மோரியரின் தென்னாட்டுப் படையெடுப்பு வெற்றி பயக்கவில்லை . அவர்கள் கலிங்கத்தை தாக்காமல் விட்டதற்குத் தென்னாட்டில் தோன்றிய கடும் எதிர்ப்புதான் காரணம் என்பதில் ஐயமின்று. தமிழகத்தில் மன்னர்களின் கூட்டுறவு ஒன்று கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் நடைபெற்றுவந்ததாக ஹாதீகும்பாக் கல்வெட்டு ஒன்று (கி.மு. 2 ஆம் நூற்றாண்டு) தெரிவிக்கின்றது. மோரிய பரம்பரையினர் ஆட்சியின் தொடக்கத்திலேயே இக் கூட்டுறவு அமைக்கப்பட்டிருந்தது போலும். மோரியரின் படையெடுப்பை இக்கூட்டுறவு கடுமையாய் எதிர்த்து நின்றது. ஆனால், கோசருக்குத் துணையாக மோரியர் தமிழகத்தின் மேல் படையெடுத்து வந்து மோகூர்ப் பழையனால் முறியடிக்கப்பட்ட போது இக் கூட்டுறவு செயற்பட்டு வந்ததா என அறிய முடியவில்லை.

அசோகர் வடக்கே ஆண்ட காலத்திலேயே பௌத்தமும் ஆரியப் பண்பாடுகளும் தமிழகத்தில் ஆங்காங்கு புகுந்து பரவத் தொடங்கினவாகையால் ஆரிய தமிழ் மொழிகளுக்குள் ஏற்பட்டகலப்பினால் பிராகிருதம் என்ற புதுமொழி ஒன்று உருவாயிற்று. இப்போது திராவிட மொழிகள் வழங்கும் இடங்கள் யாவற்றிலும் பிராகிருத மொழி பரவி வந்தது.

பண்டைய தமிழகத்தில் சங்க காலம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது தமிழகத்தின் வடக்கிலும், வடமேற்கிலும் சதவாகனர் செழிப்புடன் விளங்கினர். இவர்கள் அரசியல் அமைப்பிலும் நிருவாகத்திலும் சிறந்து விளங்கியவர்கள். இவர்களுடன் வாணிகம் செய்யவந்த சாகர்களும் கிரேக்கர்களும் இவர்களுடனே தங்கித் தாமும் இவர்களுடைய பழக்கவழக்கங்களை மேற்கொண்டனர்.

– டாக்டர் கே.கே. பிள்ளை எழுதிய
"தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்" நூலிலிருந்து
வெளியீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

• • •

பேரூராட்சிகள்

முதன் முறையாக 28 சிறப்பு நிலை பேரூராட்சிகளிலும், 16 பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலகங்களிலும் கணினி அமைக்கப்பட்டு, பணிகள் கணினி மயமாக்கப் படவுள்ளது. இதற்கு ரூ.44 இலட்சம் நகர்புற வளர்ச்சித் திட்டத்திலிருந்து மானியமாக வழங்கப்படும்.

பேரூராட்சிகளில் பெண்களுக்காக மொத்தம் 725 கழிப்பிடக் கூடங்கள் ரூ.18 கோடியே 72 இலட்சம் செலவில் கட்டப்படும். இதனை பெண்கள் சுயவேலை வாய்ப்புக் குழுக்கள் பராமரிக்கும்.

முதல்முறையாக தமிழ்நாட்டிலேயே நகர கழிவு மேலாண்மை, நகர்புற மக்களின் நல மேலாண்மை, மக்கள் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல், குறைந்த செலவில் நோய் கண்டுபிடிப்பு, பரிசோதனைக் கூடங்கள் அமைத்தல், மனநல காப்பகம் அமைத்தல், சிறு அறுவை சிகிச்சை நிலையங்கள் அமைத்தல், விலங்கு நல மேலாண்மை, சுற்றுச்சூழலை மேம்படுத்துதல் ஆகிய அனைத்தும் கொண்ட திட்டங்களைச் செயற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. இதற்காக ரூ.881 கோடி செலவாகும். இந்த திட்டம் தமிழ்நாடு மூன்றாம் நகர்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும்.

நகராட்சிகள்

தஞ்சை, வாணியம்பாடி, வாலாஜாப்பேட்டை, காரைக்குடி, திண்டுக்கல், ஆரணி, கோபி, இராமநாதபுரம், பரமக்குடி, விருத்தாச்சலம் ஆகிய நகராட்சிகளில் உள்ள நகராட்சி பேருந்து நிலைய ஓடுதளம் சிமெண்ட் ஓடுதளமாக மாற்றப்படும். இதற்கு ரூ. 2 கோடி செலவிடப்படும்.

வில்லிப்புத்தூர், சங்கரன்கோவில், தூத்துக்குடி. நாகர்கோவில், பத்மநாபபுரம் ஆகிய சுற்றுலா நகரங்கள் மேம்பாடு செய்யப்படும்.

செங்கற்பட்டு, ஆலந்தூர் உள்ளிட்ட 32 நகராட்சிகளுக்கு குடிநீர் விநியோகம் மேம்படுத்தப்படும்.

பகுதி 2 திட்டத்தின்படி நகராட்சிகளில் உரக்கிடங்கு அமைக்க (கம்போஸ்டு யார்டு) நிலம் கையகப்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.1 கோடியே 50 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டம் 22 நகராட்சிகளில் செயல்படுத்தப்படும்.

தாய்சேய் நல விடுதிகள் மேம்பாட்டிற்காக ரூ.15 இலட்சம், 7 நகராட்சிகளுக்கு வழங்கப்படும்.

நகர்ப்புற மற்றும் ஊரக வளர்ச்சி

சட்டப்பேரவையில்
மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **சி.துரைராஜ்** அவர்கள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விஞ்ஞான முறையில் குப்பைகளை பயனுள்ளதாக ஆக்க மொபைல் கம்போஸ்டர் மூலமாக குப்பைகளை இறுக்கி, இறுக்கிய குப்பைகளைக் கடலரிப்பு போன்றவற்றை தடுக்க

பயன்படுத்த ரூபாய் 1 கோடி ஒதுக்கி ஆணை யிட்டுள்ளார்கள்.

நகராட்சி பகுதிகளில், குடிசைவாழ் மக்கள் வாழும் குடிசை பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.27 கோடி வழங்கப்படும்.

நகர்புறங்களில் அடித்தளத்திலுள்ள மக்கள் குறிப்பாக பெண்கள் கழிப்பிட வசதி ஏதுமின்றி அல்லல் உறுவதைக் கண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பிடம் கட்ட மாபெரும் திட்டத்தினை செயல்படுத்த ஆணை யிட்டுள்ளார்கள். இந்த திட்டத்தின் கீழ் 102 நகராட்சிகளில் 400 கழிப்பிட கூடங்கள் ரூ.16 கோடி செலவில் கட்டப்படும். இக்கழிப்பிட கூடங்கள் பெண்கள் நலக்குழுக்களால் பராமரிக்கப்படும். இக்கழிவிடங்களில்

பயன்படுத்தப்படும் தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டு, மீண்டும் கழிப்பிடங்களை சுத்தப்படுத்த பயன்படுத்தப்படும். மேலும், நகர் புறங்களில் சுற்றுப்புறச்சூழல் பாதுகாத்தல் மற்றும் சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்த ரூ.2 கோடியே 50 இலட்சம் செலவிடப்படும்.

நகர்புறப் பகுதிகளில் குப்பைகள் இல்லாத பகுதிகள் ஜீரோ கார்பேஜ் ஏரியா ஏற்படுத்தி, வீடுகள்தோறும் குப்பைகளைச் சேகரித்து, பிளாஸ்டிக் தவிர ஏனைய குப்பைக் கூளங்களை விவசாயிகளுக்கு தேவையான கலப்புரமாக அந்தந்த பகுதிகளிலேயே செய்யவும் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் த்ன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக திட்டம் செயல்படுத்தப்படும்.



சென்னை மாநகராட்சி

இத்தருணத்தில், சென்னை மாநகராட்சியின் நிதி நிலைமையினை தெளிவுபடுத்த வேண்டியது என்னுடைய கடமையாகும்.

1996–ஆம் ஆண்டில் மேயராகப் பொறுப்பேற்றுகொண்டவுடன் சென்னை மாநகரத்தை சிங்கார சென்னையாக மாற்றுவேன் என்று சொல்லி பல கோடி ரூபாய்களைப் பல்வேறு அமைப்புகளிடமிருந்து சென்னை மாநகராட்சி கடனாகப் பெற்றுள்ளது.

97–98–ஆம் ஆண்டு பெறப்பட்ட கடன் தொகை ரூபாய் 20.04 கோடிகள் ஆகும்.

98–99–ஆம் ஆண்டு பெறப்பட்ட கடன் தொகை ரூபாய் 35.22 கோடிகள் ஆகும்.

99–2000–ஆம் ஆண்டு பெறப்பட்ட கடன் தொகை ரூபாய் 45.11 கோடிகள் ஆகும்.

2000–01–ஆம் ஆண்டு பெறப்பட்ட கடன் தொகை ரூபாய் 51.34 கோடிகள் ஆகும்.

சென்னை மாநகராட்சியின் வருவாயை பெருக்கி, நலத்திட்டங்களைச் செயல்படுத்தாமல், சென்னை மாநகராட்சி பல கோடி ரூபாய் கடன் வாங்கி மீளாகக் கடனில் மூழ்கியுள்ளது என்பதனை இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த நவம்பர் 2000–ஆம் தேதியிலிருந்து சென்னை மாநகராட்சி ஒப்பந்ததாரர்களுக்கு அவர்கள் செய்த வேலைக்கு பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. எனவே சென்னை மாநகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும், ஒப்பந்ததாரர்கள் அவர்கள் செய்த வேலைகளுக்கு பணம் தரமுடியாத நிலையில், ஒப்பந்ததாரர்கள் எந்த வேலையையும் செய்ய முன்வரவில்லை. 30.6.2001 அன்று ஒப்பந்ததாரர்களுக்கு நிலுவையாக பட்டுவாடா ஆகாமல் இருந்த தொகை ரூ.19 கோடியே 39 இலட்சம் ஆகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகராட்சியின் நிதிநிலைமையை பரிசீலனை செய்து சென்னை மாநகராட்சிக்கு உடனடியாக 33 கோடியே 71 இலட்சம் ரூபாயை ஜுலை மாதத்தில் வழங்கி நிதி நிலைமையை சென்னை மாநகராட்சியின் நிதிநிலைமையை சரிகட்டினார்கள். தமிழகத்தில் நிதிப்பற்றாக் குறையுடைய வேறு எந்த மாநகராட்சிக்கும் செய்யாத மாபெரும் நிதியுதவியினை சென்னை மாநகராட்சிக்கு வழங்கி, சரிந்துவிட்ட சென்னை மாநகராட்சியை சரிசெய்து மீண்டும் வேலைகளைத் தொடங்கி வைத்த பெருமை மாண்புமிகு முதல்வர் அவர்களையே சாரும் என இம்மாமன்றத்திற்கு பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடப்பு ஆண்டில் சென்னை மாநகராட்சியில் 96 இடங்களில் கழிப்பிடக் கூடங்கள் சுமார் ரூ.2 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். இந்த திட்டத்திற்கான மொத்த தொகையையும் மாநில அரசு சென்னை மாநகராட்சிக்கு வழங்கும்.

சென்னைக் குடிநீர் திட்டம்

பருவமழை பொய்த்ததன் காரணமாகவும் நீர் நிர்வாகத்தில் நீண்ட கால தொலை நோக்கு பார்வை இல்லாததாலும், சென்னையில் குடிநீர் தட்டுப்பாடு மிக அதிக அளவில் இருந்தது. அரசு சென்னைக்கு அவசரகால மற்றும் நீண்டகால திட்டங்களைச் செயல்படுத்தி உடனடி குடிநீர் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் லாரிகள் மூலமாகவும், ரெயில்கள் மூலமாகவும் நீண்ட தொலைவில் இருந்து நீர் கொண்டு வருவதை மாமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். இத்தகைய குடிநீர் தட்டுப் பாட்டினை இனி வருங்காலத்தில் சென்னை நகர மக்கள் சந்திக்காமல் இருக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீண்டகால திட்டத்தை வகுத்துள்ளார். அதன் ஒரு பகுதி வீராணத்திலிருந்து சென்னைக்கு குடிநீர்

கொண்டு வரும் சென்னை குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் ஆகும். இந்தத் திட்டம் 18 மாத காலங்களில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.720 கோடி ரூபாய் ஆகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மழை நீர் வீணாக கடலில் சென்று கலப்பதை தவிர்க்க கொசத்தலை ஆறு, கூவம், அடையாறு, பாலாறு ஆகியவற்றில் தடுப்பணைகள், நீர்த்தேக்கங்கள், கசிவு நீர் குளங்கள், மூலம் உபரி நீரை சேகரிப்பது, சென்னை குடிநீர் வழங்க்ல் திட்டத்தின் இரண்டாம் கட்டமாகும். செங்குன்றம், மாதவரம் ஏரி, கொரட்டூர் ஏரி, அம்பத்தூர் ஏரி, இரட்டை ஏரி ஆகியவற்றின் கொள்ளளவை உயர்த்துதல், புதிதாக நீர்தேக்கங்களைக் கட்டுதல், காவிரியாற்றில் இருந்து குழாய்கள் மூலம் நீர் கொண்டு வருதல் ஆகிய திட்டங்களுடன், மழை நீர் சேகரிப்பு திட்டத்தையும் செயற்படுத்தினால் இனி எதிர்வரும் காலங்களில் பெண்கள் குடங்களைத் தூக்கிக் கொண்டு அலையும் நிலை ஏற்படாது என்ற நிலையை ஏற்படுத்துவதே நோக்கமாகும். மேற்படி திட்டத்திற்கான செலவினங்கள் பன்னாட்டு நிதி நிறுவனத்திடமிருந்து பெறப்படும்.

சென்னை மாநகரம் பல குடிநீர் தட்டுப் பாடுகளைக் கடந்த காலங்களில் சந்தித்து உள்ளது. அந்தச் சமயங்களில் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் நீர் நிறுத்தப்பட்டு தொழிற்சாலைகள் மூடும் அபாய நிலையும் இருந்துள்ளது. அரசு தொழிலாளர்களின் நிலைமையை கருத்திற் கொண்டு, தொழிற்சாலைகளுக்கு மாற்று ஏற்பாடாக சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரையும் மற்றும் கொளவாய் ஏரியில் இருந்து நீர் எடுத்து வழங்கியும், தொழிற்சாலைகள் தொடர்ந்து இயங்கும் நிலையை செய்துள்ளது.

கடலோர பகுதிகளில் வாழும் ஏழை மீனவர் சமுதாயத்திற்கு தொடர்ந்து நல்ல குடிநீர் கிடைக்க உவர்நீரை நன்னீராக்கும் குடிநீர் நிலையங்கள் தற்பொழுது அயோத்தியாகுப்பம் மற்றும் இராயபுரத்தில் உள்ள காசிமேடு ஆகிய இரு இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும் உவர்நீரை நன்னீராக்கும் திட்டங்கள் பல பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

கூடுதலாக 2,000 குடிநீர்த் தொட்டிகளைத் தண்ணீர் வராத இடத்திற்கு அமைக்க உத்தரவிட்டு பணிகள் முழுவீச்சுடன் நடைபெற்று வருகின்றன.

இதுதவிர ரூ.76 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை மாநகரின் குடிசைப் பகுதிகளில் குடிநீர் அல்லாத மற்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய 100 இடங்களில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றை நீர் இறைக்கும் மின்சார மோட்டார்களுடன் இணைத்து, தொட்டியின் வழியே குழாய்களின் மூலமாக நீர் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால் 50,000 குடும்பங்கள் பயன்பெறுகின்றன.



தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

நிலுவையில் உள்ள 51 கூட்டுக்குடிநீர் திட்டங்கள் மற்றும் 63 நகரக குடிநீர் திட்டங்களை இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது.

நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள நகரக குடிநீர் திட்டங்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நடப்பு ஆண்டில் 46 பேரூராட்சி மற்றும் நகராட்சிகளில் நகரக குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

1. திருவொற்றியூர்
2. மாதவரம்
3. கத்திவாக்கம்
4. அம்பத்தூர்
5. ஆவடி
6. திண்டிவனம்
7. விழுப்புரம்

8. திருமழிசை

9. சின்னசேக்காடு

10. போரூர்

11. இடைக்கழிநாடு

12. நத்தம்பாக்கம்

13. மேல்விஷாரம்

14. நாட்ரம்பள்ளி

15. ஒடுகத்தூர்

16. ஜோலார்பேட்டை

17. தேசூர்

18. பெரணமல்லூர்

19. பரங்கிப்பேட்டை

20. தடாவூர்

21. தம்மம்பட்டி

22. காடயம்பட்டி

23. இடங்கனசாலை

24. நாமகிரிப்பேட்டை

25. பி.புதுப்பட்டி

26. பி.பி.அக்ரஹாரம்

27. கீழ்குந்தா

28. வரதராஜன்பேட்டை

29. உப்பிடமங்கலம்

30. திருமங்கலம்

31. எழுமலை

32. டி.கல்லுப்பட்டி

33. எ.வெல்லாலப்பட்டி

34. திருநகர்

35. பாளையம்

36. வடமதுரை

37. சேவுகம்பட்டி

38. தாடிக்கொம்பு

39. எரியோடு



40. கெங்குவார்பட்டி

41. மேல சொக்கநாதபுரம்

42. எஸ்.கொடிக்குளம்

43. கழுகுமலை

44. எட்டயபுரம்

45. கயத்தாறு

46. கீழப்பாவூர்

ரூ.350 கோடி மதிப்பீட்டில் 5,800 ஊரக குடியிருப்புகளுக்கு மின்னிறைப்பான் திட்டத்தின் கீழ் குடிநீர் திட்டம் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும்.

இந்த ஆண்டு முதல் ஊரகப் பகுதியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார மையங்களுக்கு வரும் நோயாளிகள் மற்றும் பொதுமக்களின் குடிநீர் தேவையை நிறைவு செய்யும் விதமாக 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் தொட்டிகள் ஆரம்ப சுகாதார மையங்களுக்கு கட்டித்தரப்படும்.

இந்த ஆண்டு 9,016 பள்ளிகளுக்கு குடிநீர் வசதி செய்து தரப்படும். இதற்கு ஆகும் செலவு சுமார் ரூ.9 கோடி ஆகும்.

குடிநீர் தட்டுப்பாடு உள்ள பகுதிகள், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் குடிநீரில் புளோரைட், உவர்தன்மை, இரும்பு சத்து அதிகம் உள்ள பகுதிகளுக்கு குடிப்பதற்கு உகந்த தண்ணீர் வழங்க பன்னாட்டு நிதி உதவியுடன் சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு.

நடப்பாண்டில் ஆய்வுக்காகவும், செயலுக்காகவும் எடுத்துக் கொள்ளப்படவுள்ள சில சிறப்பு குடிநீர்

திட்டங்களை இம்மாமன்றத்திற்கு தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.



தருமபுரி மாவட்ட மக்களின் நீண்டகால கோரிக்கையான ஒக்கேனக்கல் குடிநீர் மற்றும் சுகாதார திட்டம், சுமார் 1,008 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படவுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையிலும் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையிலும் காவேரி ஆற்றை நீராதாரமாக கொண்டு, பன்னாட்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

வறட்சியாலும், தண்ணீரில் உவர்தன்மை அதிகமாக உள்ளதாலும், பல ஆண்டுகளாக குடிப்பதற்கு உகந்த நீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்டு வந்த இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்ட மக்களின் கண்ணீரை துடைக்கும் வகையில், இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் காவேரி ஆற்றை நீராதாரமாக கொண்டு சுமார் ரூ.850 கோடி மதிப்பீட்டில் பன்னாட்டு நிதியுதவியுடன் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்பட உள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.



அவிநாசி அத்திக்கடவு திட்டம் பல ஆண்டுகளாக கோவை மற்றும் ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த அன்னூர், அவினாசி, நம்பியூர் பகுதி மக்களின் நீண்டகால கனவாக உள்ளது. அக்கனவை நனவுபடுத்தும் வகையில் அத்திட்டத்தை செயல்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் வறட்சிக்கு இலக்கான பகுதிகளான டி.கல்லுப்பட்டி,சேடப்பட்டி, உசிலம்பட்டி மற்றும் ஆண்டிப்பட்டி பகுதிகளுக்கு, அப்பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையான ஆண்டிப்பட்டி, சேடப்பட்டி கூட்டுக்குடிநீர் திட்டம் வைகைஆற்றைநீராதாரமாககொண்டு சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

வேலூர் நகருக்கு குடிநீர் வழங்கும் பாலாறு மாசுபட்டு விட்டமையால், நிலவி வரும் கடுமையான குடிநீர் தட்டுப்பாட்டினை நிரந்தரமாக தீர்க்க தீர்வு காணும் வகையில் காவேரி ஆற்றினை நீராதாரமாக கொண்டு ஒரு சிறப்புக் குடிநீர் திட்டத்தை செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்திற்கான ஆய்வு பணிகள் இந்த ஆண்டு தொடங்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தற்பொழுது காணப்படும் வறட்சி நிலைக்கு காரணம் இதுவரையிலும் நாம் பெய்த மழையை நிலத்தில் சேமிக்காததேயாகும். இந்த அரசு மழைநீரை சேமிக்கும் பணிகளை விரைவு படுத்தி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல பணிகளை செய்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய பகுதியில் மழைநீர் சேமிப்பின் அவசியத்தை எடுத்துக்கூறி, மழைநீர் சேமிப்பு முறையை பொதுமக்களுக்கு எடுத்துரைத்து மழைநீரை சேமித்து குடிநீர் தட்டுப்பாட்டை போக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

• • •

'காந்திஜியின் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்' என்ற நூலிலிருந்து

[illegible]

நான் சர்வாதிகாரியானல்...

ஓய்வு பெறும் நோக்குடன் ஒரு சமயம் காந்தியடிகள் மசூரியில் தங்கியிருந்தார். காந்தியடிகள் எங்கு சென்றாலும் பத்திரிகை நிருபர்கள் அவரைப் பின் தொடர்ந்தனர். அப்பொழுது பிரிட்டிஷ் மந்திரி சபைத் தூது கோஷ்டியினர் பாரதத்திற்கு வந்திருந்தனர். இந்திய சுதந்திரத்தைப் பற்றிய பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்தது. பாரதத்தின் சர்வாதிகாரியாக உங்களை ஒரு நாளைக்கு நியமித்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? என, வெளிநாட்டு பத்திரிக்கையின் பிரதிநிதி ஒருவர் அண்ணலிடம் கேட்டார்.

''முதலில் நான் அப்பதவியை ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஆனால் ஒரு நாளைக்காக சர்வாதிகாரி ஆகியே விட்டால், டில்லி வைசிராய் மாளிகையின் குதிரைலாயத்தைப் போன்றிருக்கிற ஹரிஜனங்களின் குடிசைகளைச் சுத்தம் செய்வதில் அந்த நாளை செலவிடுவேன்'' என அண்ணல் காந்தி விடையளித்தார்.

மக்கள் உங்களது சர்வாதிகாரத்தை மேலும் ஒரு நாளைக்கு நீடித்தால் என்ன செய்வீர்கள்? என பத்திரிக்கைப் பிரதிநிதி கேட்டார்.

மறுநாளும் முதல் நாள் செய்த பணியைத் தொடர்ந்து செய்வேன் என மறுமொழி கூறினார் காந்தியடிகள்.

வேர்க்கடலைப் பால் ஆராய்ச்சி

காந்தியடிகள் பால் குடிக்க விரும்பவில்லை. அதிலும் புட்டிப்பால் அவருக்கு அறவே பிடிக்காது. இருந்த போதிலும் அவர் தென்னாப்பிரிக்காவில் போனிக்ஸ் பண்ணையில் இருந்தபோது காபி முதலிய பானங்கள் உபயோகிக்கப்பட்டு வந்தது. அதற்குப்பால் தேவை. ஆனால் போதிய பால் கிடைக்கவில்லை. எனவே புட்டிப் பாலை உபயோகித்து வந்தார்கள்.

''எனக்கு இந்தப் பாலின் உபயோகம் பிடிக்கவில்லை. எனவே, இந்தப் பாலின் உபயோகத்தை நிறுத்திவிட வேண்டும். இதற்குப் பதிலாக பாதாங்கொட்டை பருப்புப் பாலை உபயோகப்படுத்த முடியுமா? முடியும் என எண்ணுகிறேன்'' என ஒரு நாள் காந்தியடிகள் ராவ்ஜீபாய் படேலிடம் கூறினார்.

''நான் செய்து பார்க்கிறேன்'' என ராவ்ஜீபாய் கூறினார்.

ஒருநாள் அவர் பாதாங் கொட்டையைத் தண்ணீரில் அரைத்து அதிலிருந்து பால் தயாரித்துக் காப்பியில் கலந்து கொடுத்தார். காபி குடித்தவர்களுக்கு எத்தகைய வேறுபாடும் தெரியவில்லை.

காந்தியடிகள் மகிழ்ச்சியடைந்தார். ஆனால் இதற்குச் செலவு அதிகம் ஆகும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. இதைப்பற்றிச் சிந்தனை செய்தபோது அவருக்கு ஒரு உபாயம் தோன்றியது. அவர் ராவ்ஜீபாயிடம், ''பாதாம் பருப்பிலிருந்து பால் தயாரித்துக் காப்பிக்கு உபயோகிப்பதற்கு அதிகம் செலவாகும், அதற்குப் பதிலாக வேர்க்கடலைப் பருப்பிலிருந்து பால் தயாரித்து ஆராய்ச்சி செய்து பார்'' எனக் கூறினார்.

மறுநாள் ராவ்ஜீபாய் அவ்வாறே செய்தார். அன்றும் காப்பி குடித்தவர்களுக்கு எத்தகைய வேறுபாடும் தெரியவில்லை. எனவே



காந்தியடிகள் வாழ்வில்....



அன்றிலிருந்து 'போனிக்ஸ்' பண்ணையில் பாலுக்கு விடுதலை கிடைத்துவிட்டது.

எனக்கு பணத்தைப் பற்றிய கவலை இல்லை

காந்தியடிகளின் கட்டளைப் படி கோகலேஜீயின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது சொற்பொழிவுகள், கட்டுரைகள் ஆகியவற்றின் தொகுப்பைக் குஜராத்தி மொழியில் பிரசுரிப்பது என ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அதைத் தொகுக்கும் பணி திரு நரஹரிதுவாரகாதாஸ் பரீக் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மொழிபெயர்ப்பைப் படிக்கும் போது மூலக்கட்டுரையைப் படிப்பது போன்ற உணர்வு படிப்பவருக்கு ஏற்பட வேண்டும். அத்தகையவர்களிடம் மொழி பெயர்ப்புப் பணி ஒப்படைக்கப் பட்டிருக்க வேண்டும்.

மொழிபெயர்ப்பு நரஹரி தாஸூக்குப் பிடிக்கவில்லை. பல ஆசிரியர்கள் அதைப் புகழ்ந்த காரணத்தால் அப்புத்தகம் அச்சிடுவதற்காகக் கொடுக்கப் பட்டது. புத்தகம் முடியும் தறுவாயிலிருந்தது. அதை நரஹரிதாஸ் காந்தியடிகளிடம் காட்டி 'இதற்கு' நீங்களே முன்னுரை எழுதித்தர வேண்டும்' எனக் கேட்டார்.

மறுநாள் காந்தியடிகள் நரஹரிதாஸைக் கூப்பிட்டு, ''இந்த மொழிபெயர்ப்பு சரியில்லை; வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. இதை யார் புரிந்து கொள்ளுவார்கள்? இதை நீங்கள் எப்படி அச்சேற்ற அனுமதித்தீர்கள்?" என்று கடிந்து கொண்டார்.

நரஹரிதாஸ் காந்தியடிகளிடம் உண்மை நிலைமையைக் கூறினார். மற்ற ஆசிரியர்கள் புகழ்ந்த காரணத்தால் எனது சொந்தக் கருத்தை வெளியிட முடியவில்லை. ''பம்பாய் சர்வகலாசாலையின் முந்தைய பட்டமளிப்பு விழாவின் போது அப்பொழுது தற்காலிகக் கவர்னராக இருந்த லார்டு வெலிங்டன் இந்தியப் பட்டதாரி களிடையே ''இல்லை என்று சொல்லும் துணிவு இல்லை" என தனது உரையில் குறிப்பிட்டி ருந்தார். இது உண்மைதானே. இந்த மொழிபெயர்ப்பு உங்களுக்குப் பிடிக்கவில்லை யெனில், சரியாக இல்லை என்பதை தெளிவாக நீங்கள் சொல்லியிருக்க வேண்டும். இதைத்தான் நான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன். நான் உங்களிடம் தொகுத்து வெளியிடும் ஆசிரியப் பணியை ஒப்படைத்திருந்தேன். நீங்கள் அக்கடமையைச் சரிவர நிறைவேற்றவில்லை. சரி இருக்கட்டும். புத்தகம் முழுவதும் அச்சாகி விட்டதா? அச்சாகி இருந்தாலும் இதை நான் நிராகரிக்கத்தான் வேண்டி யிருக்கிறது" என்று காந்தியடிகள் கூறினார்.

''இதுவரை எழுநூறு ரூபாய் செலவாகியிருக்குமே, அவ்வளவு பணமும் வீணாகவல்லவா போய்விடும்?" என நரஹரிதாஸ் கூறினார்.

''மேற்கொண்டு பைண்டு செய்வதின் மூலம் இன்னும் அதிகப் பணத்தை வீணாக்குவதா என்ன? எழுநூறு ரூபாய் என்ன, ஏழாயிரம் ரூபாய் வீணானாலும் வீணாகட்டும்; இத்தகையப் புத்தகத்தை மக்களின் முன் ஏன் வைக்க வேண்டும். எனக்கு பணத்தைவிட கோகலேயின் பிறந்தநாளுக்கு இன்னும் இரண்டு மாத அவகாசம்தானே

இருக்கிறது என்பதே கவலை யளிக்கிறது" என்று காந்தியடிகள் கூறினார்.

ஏழைகளின் பிரதிநிதிக்கு இதுவே எல்லாவற்றிலும் தகுதியானது

வட்டமேஜை மாநாட்டிற்காகக் காந்தியடிகள் கப்பலில் இலண்டன் சென்றிருந்தார். கப்பலை அடைந்ததும் முதன் முதலில் சாமான்களைச் சரிபார்த்துக் கொண்டார். அவரது கூர்மையான பார்வையிலிருந்து ஒன்றும் தப்பவில்லை. சாமான்கள் குவிந்திருப்பதைப் பார்த்து உள்ளம் நொந்தார். 'நாம் நல்ல வேளையாக இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்கிறோம். கீழ்வகுப்புப் பிரயாணிகளாக இருந்தால் இத்தனை சாமான்களை எங்கே வைப்பது?' எனக் கேட்டார்.

அதற்கு திரு. மகாதேவ் தேசாய், ''குறைந்த அவகாசத்தில் பிரயாணத்திற்குத் தயாராக வேண்டியிருந்தது. இந்தப் பெட்டிகள் யாவற்றையும் இரவலாக வாங்கியுள்ளேன். திரும்பி வந்ததும் யாவற்றையும் திருப்பிக் கொடுத்துவிடுவேன். இவை தவிர அநேக நண்பர்கள் தங்களது பொருள்களை நம்மிடம் கொடுத்துவிட்டார்கள்; நம்மால் மறுக்க முடியவில்லை, தெரிந்த நண்பர்கள் சிலர் தேவையான சில பொருட்களைத் தயாராக வைத்திருக்கும்படி ஆலோசனை கூறினார்கள். இவ்வாறாக நிறையச் சாமான்கள் சேர்ந்து விட்டன' என பதில் கூறினார்.

இதைப்போன்று கூறப்பட்ட பல சமாதானங்களைக் கேட்டு காந்தியடிகள் அதிர்ச்சியுற்று, ''தயாரிப்பிற்காக நேரம் கிடைக்கவில்லையெனச் சாக்குச் சொல்வது சரியல்ல, நண்பர்களிடம் இப்பொருட்கள் எங்களுக்குத் தேவையில்லை யெனத் தெரிவித்திருக்கலாம். ஆனால், நீங்களோ இலண்டனில் ஐந்து ஆண்டு தங்குபவரைப் போன்று கிடைத்ததையெல்லாம் வாங்கி வைத்துள்ளீர்கள். பெட்டிகளைத் திருப்பிக் கொடுத்து விடுவீர்கள்; ஆனால் 'ஏழ்மை', 'சேர்த்து வைத்தல்' பற்றி தங்களது கருத்து என்ன? ஒன்று நீங்கள் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளுகிறீர்கள், அல்லது என்னை ஏமாற்ற விரும்புகிறீர்கள். நீங்கள் நண்பர்களின் ஆலோசனைகளைக் கேட்டுள்ளீர்கள். அவர்களுடனிருந்திருக்க வேண்டும். இங்கு என்னுடன் இருப்பதால் எனது ஆலோசனைப்படி நடக்க வேண்டும்'' என்று கூறி விட்டார்.

எல்லாப் பொருள்களையும் திருப்பிக் கொடுத்து விடுவது என தீர்மானிக்கப்பட்டது. இப்பணியில் மூன்று நாட்கள் கழிந்து விட்டன. நான்காவது நாள் எஞ்சிய சாமான்களடங்கிய ஜாபிதாவைக் காந்தியடிகளிடம் காட்டியபோது, ''உங்களது ஜாபிதாவில் தலையிட

நான் விரும்பவில்லை. சிம்லா தெருக்களில் நீங்கள் போவதைப் போன்று இலண்டன் தெருக்களிலும் நடந்து செல்ல வேண்டும் என நான் விரும்புகிறேன். உங்களிடம் போதிய கம்பளி உடைகள் இல்லையென்று தெரிந்தால் வேண்டிய கம்பளி கிடைப்பதற்கு ஆவன செய்வேன். அங்குள்ளவர்கள் நம்மிடம் அழகான பெட்டிகளைப் பார்க்கும் போது வருத்தப்படுவார்கள். இந்தியாவில் கதர்ப்பையை வைத்துக் கொண்டே சமாளிக்க முடியுமெனில் இங்கிலாந்திலும் ஏன் சமாளிக்கமுடியாது? சாதாரண நிலையில் நாம் எந்தப் பொருளை வைத்துக்கொள்ள முடியாதோ அவற்றை நம்மிடம் வைத்துக்கொள்ளவே கூடாது'' என காந்தியடிகள் கூறினார்.

இதைக்கேட்டு தொலை நோக்கி, பிரயாணக் கட்டில் ஆகியவற்றை திருப்பிக் கொடுக்க வேண்டியிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் காந்தியடிகள் நகைப்பூட்டுவதிலும் தவறவில்லை. இந்த விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, சூயேப் குரேஷி காந்தியடிகளைச் சந்திக்க வந்தார். அவரிடம், ''சூயேப், போபால் நவாபின் கூட்டத்தினரில் யாராவது ஒருவர் காஷ்மீர் சால்வை வாங்க விரும்பினால் என்னிடம் சொல்லுங்கள். எனக்கு நண்பர்கள் பல சால்வைகள் கொடுத்துள்ளனர். அவற்றில் ஒன்று மோதிரத்திற்குள் செல்லும் அளவிற்கு அவ்வளவு மெல்லியதாக இருக்கிறது. கோடிக்கணக்கான இந்திய மக்களின் பிரதிநிதியாக வட்ட மேஜை மாநாட்டிற்குச் செல்லும் போது இந்தச் சால்வையைப் போர்த்திக் கொண்டு செல்ல வேண்டும் என நண்பர்கள் நினைத்தனர் போலும். ராணி அம்மையார் இந்த விலை உயர்ந்த சால்வையைப் பெற்றுக்கொண்டு, அதற்குப் பதிலாக ஏழைகளுக்காகப் பயன்படுத்துவதற்குப் பணம் கொடுக்கட்டும். ஏழைகளின் பிரதிநிதிக்கு இதுவே எல்லாவற்றிலும் தகுதியானது'' என்றார் காந்தியடிகள்.



சார்லி உங்களது நிகழ்ச்சி எவ்வாறு இருந்தது?

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது கோபால கிருஷ்ணகோகலே, ஆண்ட்ரூஸைக் காந்தியடிகளிடம் அனுப்பி வைத்தார். காந்தியடிகள் தனது கருத்தில் சிறிது மாறுதல் செய்ய வேண்டும் என ஆண்ட்ரூஸ் விரும்பினார். அப்பாவி ஆண்ட்ரூஸுக்கு இப்பணியில் சிறிதளவு வெற்றி கூடக் கிடைக்கவில்லை. மாறாக ஆண்ட்ரூஸ் தனது கருத்துக்களை மாற்றிக் கொண்டு அண்ணலின் சீடரானார்.

ஒரு நாள் காலை ஆண்ட்ரூஸிடம் காந்தியடிகளுக்கு ஒரு வேலை இருந்தது. எங்கு தேடியும் கிடைக்கவில்லை. அப்பொழுது ஒருவர் வந்து, 'இன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் ஆண்ட்ரூஸ் மாதா கோவிலுக்குச் சென்றிருக்கிறார். இன்று அங்கு அவர் வழிபாடு நடத்திச் சொற்பொழிவாற்றுவார்'' எனக் கூறினார்.

''சரி, நாமும் அங்கு சென்று அவரின் சொற்பொழிவைக் கேட்போம்'' எனக் காந்தியடிகள் கூறினார்.

காந்தியடிகள் மாதாக் கோவிலுக்குச் சென்றார். அந்தக் கோவிலில் ஆங்கிலேயர்கள் மட்டும் அனுமதிக்கப் பட்டார்கள். காந்தியடிகள் கருப்பராக இருந்த காரணத்தால் மாதா கோவிலில் நுழைய அனுமதிக்கப்படாமல் தடுக்கப்பட்டார். அங்கிருந்தவர், நீக்ரோக்களுக்கென தனியாக மாதா கோவில் இருக்கிறது. விரும்பினால் அங்கு செல்லலாம் எனக் கூறினார்.

ஆண்ட்ரூஸின் சொற்பொழிவைக் கேட்கவே இங்கு வந்தேன். எனவே வேறு மாதாகோவிலுக்குப் போவது வீணே எனக் காந்தியடிகள் பதிலளித்தார்.

காந்தியடிகள் அங்கிருந்து திரும்பி வந்து விட்டார். சிறிது நேரத்தில் ஆண்ட்ரூஸும் திரும்பிவந்தார். அவரிடம் 'இன்று உங்களது நிகழ்ச்சி எவ்வாறு இருந்தது, நான் உங்களது சொற்பொழிவைக் கேட்க வந்தேன். கருப்பர் என்ற காரணத்தால் உள்ளே நுழைய அனுமதிக்கப்படவில்லை' என்று காந்தியடிகள் கூறினார்.

இதைக்கேட்டு ஆண்ட்ரூஸின் கண்களில் நீர் மல்கியது. அவர் காந்தியடிகளின் கைகளைத் தனது கைகளில் வைத்துக் கொண்டு, ''மோஹன், இது எவ்வளவு வெட்கக் கேடானது, இன்று எனது சொற்பொழிவின் முக்கிய பாத்திரம் நீங்களே. நான் மோஹன் தாஸ் கரம்சந்த் காந்தியைப் பற்றித்தான் பேசினேன். அனைவரும் ஒன்றிய மனத்துடன் கேட்டார்கள். ஆனால், நீங்கள் உள்ளே வருவதைத் தடை செய்து விட்டார்களே'' என வருத்தத்துடன் கூறினார்.

சிற்றூராட்சித் தலைவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கம்

தமிழ்நாட்டில் 16.10.2001 மற்றும் 18.10.2001 ஆகிய இரண்டு தினங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இரண்டு கட்டமாக தேர்தல் நடைபெற்று புதிதாக பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஜனநாயக முறையில் பரவலாக்கப்பட்ட சிற்றூராட்சி அமைப்புகள் திறம்பட செயல்பட தேர்ந்தெடுக்கப்பட்ட சிற்றூராட்சித் தலைவர்களுக்கு சிற்றூராட்சியின் நடைமுறை விதிகளை நன்கு அறிந்த வல்லுநர்களைக் கொண்டு 07.11.2001 அன்று சென்னை நீங்கலாக 29 மாவட்ட தலைநகரங்களிலும் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தலைமையில் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெறும்.

விழிப்புணர்வுக் கருத்தரங்கத்தில் ஊராட்சிகளின் நடைமுறை விதிமுறைகள், தலைமைத்துவ முக்கியத்துவம், குணநலன்கள், மனோபாவம், செயல்திறன், ஜனநாயகத்தை பரவலாக்கும் விதம், வளர்ச்சிப் பணிகளில் மக்கள் பிரதிநிதிகளின் பங்கேற்பு, மக்கள் பங்கேற்புடன் திட்டம் தயாரித்தல், மனிதவள மேம்பாடு, பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி, ஒளிமறைவு இல்லாத நிர்வாகம், இயற்கை வளம் மற்றும் பொதுச் சொத்துக்கள் பாதுகாத்தலும் - பராமரித்தலும், தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர்கள் மற்றும் பெண்களின் மேம்பாடு, பஞ்சாயத்தை ஒரு வளர்ச்சி இயக்கமாக மாற்றுவதற்கான வழிவகைகள் மற்றும் தன்னாட்சிப் பெற்ற அமைப்பாக உருவாக்குதல், மூன்றடுக்கு பஞ்சாயத்து அமைப்பு முறை மத்திய மாநில அரசுக்கு உள்ள தொடர்புகளாக செயல்படுதல், நிதி ஆதாரங்களைப் பெருக்குதல், கிராம சபையின் முக்கியத்துவம், தெரு விளக்கு, குடிநீர் விநியோகம், சாலை மேம்பாடு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல், அரசின் பல்வேறு துறையின் கிராம நலத் திட்டங்கள் ஆகியவைகள் குறித்து விவாதிக்கப்படும்.

அனைத்து சிற்றூராட்சித் தலைவர்களும் இந்த நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ள இக்கருத்தரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து சிற்றூராட்சித் தலைவர்களும் தவறாது கலந்துகொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



கருவிலிருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என்பதை அறியத் தடை

அரசு அங்கீகாரம் பெறாமல் ஸ்கேன் மையங்கள் செயல்படுவது, ஸ்கேன் கருவிகளைப் பயன்படுத்தி கருவிலிருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என தெரிவிப்பது சட்டப்படி குற்றங்களாகும். இத்தகைய குற்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க தமிழக அரசு தீர்மானித்துள்ளது. இத்தகைய குற்ற செயல்களில் ஈடுபடுவோர் பற்றி பொதுமக்கள் கீழ்க்காணும் அமலாக்க அலுவலர்களிடம் தகவல் தெரிவிக்கலாம்.

1. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை-6
2. மாவட்ட இணை இயக்குநர், சுகாதார நலப்பணிகள், அனைத்து மாவட்டங்கள்
3. மருத்துவ அலுவலர், அனைத்து தாலுக்கா மருத்துவமனைகள்.

வணிக வரித்துறை செயல் முறை

*வணிக வரித்துறை செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் **3.10.2001** அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர், மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், நிதித் துறை செயலாளர், வணிகவரித் துறை செயலாளர் மற்றும் வணிக வரி ஆணையர் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன:

1. அரசு மட்டத்தில் அடிக்கடி ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, மேல் முறையீட்டு மன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளை, விரைந்து முடிக்கவும், தடையாணை உள்ள இனங்களில் அவற்றை விலக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

2. வரி விதிப்பு இனங்களில் அதிக எண்ணிக்கையில் மேல் முறையீடு வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதை தவிர்ப்பதற்கும், மிகச் சிறந்த தீர்ப்பின் அடிப்படையிலான வரிவிதிப்பு ஆணைகளைப் பிறப்பிப்பதற்கான வழிமுறைகளை நிர்ணயிப்பதற்கும், விற்பனை வரி சட்டத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்வது குறித்து பரிந்துரை செய்யவும் ஒரு குழு அமைக்கப்படும்.

3. வணிக வரி கட்ட தவறியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

4. வழக்கமான நடைமுறைகளில் மாற்றம் கொண்டுவந்து பதிவு செய்யும் நடைமுறையை எளிமையாக்குவதற்காக, தெருவாரியான கணக்கெடுப்பு மேற்கொள்வது என்றும், படிவம் 20, வழங்குவது குறித்த நடைமுறைகளை மறு ஆய்வு செய்வதென்றும் முடிவு எடுக்கப்பட்டது.

5. வணிகவரித் துறை சோதனைச் சாவடிகளின் செயலாக்கங்கள் சீர்படுத்தப்படும்.

6. வணிகர்கள் தங்களது குறைகளைத் தெரிவிக்க உதவும் வகையில் அனைத்து வணிக வரி அலுவலர் (CTO) அலுவலகங்களில், முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகள் வைக்க முடிவு செய்யப்பட்டது.

விபத்துக்குள்ளானவர்களுக்கு உதவி

திருநெல்வேலி மாவட்டம், தாழையூத்து அருகே கரையிருப்பு என்ற கிராமத்தில் 26-10-2001 அன்று ஏற்பட்ட இடி மின்னல், மழையின் போது அறுவடை பணியில் ஈடுபட்டிருந்த மூன்று நபர்கள் இடி மின்னல் தாக்கி மரணமடைந்தனர். 5 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த 5 நபர்களும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். இச்செய்தியை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு ஓ.பன்னீர்செல்வம் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டதோடு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறந்த சிகிச்சை அளிக்க வேண்டுமென்றும் உத்திரவிட்டுள்ளார்.

இவ்விபத்தில் மரணமடைந்தவர்களின் குடும்பம், ஒவ்வொன்றுக்கும் உடனடியாக தமிழக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.50,000, பலத்த காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.15,000/-ம் வழங்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

• • •

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் - குலசேகரப்பட்டிணம் ரோடில் கந்தசாமிபுரம் என்ற ஊர் அருகே திருச்செந்தூரில் இருந்த தசரா திருவிழா முடிந்து 27.10.2001 அன்று ஆட்களை ஏற்றி குலசேகரப்பட்டிணத்தை நோக்கிச் சென்ற டெம்போ மினி லாரியும், குலசேரகப்பட்டிணம் - திருச்செந்தூர் நோக்கி வந்த மகேந்திரா வேனும் எதிரெதிரே மோதிக்கொண்டதில் மினி லாரியில் பயணம் செய்த 2 பெண்கள், 1 பெண் குழந்தை உட்பட 8 பேர் மரணமடைந்துள்ளனர். 22 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் 10 பேர் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், 12 பேர் திருச்செந்தூர் அரசு மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டதோடு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்குச் சிறந்த சிகிச்சை அளிக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டுள்ளார்.

இவ்விபத்தில் மரணமடைந்தவர்களின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் உடனடியாக தமிழக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.50,000/-, பலத்த காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.15,000/- மற்றும் சாதாரண காயமுற்றவர்களுக்கு தலா ரூ.6,000/- வழங்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தேவ.ஜோதி ஜெகராஜன், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை தமிழரக அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906

உங்களின் நீண்டநாள்
கனவை நனவாக்கும்
புதிய திட்டம்.

கோ-ஆப்டெக்ஸின்

பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.

உங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, **"பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்"**.

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!

தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை !

வ.எண் 1	மாதச் சந்தா ரூ. 2	அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை ரூ. 3	கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 4	கூடுதல் தொகை (3+4) ரூ. 5	அரசு தள்ளுபடி * ரூ. 6	அங்கத்தினர்களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 7
1.	300	2,700	300	3,000	750	3,750
2.	400	3,600	400	4,000	1,000	5,000
3.	500	4,500	500	5,000	1,250	6,250
4.	600	5,400	600	6,000	1,500	7,500
5.	700	6,300	700	7,000	1,750	8,750
6.	1,000	9,000	1,000	10,000	2,500	12,500

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள 20%க்கு ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு காலத்தில் அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பட்டர்பிளை, குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - கோயம்புத்தூர், கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெக்ஸ் பவளம் - ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்டெக்ஸ் பட்டு மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் மற்றும் இதர பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

இன்றே இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

பாரம்பரியத்தின் பெருமை. காலத்திற்கேற்ற ரசனை.

CMYK

இன்றைய மழைநீர் சேகரிப்பு!
நாளைய குடிநீர் பாதுகாப்பு!

தமிழரசு
R.N.I.No.21446/70
Licence No.G/TN/CPMG/190,WPP-130